
டிசம்பர் 1995

www.tamilarangam.net

# எரிமலை




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# அன்புடன் ஆசிரியருக்கு!




## அக்கறைப் பூக்கள்

நட்பின் எரிமலைக்கு வணக்கங்கள்!

எரிமலையை தொடர்ந்து வாசித்து வரும் பல்லாயிரக்கணக்கான வாசகர்களில் நானும் ஒருவன்.

தமிழீழத்தை அங்கீகரிக்கக் கோரி பல்வேறு நாடுகளில் நடந்த எழுச்சி மிக்க ஊர்வலங்களை தங்கள் ஜுலை மாத இதழில் கண்டேன். தாய் தமிழகம் தலைகவிழ்ந்து இருக்கின்றது.

வானம் எம் வசம் என்கின்ற நூலில் இருந்து கவிதைகள் ஒவ்வொன்றும் போர் செய்தியினையும் போரிட வேண்டும் என்ற எண்ணத்தினையும் மக்கள் மனதில் பதிவு செய்வதாக இருக்கின்றது.

மார்ச் இதழ் தாமதமாய் கிடைக்கப் பெற்றேன். உலைக்களம் வியாசன் என்ன அற்புதமான கவிதை.

"கசெற்றா லுபுஸ்கா
சாறே நைச" நீங்கள் வராது விட்டாலும் பரவாயில்லை; இங்கிருந்து வாருங்கள் என்று எவருக்கும் எழுதாதீர்; கோடி புண்ணியம் உங்களை தேடி வரட்டும். இது மனதின் ஆழத்தில் இருந்து கண்ணீரை வரவழைத்தது.

கல்லறையில் அல்லது பாசறையில் சந்திப்போம். இருப்பினும் மறவோம் இலக்கினில் தவறோம். லெப். கேணல் குணா - நாங்கள் அவனோடு இருக்க விரும்பினோம் என்பதை விடவும் அவனைப்போல இருக்க விரும்பினோம். நான் சாகலாம், நீ சாகலாம், ஆனால் நாங்கள் சாகக்கூடாது. இவை மனதில் தைத்தவை.

உறுதியின் உறைவிடமே வணங்குகின்றோம். தேனில் எந்தப் பகுதி இனிப்பு என்று கேட்டால் என்ன சொல்வது? அது போல எரிமலை ஒவ்வொரு பக்கமும் அருமையான செய்திகளே.

போர்க்களத்தில் சிறு ஆயுதம் கூட வலிமையானதே. எரிமலையின் பங்கு எழுச்சிமிக்கதே!

பழனிவேல்
தமிழ்நாடு.

★★★

எரிமலை ஆசிரியர் அவர்கட்கு,
அன்பார்ந்த ஐயா!

எனது அன்பான தமிழ் வணக்கம். நான் எங்கள் சுற்றுச் சூழல் பாதுகாப்புக் குழுவின் சார்பில், ஐ.நா.வின் அகதிகள் பிரிவுத்தலைவர் சம்சுல்பாரி அழைப்பிற்கிணங்க ஐதராபாத்தில் நடந்த அகதிகள் பிரச்சினை குறித்த கருத்தரங்கில் கலந்து கொண்டேன். அதில் இலங்கை அகதிகள் இந்தியாவில் நடத்தப்படும் நிலைகுறித்தும், தமிழகத்தில் "சிறப்பு முகாம்" என்ற பெயரில நடத்தப்படும் தமிழின சித்திரவதை குறித்தும் விரிவான விளக்கம் கொடுத்ததில் என் பங்கு முக்கியமானது. மேலும் தொடர் நடவடிக்கையாக, தமிழகத்தில் உள்ள அகதி முகாம்களை ஆய்வு செய்ய ஒரு குழு நியமிக்கவும் அது தொடர்பாக இலங்கைத் தமிழ் அகதிகள் குறித்த விரிந்த பேரணி நடத்தவும் (ஐ. நா. அமைப்பின் உதவியுடன்) விரைவான நடவடிக்கை எடுத்து வருகிறோம்.

எனது பங்கேற்புக்குப்பின் இந்தியப் பத்திரிகைகளில் தமிழக அகதி முகாம்களில் இலங்கைத்தமிழர் அவல நிலை குறித்த கட்டுரை வெளியாகியுள்ளது. அதில் ஒன்று யூலை 95 எரிமலை இதழிலும் வெளியாகியுள்ளது. தொடர்ந்து ஒவ்வொரு மாதமும் இரு இதழ்கள் அனுப்பிவைக்கக் கேட்டுக்கொள்கிறேன்.

இத்துடன் நாங்கள் வெளியிடும் "கரூர் நுகர்வோர் உரிமைக்குரல்" தமிழர் அவலநிலை குறித்த கட்டுரையைப் பிரசுரம் செய்துள்ளதை தங்கள் பார்வைக்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

தோழமையுள்ள
இ. நா. சுப்பிரமணியன்

★★★

ஆசிரியர் அவர்களுக்கு!

ஈழத்தமிழரின் உணர்வு பூர்வமான தாயகமீட்புப் போர் பற்றியும், தமிழகத்தில் தமிழர்கள் ஆபாச சினிமாவில் சீரழிந்து கிடப்பதையும் நன்கு புலப்படுத்தி இருந்தீர்கள்.

தமிழக அரசியலில் பலர் தமிழர் அல்லாதவர்கள்; சிலர் தமிழர்களாய் இருந்தும் ஓட்டுக்காக பிழைப்பு நடத்துபவர்கள், திராவிடன் திராவிடன் என தமிழர்களை ஏமாற்றி வருபவர்கள்.

தமிழகத்தில் 'தமிழன்' என்ற ஒற்றுமை ஏற்படும் போதெல்லாம் மத்திய, மாநில அரசியல்வாதிகள் 'சாதி'க் கலவரத்தை ஏற்படுத்தி தமிழர்களை அழித்து வருகின்றனர்.

வெளிமாநிலங்களில் தமிழர்கள் விரட்டி அடிக்கப்பட்டு உள்நாட்டிலேயே அகதியாய் தஞ்சம்புகும் அவலம் தமிழனைத் தவிர வேறு எந்த இனத்திற்கும் ஏற்பட்டதில்லை.

ஈழத் தமிழர்களையும், தமிழக மீனவர்களையும் ஈவு இரக்கமின்றி படுகொலைசெய்யும் சிங்கள இனவெறிக்கு ஆயுத உதவி வழங்கும் இந்திய அரசு மாறும் வரை தமிழர்களுக்குச் சுதந்திரம் இல்லை.

புகழேந்தி
சென்னை, தமிழ்நாடு.

★★★

வெல்லட்டும் புலிப்படை மலரட்டும் தமிழீழம்
ஆசியருக்கு வணக்கம்!

ஆகஸ்ட் 95 இதழில் புலிப்பாய்ச்சலும் பின்னோக்கிப் பாய்ந்த இராணுவமும் என்ற கட்டுரையைப் படித்த போது எம்மையும் அறியாமல் கண்ணீர் சிந்தினோம். அழுகையும் விம்மலும் எங்களை துயரத்தில் ஆழ்த்தி விட்டன. சிங்கள கொடியவர்களின் கோரமான தாக்குதலில் மரணத்தை தழுவிய குழந்தைகளையும், அப்பாவி மக்களையும் நினைத்து வேதனை அடைகின்றோம். சந்திரிகா என்ற சிங்களத்தியின் சிறுநரி எண்ணத்தைப் புரிந்து கொண்டு போர் வியூகம் அமைத்து போராடி வரும் தமிழரின் விடிவெள்ளி, தலைவர் பிரபாவும் அவரது பின்னால் அணிவகுத்து நிற்கும் தம்பி தங்கைகளினதும் மன உறுதியைப் பாராட்டிட எங்களுக்கு வார்த்தைகள் வராமல் 'வீரவணக்கம்' செலுத்தி தென் திசையை நோக்கி வணங்குகின்றோம்.

வீரமணி
பாணாவரம்,
தமிழ்நாடு.

★★★

அன்புடன் எரிமலை ஆசிரியர் அவர்கட்கு,

கடைசியாக செப்டம்பர் 95-ல் சந்திரிகாவின் கோரப்பசிக்கு பலியான அந்தப் பச்சிளங் குழந்தைகளை முன் அட்டையில் போட்டு நம்மை கலங்க வைத்துவிட்டீர்கள். மேலும் உள்ளே பல அம்சங்கள் இருப்பினும் "தேசத்தின் இதயத்தில் நடந்த பெருஞ்சமர்" என்ற கட்டுரை என் போன்றோருக்கு மிகவும் ஆறுதலைக் கொடுத்திருக்கும். பெண்கள் அணியில் துணிச்சல் இல்லையா? அல்லது தமிழனுக்கு என்றொரு வீரவரலாறு இல்லையா? இப்படிப் பலவற்றை எண்ணி கலங்கிய நான் இக்கட்டுரையால் மிகுந்த ஆறுதலும், ஆனந்தமும் அடைகிறேன். நன்றி எரிமலையே. நம்மை ஆறுதல் படுத்தியதற்கு. துரோகிகள் நம் நாட்டுக்கு உதவி செய்ய வேண்டாம்; உபத்திரம் செய்யாமலிருந்தால் போதும். இப்படிப்பட்டவர்கள் தண்டிக்கப்படவேண்டியவர்களே. எரிமலை நம் நெஞ்சை குளிர்மைப்படுத்தும் பனி மழை போன்றது. மேலும் அடுத்த எரிமலையோடு தொடர....

அன்பு வாசகி
ந. கேதீஸ்வரி
குவைத்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



மனசுக்குள் ஆயிரம் மத்தாப்பு விரித்த
ஆனந்த வாழ்வே!
மீண்டும் என்னில் படர்ந்து கொள்வாய்
என்று என்னைத் துறந்து போனாயோ
அன்றிலிருந்து நான் அனாதையானேன்.
கண்திறந்து பாராய்
அழகுக் கோலம் வற்றிய சடமாய்,
உயிர் சுமந்த கூடாய் உலவுகின்றேன்.
எனக்கென் ஊர்வேண்டும்.
வீடும், வயல்வெளியும் வேண்டும்.
கந்தகக்கலப்பில்லாத காற்று வேண்டும்.
எந்தை எனக்களித்த
முத்துமாரியம்மனின் பத்தாம் திருவிழா வேண்டும்.
ஊர்கூடி உட்கார்ந்து பார்க்கும்
கூத்தும்; கும்மாளமும் வேண்டும்.
பசிக்கு ஏதேனும் கடித்து
படுத்துறங்கவா நான் பிறந்தேன்?
எங்கேனும் என்றாலும் பரவாயில்லை
உயிர் வாழ்தல் போதுமென
வேரிழந்த வாழ்வு வேண்டாம்.
பச்சைத் தண்ணீர்மட்டும் குடிக்கும்
பஞ்சவாழ்வானாலும்
அது எந்தன் சொந்தவீட்டில் இருக்கட்டும்
என்னைவிட்டொதுங்கிய இனிய வசந்தமே!
மீண்டும் வருக!
உயிர்க்குருவி உடற்கூடுவிட்டுப் பறக்கமுன்னர்
ஒரு முறை ஊரிற்களிக்க வரமருள்.
எமதூரில் எமதூரதர்களாம்.
மனைவியுடன் நானுறங்கிய கட்டில்
பிள்ளையாடிய ஊஞ்சல்
அப்புவின் சாய்மனைக்கதிரை
புதிரெடுக்கும் அரிவாள்
எல்லாவற்றையும் எரித்திருத்தல்கூடும்
இனிப்பொறுத்தல் இழிவு.
என்ன செய்யலாம்?
ஏதேனும் செய்தாக வேண்டும்.

**- மாலிகா**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


# எரிமலை

கலை பண்பாடு
அரசியல் சமூக ஏடு

★

பதின்நான்காம் ஆண்டு
டிசம்பர் 1995

★

ஆக்கங்கள்
அபிப்பிராயங்கள்
மற்றும் தொடர்புகட்கு

★

**எரிமலை**
*தாய்மண் வெளியீடு*
*தமிழர் ஒருங்கிணைப்புக் குழு*
C/O T.C.C-France,
341, Rue des Pyrénées,
75020 Paris.
Tel: 43 58 11 42


# மாவீரர் உயிர்களினால் உயிர்ப்புறும் தாயகம்

எமது மண் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது. எமது தாயக பூமி எதிரியின் அழுக்கான கால்களின் கீழ் மிதிபடுகிறது. தமிழீழ நாட்டின் குரல்வளையை நெரிக்க பேரினவாத அரக்கன் முனைகிறான். எறும்புகள் போல், சிறுகச் சிறுகச் சேர்த்துக் கட்டிய வீட்டினுள் கொடிய பாம்பு குடிபுகுந்துள்ளது. கூடாரத்திலிருந்து மக்களை வெளியேற்றி விட்டு ஒட்டகம் ஒண்டிக்கொள்ள நினைக்கிறது. எனவே, எதிரியை எம்மண்ணிலிருந்து எப்படியும் வெளியேற்ற வேண்டும் என்பதே அனைவர் முன்னுள்ள பிரச்சினையாகும்.

யாழ்ப்பாணம் வரலாற்று முக்கியத்துவம், பாரம்பரியப் பெருமையும் கொண்ட எமது சொந்த நிலம். குழந்தைப் பருவம் முதல் எங்கள் பாதம் பட்ட மண். நாங்கள் ஒடி விளையாடிய முற்றம். நாம் பள்ளிக்குச் சென்ற பசிய பூமி. எமது அன்புக்கும், பாசத்துக்கும் உரிய தாயகத்தின் கழுத்தினுள்ளே துப்பாக்கிச் சனியனை செருகியவாறு, இராணுவ மேலாதிக்க நிலையை அடைய சிறிலங்கா அரசு எண்ணுகிறது. இராணுவ தந்திரோபாயத்துக்கு உட்பட்டதான, இராணுவ அழுத்தத்தின் பாற்பட்டதான பொய்யான சமாதான முயற்சிகளை எடுப்பதாக சந்திரிகா நாடகம் போடுதல் சாத்தியம். இவ்விடயம் குறித்து, தேசியத் தலைவரின் இவ்வருட மாவீரர் நாள் அறிக்கை தெளிவாகக் கூறுகிறது.

*"யாழ்ப்பாண மண்ணை சிங்கள இராணுவம் ஆக்கிரமித்து நிற்கும் வரை சமாதானத்தின் கதவுகள் இறுக்கமாக மூடப்பட்டிருக்கும். இராணுவ அழுத்தத்திற்குப் பணிந்து துப்பாக்கி முனையில் திணிக்கப்படும் சமரசப் பேச்சுக்களில் விடுதலைப்புலிகள் இயக்கம் ஒரு பொழுதும் பங்குபற்றப் போவதில்லை. இது தான் சந்திரிகா அரசிற்கு நாம் விடுக்கும் செய்தி"* எனக் கூறியுள்ளார்.

ஆகவே, எம்முன் உள்ள பணி என்னவென்பது தெளிவாகத் தெரிகிறது. எதிரி தானாகதான் பிடித்த இடங்களை விட்டு நகரப்போவதில்லை. அவன் அடித்து விரட்டப்பட்ட வேண்டும். அதற்கு ஆட்பலம், ஆயுதபலம் வேண்டும். தாயகத்தில் பல்லாயிரக்கணக்கான இளைஞர்கள், யுவதிகள் போராட்டத்தில் இணைந்து கொண்டிருக்கிறார்கள். அதேபோன்று வெளிநாடுகளில் இருந்து போராட்டத்தில் இணைந்து கொள்ள இளைஞர்கள், யுவதிகள் முன்வரவேண்டும். பெரும் எண்ணிக்கையால் பலமடங்காக்கப்பட்ட போராளிகள் நவீன ஆயுதமயப்படுத்தபடவேண்டும். மேலும், அகதிகளாக இடம்பெயர்ந்துள்ள, மக்களின் துயர் துடைக்கப்பட வேண்டும். காணி, பூமி, சொத்து அனைத்தையும் கைவிட்டு, விடுதலைப் போராட்டத்தில் பெரும் அர்ப்பணிப்புச் செய்து வரும் அம்மக்களின் கஸ்டங்களில் ஓரளவாவது நாம் பங்கு பற்ற வேண்டும். உணவு, உடை, இருப்பிடம், மருத்துவ வசதி போன்ற அனைத்து அத்தியாவசிய தேவைகளும் நிறைவேற்றுப்பட ஒழுங்கு செய்தல் வேண்டும்.

எனவே, வெளிநாடுகள் வாழ் தமிழ் மக்களின் பங்களிப்பை தேசியத் தலைவர் கோரி நிற்கிறார். எதிரியை எம் மண்ணிலிருந்து முற்றாக விரட்டியடித்து மாவீரர்களின் இலட்சியமாம், தன்னாட்சியுள்ள அரசை நிறுவுவதற்கு வெளிநாடு வாழ் தமிழ் மக்கள் முழுமையாகக் கிளர்ந்தெழ வேண்டும்.

தாயகம் விடுதலை பெற்று உயிர்ப்புற, தம் இன்னுயிர்களை ஈய்ந்த மாவீரர்களின் நினைவுகளை எம் நெஞ்சங்களில் சுமந்து, அவர் விட்டுச் சென்ற வரலாற்றுப்பணியை முழு அர்ப்பணிப்போடு எடுத்துச் செல்வோம் என்று அனைவரும் உறுதி பூணுவோம்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



மனசுக்குள் ஆயிரம் மத்தாப்பு விரித்த
ஆனந்த வாழ்வே!
மீண்டும் என்னில் படர்ந்து கொள்வாய்
என்று என்னைத் துறந்து போனாயோ
அன்றிலிருந்து நான் அனாதையானேன்.
கண்திறந்து பாராய்
அழகுக் கோலம் வற்றிய சடமாய்,
உயிர் சுமந்த கூடாய் உலவுகின்றேன்.
எனக்கென் ஊர்வேண்டும்.
வீடும், வயல்வெளியும் வேண்டும்.
கந்தகக்கலப்பில்லாத காற்று வேண்டும்.
எந்தை எனக்களித்த
முத்துமாரியம்மனின் பத்தாம் திருவிழா வேண்டும்.
ஊர்கூடி உட்கார்ந்து பார்க்கும்
கூத்தும்; கும்மாளமும் வேண்டும்.
பசிக்கு ஏதேனும் கடித்து
படுத்துறங்கவா நான் பிறந்தேன்?
எங்கேனும் என்றாலும் பரவாயில்லை
உயிர் வாழ்தல் போதுமென
வேரிழந்த வாழ்வு வேண்டாம்.
பச்சைத் தண்ணீர்மட்டும் குடிக்கும்
பஞ்சவாழ்வானாலும்
அது எந்தன் சொந்தவீட்டில் இருக்கட்டும்
என்னைவிட்டொதுங்கிய இனிய வசந்தமே!
மீண்டும் வருக!
உயிர்க்குருவி உடற்கூடுவிட்டுப் பறக்கமுன்னர்
ஒரு முறை ஊரிற்களிக்க வரமருள்.
எமதூரில் எமதூதர்களாம்.
மனைவியுடன் நானுறங்கிய கட்டில்
பிள்ளையாடிய ஊஞ்சல்
அப்புவின் சாய்மனைக்கதிரை
புதிரெடுக்கும் அரிவாள்
எல்லாவற்றையும் எரித்திருத்தல்கூடும்
இனிப்பொறுத்தல் இழிவு.
என்ன செய்யலாம்?
ஏதேனும் செய்தாக வேண்டும்.

- மாலிகா

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தமிழீழத் தேசியத் தலைவரின் மாவீரர்நாள் செய்தி 1995



எனது அன்பிற்கும் மதிப்பிற்கும் உரிய தமிழீழ மக்களே, இன்று மாவீரர்நாள்.

எமது தேசத்தின் விடுதலைக்காக தமது இன்னுயிரை ஈகம் செய்த இலட்சிய வேங்கைகளை நாம் எமது இதயக் கோயிலில் நினைவுகூரும் புனித நாள். எமது மாவீரர்கள் இந்த மண்ணுக்காக மடிந்தார்கள். இந்த மண்ணின் விடிவிற்காக மடிந்தார்கள். எமது மண்ணில் எமது மக்கள் சுதந்திரமாக, கௌரவமாக, பாதுகாப்பாக வாழ வேண்டுமென்ற இலட்சியத்திற்காக மடிந்தார்கள். எமது மண் நாம் பிறந்து வளர்ந்து வாழ்ந்த மண். எமது மூதாதையோரின் பாதச்சுவடுகள் பதிந்த மண். எமது பண்பாடும் வரலாறும் வேர்பதிந்து நிற்கும் மண் எமக்கே சொந்தமாக வேண்டும் என்ற குறிக்கோளுக்காக எமது மாவீரர்கள் மடிந்தார்கள். அந்நிய ஆதிக்க விலங்குகளால் கட்டுண்டு கிடக்கும் எமது தாயக மண்ணை மீட்டெடுத்து தன்னாட்சி உரிமை பெற்ற சுதந்திர தேசமாக உருவாக்கும் இலட்சியத்திற்காக எமது மாவீரர்கள் மடிந்தார்கள். எமது தாயக மண்ணை மீட்டெடுக்கும் புனிதப்போரில் எமது மாவீரர்கள் புரிந்த தியாகங்கள் மகத்தானவை. அவற்றைச் சொற்களால் செதுக்கிவிட முடியாது. உலக வரலாற்றில் எங்குமே, என்றுமே நிகழாத அற்புதங்கள் இந்த மண்ணில், இந்த மண்ணிற்காக நிகழ்ந்திருக்கிறது. அந்த வீரகாவியத்தைப் படைத்த ஆயிரமாயிரம் மாவீரரின் இலட்சியக்கனவு அவர்களது ஆன்மீக தாகம் என்றோ ஒரு நாள் நிறைவு பெறுவது திண்ணம்.

எமது மண் மீதான எதிரியின் ஆக்கிரமிப்புப் போர் என்றுமில்லாதவாறு இன்று விஸ்வரூப பரிமாணம் பெற்றிருக்கிறது. எதிரியானவன் தனது முழு படைபலத்தையும், ஆயுத பலத்தையும் ஒன்று திரட்டி தனது முழுத்தேசிய வளத்தையும் பயன்படுத்தி யாழ்ப்பாண மண்மீது பாரிய படையெடுப்பை நிகழ்த்தி வருகிறான். பழமையும் பெருமையும் வாய்ந்த எமது பாரம்பரிய பூமி எதிரியின் படைபல சக்தியால் அழிக்கப்பட்டு வருகிறது. ஓயாத மழையாகப் பொழியும் எதிரியின் எறிகணை வீச்சால் யாழ்ப்பாணத்தின் முகம் சிதைக்கப்பட்டு வருகிறது. யாழ்ப்பாணத்தின் பொருள்வளத்தைச் சிதைத்து, பண்பாட்டுச் சின்னங்களை அழித்து, தமிழரின் தேசிய வாழ்வைச் சீர்குலைத்து விடுவதே இந்த ஆக்கிரமிப்புப் போரின் அடிப்படை நோக்கமாகும். இந்தப் போர் அரசு கூறுவது போல புலிகளுக்கு எதிரான போரல்ல. இது தமிழருக்கு எதிரான போர்; தமிழினத்திற்கெதிரான போர்; தமிழின அழிப்பை இலக்காகக் கொண்ட போர். சிங்களப் பேரினவாதத்தின் இந்த இனப்போர் நீண்ட நெடுங்காலமாக நிகழ்ந்து வருகிறது. புலிகள் இயக்கத்தின் பிறப்பிற்கு முன்பிருந்தே நிகழ்ந்து வருகிறது. இதனைத் தொடக்கி வைத்தவர் சந்திரிகாவின் தந்தையார். இப்பொழுது சந்திரிகாவின் அரசு இந்த இனப்போருக்கு முழு வடிவம் கொடுத்திருக்கிறது. தமிழரின் உயிரையும், உடமையையும், தமிழரின் நிலத்தையும், வளத்தையும், ஒட்டுமொத்தத்தில் தமிழரின் தேசிய அடையாளத்தையே சிதைத்துவிடும் நோக்கத்தைக் கொண்டது இந்தப் போர்.

சமாதான முகமூடி அணிந்து சமாதானத்தீர்வில் நம்பிக்கை கொண்டவர் போல நடித்து சிங்கள மக்களையும் உலக சமூகத்தையும் ஏமாற்றி ஆட்சிபீடம் ஏறினார் சந்திரிகா.

அதிகார பீடத்தில் அமர்ந்ததும் சமாதானப் பேச்சுவார்த்தை என்ற நாடகத்தை அரங்கேற்றினார். தமிழரின் தேசியப் பிரச்சினைக்கு சமாதான வழியில் தீர்வை வேண்டிய நாம் அவருக்கு நேசக்கரம் நீட்டினோம்.

சுமூகமாகப் பேச்சுக்களை நகர்த்தும் நோக்கில் போர்க் கைதிகளை விடுவித்து நல்லெண்ண சமிக்கைகளைக் காட்டினோம். இந்தப் பேச்சுக்களின் போது நாம் எவ்வித கடுமையான நிபந்தனைகளையோ சிக்கலான கோரிக்கைகளையோ விடுக்கவில்லை. தமிழ் மக்கள் மீது அநீதியான முறையில் திணிக்கப்பட்டிருந்த பொருளாதாரப் போக்குவரத்துத் தடைகளை நீக்கி இயல்பான சூழ்நிலைகளைத் தோற்றுவிக்கும் படியே நாம் சந்திரிகா அரசிடம் வேண்டினோம். அடிப்படை வசதிகள் இன்றி அத்தியாவசியத் தேவைகள் மறுக்கப்பட்டு பல வருடங்களாக இடர்ப்பட்டு வாழ்ந்த எமது மக்களின் துன்பத்தைத் துடைத்து விடும்படியே நாம் கோரினோம். ஆனால் சந்திரிகா அரசு இந்த அற்ப சலுகைகளைத்தானும் தமிழருக்கு வழங்கத் தயாராக இல்லை.

ஆறு மாதங்கள் வரை அர்த்தமின்றிப் பேச்சுக்கள் இழுபட்ட பொழுது நாம் ஒரு உண்மையைப் புரிந்து கொள்ள முடிந்தது. அதாவது சந்திரிகா அரசு சமாதானத்தை விரும்பவில்லை என்பதையும் சமாதான வழிமூலம் தீர்வை விரும்பவில்லை என்பதையும் நாம் உணர்ந்து கொண்டோம். சமாதானப் பேச்சுக்களின் போது இராணுவ நலன்களுக்கு மட்டுமே முன்னுரிமை கொடுக்கப்பட்டதைக் கண்டபோது சந்திரிகா அரசு இராணுவத் தீர்விலேயே தீவிர அக்கறை கொண்டிருந்தது என்பது எமக்குத் தெளிவுறப் புலனாகியது.

பெரிய எடுப்பில் யாழ்ப்பாணம் மீது நிகழ்த்தப்படும் படையெடுப்பானது சந்திரிகா அரசின் இராணுவ,

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அரசியல் குறிக்கோளை தெட்டத் தெளிவாகக் காட்டுகிறது. தமிழ் மக்கள் செறிந்து வாழும் தமிழர் தாயகத்தின் மையப்பகுதியைச் சுற்றி வளைத்து மக்களோடு சேர்த்து மண்ணையும் ஆக்கிரமித்து யாழ்ப் பாணச் சமூகத்தை 'விடுதலை' செய்துவிட்டதாக உலகுக்குக் காட் டும் கபட நோக்குடன் இப்படை யெடுப்பு நிகழ்த்தப்பட்டது. ஆயினும் யாழ்நகரையும் வலிகாமப் பகுதியை யும் இராணுவம் முற்றுகையிடுவ தற்கு முன்னராக மக்கள் அனை வரும் ஒட்டு மொத்தமாக இடம் பெயர்ந்து சென்ற வரலாற்று நிகழ் வானது சந்திரிகா அரசின் தந்தி ரோபாயத்திற்கு சாவு மணி அடித் தது. அரசின் போர் நடவடிக்கை களையும் அதற்கு அரசு கற்பிக்கும் அபத்தமான காரணத்தையும் யாழ்ப் பாணத் தமிழ் மக்கள் ஏகமனதாக நிராகரித்து விட்டனர் என்பதையே இந்த இடம்பெயர்வு நிகழ்வு எடுத் துக்காட்டியது. சிங்கள அரச நிர்வா கத்தின் கீழ் அடிமைப்பட்டு வாழ தமிழ் மக்கள் இனித் தயாராக இல்லை என்பதையும், மக்களையும் புலிகளையும் வேறுபடுத்த முடியாது என்பதையும் இந்த சனப் பெயர்வா னது சிங்கள தேசத்திற்கும் உலகத் தாருக்கும் நன்கு உணர்த்தியது. எனவே யாழ்ப்பாணப் படையெ டுப்பின் அரசியற் குறிக்கோளை அடைவதில் சந்திரிகா அரசு தோல் வியையே சந்தித்திருக்கிறது.

இராணுவ முற்றுகையிலிருந்தும் அதன் பின்னணியிலுள்ள அரசியற் பொறியிலிருந்தும் எமது மக்கள் பாதுகாப்பாக தப்பித்துக் கொண் டமை ஒரு புறத்தில் எமக்கு ஆறுத லைத் தந்த போதும், மறுபுறத்தில் இந்தப் பாரிய இடம்பெயர்வால் எமது மக்கள் அனுபவித்த, அனுப வித்து வரும் இடர்களும், துயர்க ளும், துன்பங்களும் எமக்கு ஆழ மான வேதனையைத் தருகிறது.

காலங்காலமாக வசித்த பாரம் பரிய மண்ணைத் துறந்து வீடு, காணி, சொத்துக்களைக் கைவிட்டு ஏதிலிகளாக இடம்பெயர்ந்து எமது மக்கள் எதிர்கொள்ளும் தாங்கொ ணாத் துன்பங்கள் எமது நெஞ்சத் தைப் பிளக்கின்றது. எனினும் இத் துன்பியல் அனுபவமும் துயரமும் நிறைந்த அவலமும் எமது இனத் தின் விடுதலை எழுச்சிக்கு எமது மக்கள் அளித்த மாபெரும் பங்களிப் பாகவே நாம் கருதுகிறோம். ஆக்கி ரமிப்பாளனுக்கு அடிபணிந்து போகாமல் சுதந்திர மனிதர்களாக சுயகௌரவத்துடன் வாழ்வதற்கு எத்தகைய துயரையும் எதிர்கொள்ள எமது மக்கள் துணிந்து நிற்கிறார்கள் என்பதையே இந்த இடம்பெயர்வு உலகத்துக்கு பறைசாற்றி நிற்கிறது.

மக்கள் வெளியேறிய நிலையில் இடிபாடுகளுடன் சுடுகாடாய் கிடக் கும் யாழ்ப்பாணத்தில் சிங்கள இரா ணுவப் பேய்கள் வெற்றிக் கொடி யைப் பறக்க விடலாம். தமிழரின் இராச்சியத்தைக் கைப்பற்றி விட்ட தாக நினைத்து தென்னிலங்கையில் சிங்களப் பேரினவாதக் கும்பல்கள் பட்டாசுகள் கொளுத்திக் குதூகலிக் கலாம். இராணுவ மேலாதிக்க நிலையை எட்டி விட்டதாக எண்ணி சந்திரிகா அரசு சமாதானப் பேச்சுக் கான சமிக்கைகளையும் விடலாம்.

இந்தச் சந்தர்ப்பத்தில் நாம் ஒன் றைத் தெட்டத் தெளிவாக எடுத்தி யம்ப விரும்புகிறோம். அதாவது யாழ்ப்பாண மண்ணை சிங்கள இராணுவம் ஆக்கிரமித்து நிற்கும் வரை சமாதானத்தின் கதவுகள் இறுக்கமாக மூடப்பட்டிருக்கும். இராணுவ அழுத்தத்திற்கு பணிந்து துப்பாக்கி முனையில் திணிக்கப் படும் சமரசப் பேச்சுக்களில் விடுத லைப் புலிகள் இயக்கம் ஒருபொழு தும் பங்குபற்றப் போவதில்லை. இதுதான் சந்திரிகா அரசிற்கு நாம் விடுக்கும் செய்தி. பாரிய இராணு வப் படையெடுப்பை முடுக்கி விட்டு பல லட்சம் மக்களை இடம்பெயரச் செய்து, வரலாற்றுப் பெருமை மிக்க யாழ் மண்ணை ஆக்கிரமிப்பதன் மூலம் சமாதான சூழ்நிலையும் சமரசத் தீர்வும் ஏற்பட்டு விடும் என சந்திரிகா அரசு எண்ணுமா னால் அதைப் போல அரசியல் அசட்டுத்தனம் வேறேதும் இருக்க முடியாது.

இந்த ஆக்கிரமிப்பு நடவடிக்கை யானது சந்திரிகாவின் ஆட்சிபீடம் இழைத்த மாபெரும் வரலாற்றுத் தவறாகும். இதன் விளைவாக சமா தானத்திற்கான சகல பாதைகளை யும் கொழும்பரசு மூடிவிட்டதுடன் முழுத்தீவையுமே பெரியதொரு யுத்த நெருக்கடிக்குள் தள்ளிவிட்டி ருக்கிறது. யாழ்ப்பாணச் சமரில் புலி கள் இயக்கம் பேரிழப்பைச் சந்தித்து விட்டதென்றும், பலவீனப்பட்டு விட்டதென்றும் அரச பிரச்சாரச் சாதனங்கள் உரிமை கொண்டாடு வதில் எவ்வித உண்மையும் இல்லை. இந்தச் சமரில் புலிகள் பலவீனப் படவுமில்லை, பெரிய உயிரிழப்பைச் சந்திக்கவுமில்லை. யாழ்ப்பாணச் சமரில் புலிகளை விட இராணுவத் தினருக்கே பெரிய அளவில் உயிரி ழப்பும் தளபாட இழப்பும் ஏற்பட்டி ருக்கிறது. பெரிய அளவிலான ஆட் பலத்துடன் பெரிய அளவிலான ஆயுத சக்தியைப் பிரயோகித்து தனக்குச் சாதகமான நிலப்பரப்பு வழியாக முன்னேற முயன்ற பெரும் படையணிகளை எதிர்த்து எமது சக்திக்கு ஏற்றவகையில் நாம் சாது ரியமாகப் போராடினோம். பெரும் இடர்கள், ஆபத்துக்கள் மத்தியில் போராடியபோதும் பெருமளவில் உயிரிழப்புக்களை நாம் சந்திக்க வில்லை. இதனால் எமது படைபல சக்திக்கும் படையணிக் கட்டமைப் புக்கும் பாதிப்பு நிகழவில்லை. மரபு வழிப் போர்முறைக்கு புலிகளை ஈர்த்து எமது படை பலத்தை அழித்து விடலாம் என எண்ணிய இராணுவத்திற்கு இது ஏமாற்றத் தையே கொடுத்திருக்கிறது. ஒட்டு மொத்தத்தில் யாழ்ப்பாணச் சமர் எமக்கு ஏற்பட்ட பின்னடைவே தவிர தோல்வியல்ல. அதுவும் ஒரு தற்காலிகப் பின்னடைவேதான். இந் திய ஆக்கிரமிப்புக் காலத்திலும் இதைவிட பெரிய பின்னடைவுக ளைச் சந்தித்தோம். ஆனால் அந்தப் போரில் நாம் தோற்றுவிடவில்லை. இந்திய இராணுவமே இறுதியில் தோல்வியைச் சந்தித்தது. எனவே இன்றைய பின்னடைவே நாளைய வெற்றியாக மாறுவது திண்ணம்.

சிங்கள இராணுவம் யாழ்ப்பாண மண்ணில் அகலக்கால் பதித்திருக் கிறது. பெரும் படையைத் திரட்டி நிலத்தைக் கைப்பற்றுவது கடின மான காரியமல்ல. ஆனால் கைப் பற்றிய நிலத்தில் காலூன்றி நிற்பது தான் கஷ்டம். உலகெங்கும் ஆக்கிர மிப்பாளர் எதிர்கொண்ட வர லாற்று உண்மையிது.

இந்த வரலாற்றுப் பாடத்தை சிறீலங்கா இராணுவம் படித்துக் கொள்வதற்கு வெகுகாலம் செல் லாது. படைபலத்தை அடிப்படை யாகக் கொண்டே சிறீலங்கா அர சானது தமிழரின் அரசியற் தலை விதியை நிர்ணயிக்க முனைகிறது. தமிழ்ப் பிரதேச ஆக்கிரமிப்பு மூலம் இராணுவ மேலாதிக்க நிலையில் நின்று தான் விரும்பிய குறைந்த பட்ச தீர்வு ஒன்றை தமிழ் மக்கள் மீது திணித்துவிட நினைக்கிறது. சமாதானத்திற்கான யுத்தமென்ற

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

சந்திரிகாவின் கோட்பாடு இத்தகைய இராணுவத் தீர்வையே மூலமாகக் கொண்டிருக்கிறது.

இத்தகைய தீர்வை மானமுள்ள தமிழன் எவனும் ஏற்றுக்கொள்ளப் போவதில்லை. இந்தத் திட்டத்தை முறியடித்து தன்னாட்சி நோக்கிய எமது விடுதலைப் போராட்டத்தை நாம் முன்னெடுத்துச் செல்வதாயின் எமக்கு ஒரேயொரு வழிதான் உண்டு. நாம் எமது படை பலத்தைப் பெருக்கி போராட்டத்தைத் தீவிரமாக்க வேண்டும். தமிழ் மக்கள் தமது அரசியற் தலைவிதியை தாமே நிர்ணயிப்பதாயின் தமிழரின் படைபலம் பெருக வேண்டும். எமது படையமைப்பைப் பலப்படுத்திக் கொள்வதன் மூலமே நாம் பாதுகாப்பாக வாழமுடியும். நாம் எமது இழந்த மண்ணை மீட்டெடுக்க நாம் சொந்த இடங்களுக்கு சுதந்திர மனிதர்களாக திரும்பிச் செல்லமுடியும். தமிழர் தேசம் தமது படைபலத்தைக் கட்டியெழுப்ப வேண்டும் என்பது இன்றைய தவிர்க்க முடியாத வரலாற்றுத் தேவையாக எழுந்துள்ளது. தமிழினம் சிதைந்து, அழிந்து போகாமல் பாதுகாப்பாக வாழ்வதற்கு இது அவசியம். போராடித்தான் வாழ வேண்டும் என்ற நிர்ப்பந்தத்திற்கு தமிழ்த் தேசம் தள்ளப்பட்டிருக்கிறது. இந்தத் தேசியப் பணியிலிருந்து, வரலாற்றின் அழைப்பிலிருந்து தமிழ் இளம் பரம்பரை ஒதுங்கிக்கொள்ள முடியாது. இதில் காலம் தாமதிப்பதும் எமது இனத்திற்குப் பேராபத்தை விளைவிக்கக் கூடும். எனவே காலம் தாழ்த்தாது எமது விடுதலை இயக்கத்தில் இணைந்துகொள்ளுமாறு தமிழ் இளைஞர்களுக்கும் யுவதிகளுக்கும் வேண்டுகோள் விடுக்கிறேன். எவ்வளவு சீக்கிரத்தில் தமிழ் இளம் சந்ததி எமது இயக்கத்தில் இணைந்துகொள்கிறதோ அவ்வளவு சீக்கிரத்தில் நாம் எமது போராட்ட இலக்குகளை அடைந்து கொள்ள முடியும்.

மிகவும் நெருக்கடியான இக்காலகட்டத்தில் எவ்வித உதவியுமின்றி ஒரு இன அழிப்பு யுத்தத்தை நாம் தனித்து நின்று முகங்கொடுக்கும் இந்த இக்கட்டான நேரத்தில் உலகத் தமிழினத்தின் உதவியையும் ஆதரவையும் நாம் வேண்டி நிற்கிறோம். குறிப்பாக வெளிநாடுகளில் வாழும் தமிழீழ மக்கள் எமது உரிமைப் போருக்குக் குரல் கொடுப்பதுடன் தம்மாலான உதவிகளையும் செய்யுமாறு அன்புடன் வேண்டிக்கொள்கிறேன். எமது தேசத்தின் விடுதலைக்காக சாவை அரவணைத்து சரித்திரமாகி விட்ட எமது மாவீரர்களை நாம் நினைவுகூரும் இப்புனித நாளில் எந்த இலட்சியத்திற்காக ஆயிரமாயிரம் விடுதலை வீரர்கள் களப்பலியானோர்களோ அந்த இலட்சியத்தை அடைந்தே தீருவோமென உறுதி எடுத்துக்கொள்வோமாக.

**புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்**

www.tamilarangam.net

## விடுதலையை வீழ்த்த வல்ல படைகள் எங்குள்ளது?

ஒவ்வொரு மனிதனும் போரை வெறுத்தாலும் வரலாறு போர்களால் தான் நிரம்பி வழிகின்றது. உண்டோம், உறங்கினோம், எதையுமே சாதிக்காது இருந்தோம் என்பவர்களை வரலாறு குறித்து வைப்பதில்லை. சவால்களுக்கு முகம் கொடுத்து சாதித்தவர்களை அல்லது சாதிக்க முனைந்தவர்களை, வென்றவர்களை வரலாறு அக்கறையுடன் பதிந்து வைத்துள்ளது. எந்தக் காலத்திலும் மனித வரலாறு தெளிந்த நீரோடை போல் இருப்பதில்லை; இருந்ததில்லை. அவ்வாறாயின் அமைதிக்காலத்தைப் பற்றி வரலாற்றுக் கடவுள் நினைவுக்குறிப்பு எழுதுவதில்லை. மானிட சமூகத்தில் எழுந்த அரசியல் புயல்களும், சமூக பூகம்பங்களும் தான் வரலாற்றில் எலும்பும் தசையுமாக இருந்து வருகின்றன. இத்தகைய புயல்களினதும் பூகம்பங்களினதும் மையமாக செயல்பட்ட மனிதர்களை, அவர்களது வழிகாட்டலில் செயல்பட்ட மக்களை, மனுக்குலத்தின் நாயகர்களாக வரலாறு குறித்து வைத்துள்ளது. இத்தகைய வரலாற்று நாயகர்களின் வியக்கத்தகும் செயல்பாடுகளினால் குறித்த அந்த இனமும், நாடும், நகரமும் காலம் காலமாக பெருமைப்படுகின்றது. 50 வருடங்களுக்கு முன்னர் இரண்டாம் உலகபோர் காலத்தில் ரஷ்ய நாட்டின் நகரங்களில் ஒன்றான ஸ்டாலின்கிராட் மக்கள் அத்தகையதொரு வரலாற்றுப் பெருமையை என்றென்றுக்கும் அந்த நகருக்கும் அதன் குடிமக்களுக்கும் பெற்றுக் கொடுத்திருந்தார்கள். ரஷ்ய எல்லையை ஊடறுத்தபடி உள்ளே புகுந்த ஜேர்மனியின் இராணுவம் பல நகர்களைக் கைப்பற்றி ஸ்டாலின்கிராட் நகருக்குள் புகுந்தபோது ரஷ்ய தேசத்துப் படையான செஞ்சேனையுடன் ஸ்டாலின்கிராட் மக்களும் சேர்ந்து போராட முடிவெடுத்தார்கள். சில லட்சம் ஆட்பலத்தைக் கொண்ட பெரியதொரு ஆக்கிரமிப்பு இராணுவத்துக்கு எதிராக பல லட்சம் பேர் கொண்ட ஸ்டாலின்கிராட் மக்கள் எதிர்த்தாக்குதலை மேற்கொண்டனர். நகரின் ஒவ்வொரு கட்டடங்களுக்காவும் அந்த மக்கள் சண்டையிட்டனர். ஸ்டாலின்கிராட் எதிரிப்படையினரின் கைகளில் வீழ்ந்து விடுமோ என்ற அவலநிலை தோன்றுமளவிற்கு ஜேர்மனி இராணுவம் ஆக்கிரமிப்புடன் முன்னேறியது. ஆயினும் ஸ்டாலின்கிராட் குடிமக்கள் சோர்வடையவில்லை. நெருக்கடி நிலையிலும் நம்பிக்கை வைத்துப் போராடினார்கள். காற்று வேகத்தில் உள்ளே புகுந்த ஜேர்மனியின் படைகள் ஸ்டாலின்கிராட் நகரில் நத்தைவேக நகர்வையே செய்யும் அளவிற்கு எதிர்த்தாக்குதல் நடத்தப்பட்டது. கட்டடங்கள் எல்லாம் சிதைந்து விழுந்தன. ஆயினும் ஸ்டாலின்கிராட் மக்கள் நிமிர்ந்து நின்றார்கள் என ஒரு நூலாசிரியர் புகழுமளவிற்கு சமரின் கடுமையும் நகர மக்களின் உறுதியும் இருந்தது. இறுதியில் ஜேர்மனியின் படைகள் மெது மெதுவாக ஸ்டாலின்கிராட் நகரை விட்டுப் பின்வாங்கின. அந்தப் பின் வாங்கலால் ஒரு சில நாட்களில் புயல் வேகம் பெற்று, ஸ்டாலின்கிராட்டிலிருந்து செஞ்சேனை ஜேர்மனியரின் தலைநகரான பேர்லினை சென்றடைந்ததும்தான் நின்றது. ஸ்டாலின்கிராட் மக்களின் முழுமையான ஆதரவு காரணமாக பெருகிய ரஸ்ய நாட்டுப் படைப்பலம் அந்த நாட்டுக்கு பாரிய ஒரு வெற்றியை விரைவாகப் பெற்றுக்கொடுத்தது. இந்த வெற்றிக்கு மூலகாரணமாக இந்த ஸ்டாலின்கிராட் நகர மக்கள் வரலாற்றின் பக்கங்களில் வெற்றி பெற்றவர்களாக பொறிக்கப்பட்டுள்ளார்கள். 50 வருடங்களுக்கு முன் ஸ்டாலின்கிராட் மக்கள் சந்தித்த அந்த வரலாற்று நெருக்கத்தை இன்று குடாநாட்டு மக்கள் சந்தித்து உள்ளனர். குடாநாட்டின் ஒரு பகுதி சிங்களப் படைகளால் விழுங்கப்பட்டுக்கொண்டிருக்கின்றது. ரஷ்ய செஞ்சேனையுடன் இணைந்து போராடிய ஸ்டாலின்கிராட் மக்களைப் போல குடாநாட்டின் இளைஞர்கள் புலிகளுடன் இணைந்து போராட வேண்டிய ஒரு வரலாற்றுத் தேவை இன்று எழுந்துள்ளது. குடாநாட்டில் 40,000 இராணுவம் அச்சுறுத்திக் கொண்டு இருக்கின்றது. ஆனால் குடாநாட்டைப் பாதுகாக்க போராடும் தகமையுடன் இங்கு மூன்று இலட்சம் இளைஞர்கள் இருக்கின்றார்கள். இந்த 3 இலட்சம் இளைஞர்களும் போராட முடிவெடுத்தால், 50 வருடகாலமாக ஸ்டாலின்கிராட் நகர மக்கள் வைத்திருக்கும் அந்த பெருமை மிகு தகுதியை, யாழ் குடாநாடு பெற்றுக்கொள்ளலாம். சிங்கள தேசத்துப் படைகளை அதன் எல்லை வரை விரட்டி அடித்து விடலாம். போராடும் தேசங்களுக்கு யாழ்ப்பாணக் குடாநாடு கொடுத்த சொத்து என சிலகாலத்தின் பின் உலகில் யாரோ ஒரு பத்திரிகை ஆசிரியர் தலையங்கம் எழுதக் கூடும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# சிங்கள இராணுவத்தின் தீன் பீன் பூ:

## யாழ்ப்பாணம்

சிறிலங்கா அரசாங்கம் மேற்கொண்டுள்ள 'சூரியக்கதிர்' இராணுவ நடவடிக்கையின் நோக்கங்கள் எவையென அவர்களது மொழியிலேயே கூறினால் பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம். யாழ்குடாநாட்டையும், அதன் மக்களையும் பயங்கரவாத அமைப்பிடமிருந்தும், அதன் பயங்கரவாத ஆட்சியிலிருந்தும் விடுவித்தல். விடுதலைப் புலிகள் என்ற பயங்கரவாத அமைப்பை பலவீனப்படுத்தி அவர்களைப் பேச்சுவார்த்தை மேசைக்குக் கொண்டு வருதல். விடுவிக்கப்பட்ட பகுதிகளில் அரச சிவில் நிர்வாகங்களை ஏற்படுத்தல். புனர்நிர்மாண, புனர்வாழ்வு நடவடிக்கைகளை மேற்கொண்டு, தமிழ் மக்கள் சுபீட்சமாக வாழ வழி செய்தல். வெளிப்படையாக உலகுக்குக் கூறப்பட்டு வரும் இந்நோக்கங்களைக் குறியீடு செய்வதாக இவ் இராணுவ நடவடிக்கைக்கு மனித வாழ்வில் ஒளிதருவதான 'சூரியக்கதிர்' என்ற பெயர் வைக்கப்பட்டுள்ளது. ஆனால் இந்த இராணுவ நடவடிக்கையின் உட்பொருள் என்ன? உள்ளார்ந்த நோக்கங்கள் என்ன? இறுதித் தீர்வுகள் என்ன? யாழ்ப்பாணக் குடாநாட்டை இராணுவ ரீதியாக ஆக்கிரமித்தலும், தமிழ் மக்களைப் பணயக் கைதிகளாக வைத்திருத்தலும் முதன்மையான நோக்கங்களாக இருக்கின்றன. சிவில் நிர்வாகம் என்பது இராணுவ நிர்வாகமே தவிர வேறில்லை. இராணுவ ஒருங்கிணைப்பு அதிகாரிகளின் மூலம் ஓட்டுமொத்தமான நிர்வாகம் இடம் பெறுவதை, மட்டக்களப்பு, திருகோணமலை ஆகிய இராணுவக் கட்டுப்பாட்டு நகர்ப்புறங்களில் காண்கிறோம். இராணுவ அதிகாரியின் கட்டுப்பாட்டின் கீழ் அரச சிவில் நிர்வாக இயந்திரங்கள் இயக்கப்படும். மக்கள் பிரதிநிதிகளாக, அரசாங்கத்தின் கைக்கூலிகளாகச் செயல்படும் துரோகக் கும்பல்கள் கொண்டு வந்து இறக்கப்படுவர். இத் துரோகக் குழுக்களைக் கூட பிரித்து வைப்பதில் அரசாங்கம் வெற்றி கண்டிருக்கிறது. வவுனியாவில் PLOT துரோகக்கும்பல், மட்டக்களப்பில் TELO துரோகக்கும்பல், யாழ்ப்பாண தீவுப்பகுதிகளில் EPDP துரோகக்கும்பல் என்ற ரீதியில் இப்பிரிவினை இடம்பெற்றுள்ளது. சிறிலங்கா அரசாங்கத்தின், வெற்றி பற்றிய பிரச்சாரத்தில் மயக்கம் கொண்ட இக் குழுக்கள் பல இடங்களில், குறிப்பாக வெளிநாடுகளில் சிறிது தலை தூக்க ஆரம்பித்துள்ளன. புலிபடுத்தால், எச்சப் பிணம் தின்னலாம் எனப் புறப்படும் ஓநாய்கள், நரிகளைப் போல இவர்கள் வெளிக்கிடுகின்றனர். புலிபடுக்கவில்லை; பாய்வதற்காகப் பதுங்குகின்றது என்பதை அவர்கள் உணரவில்லை.




விடுதலைப்புலிகளைப் பலவீனப்படுத்தல் என்பது, விடுதலைப்புலிப் போராளிகளையும், தலைவர்களையும், இயக்கத்திற்கு ஆதரவான கலைஞர்கள், கவிஞர்கள், கல்விமான்கள், புத்திஜீவிகள், எழுத்தாளர்கள் அனைவரையும் கொன்றொழித்தல் என்பதாகும். இதன்மூலம் தமிழரின் பாதுகாப்புக் கவசத்தையும், எதிர்ப்புச் சக்தியையும் அழித்தலாகும். இதனைச் செய்தால், விடுதலைப் போராட்டத்தை நசித்து விடலாம்; தமிழ்மக்களை தங்கள் மிருகத்தனமான காலடியில் ஊர்ந்து உழல்கின்ற புழுக்களாக மாற்றிவிடலாம் என்று கருதுகிறது சிங்கள அரசு. தற்போது தான் நடத்தும் இராணுவ நடவடிக்கையின் போது, பொதுமக்களின் சொத்துக்களை அழித்துத் தரைமட்டமாக்கி, தான் நடந்து வரும் பகுதிகளைப் பாலைவனமாக்கி வருகிறது. எறிகணை, ஆகாயவிமானக்குண்டு வீச்சுக்களாய் மட்டுமன்றி, புலடோசர்களால் வீடுகள் இடிக்கப்பட்டு சமதரையாக்கப்படுகின்றன. ஆக்கிரமிக்கப்பட்ட பகுதிகள் அனைத்தும் முட்கம்பி வேலிகளால் அடைக்கப்பட்டு, பாரிய இராணுவத் தளங்களாக்கப்படுகின்றன. அதேவேளை, வீடுகளில் இருந்த பொருட்கள் அனைத்தும் கொள்ளையடிக்கப்பட்டு தெற்குக்குக் கடத்தப்படுகின்றன. இப்படிச் செய்து கொண்டு, புனர் நிர்மாணம் செய்யப்போவதாகக் கூறுவது வெளிநாடுகளை ஏமாற்றி நிதி உதவி பெறுவதற்கே ஆகும். அந்நிதி உதவி, மேலும் கூடிய அழிவை தரும் இராணுவ நடவடிக்கைகளுக்கே பயன்படும். வரவுசெலவுத் திட்டத்தில், இராணுவச் செலவை அண்மையில் பலமடங்காக அதிகரித்த போதும், நிதிப் பற்றாக்குறையினால் அரசாங்கம் தடுமாறுவது தெரிகிறது. இந்நோக்கங்களை நிறைவேற்ற பெரும் பிரச்சார

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்




யுத்தத்திலும் அரசாங்கம் ஈடுபட்டுள்ளது. இராணுவம் வெற்றி பெறுவதாகத் தம்பட்டம் அடிக்கின்ற அதேவேளை, அரசியல் முன்னெடுப்புக்களை மேற்கொள்வதாகவும் உலகை ஏமாற்றக் கூறி வருகிறது. அழிவு தரும் இராணுவ நடவடிக்கை, இறுதியில் போரின் இறுதிப் போரின் முடிவுக்கும், சமாதானத்திற்குமே எனக்காட்ட முனைகிறது. எனவே, அரசியல் தீர்வுதான் இறுதியில் சாத்தியம் என யாழ் நகரின் மீதான தாக்குதலின் இடைநடுவில் சந்திரிகா கூறியது இங்கு குறிப்பிடத்தக்கது.

விடுதலைப் புலிகளை அழித்தல், விடுதலைப் போராட்டத்தை நசுக்குதல் போன்ற இலக்குகள் சரிவராது என்பதை அரசாங்கம் உணர்ந்து கொண்டதாகத் தெரிகிறது. எனவே, தான் பிடித்த இடங்களில் நிலைத்து நிற்பதன் மூலம் இராணுவ அழுத்தத்தைப் பிரயோகித்து, அரசியல் இலாபங்களை அடைய முயல்கிறது. இதன் காரணமாகவே, விடுதலைப் புலிகளுடன் நேரடிப் பேச்சுவார்த்தையை வைத்துக்கொள்வது என்ற கொள்கையிலிருந்து விலகி, யுத்த நிறுத்தம், இரகசியப் பேச்சுவார்த்தை போன்ற விடயங்களை மூலம் முன்னெடுக்க மூன்றாவது தரப்பு மூலம் இரகசியமாக முனைந்து வருகிறது.

அரசாங்கத்தின் இராணுவ நோக்கங்கள் எவ்வாறு முறியடிக்கப்பட்டு வருகின்றன என்பதைப் பார்ப்போம். விடுதலைப்புலிகளை, போராட்டத் தலைவர்களை, ஆதரவாளர்களை பெருமளவில் அழித்தல் என்பது கைகூடவில்லை. அதற்கு மாறாக, பல்லாயிரக்கணக்கானோர் போராட்டத்தில் தம்மை இணைத்துக் கொள்வதே நடந்துள்ளது. சூரியக்கதிர் நடவடிக்கையின் போது, இறந்த போராளிகளின் எண்ணிக்கை 300 அளவிலேயே இருக்கும். ஆயினும், 1800-க்கு மேற்பட்ட புலிகள் இறந்ததாக அரசாங்கம் பிரச்சாரப்படுத்தி வருகிறது. விடுதலைப் புலிகள் தரப்பில் லெப்டினட் கேணல் அகிலா இறந்ததை முக்கிய இறப்பாகக் குறிப்பிடலாம். இராணுவத் தரப்பில் 700-க்கு மேற்பட்ட இராணுவம் இறந்ததாக நம்பகரமாக அறியப்படுகின்றது. சிறிலங்கா அரசாங்கம்,

**- வளவன் -**

இராணுவ ஆட்சிக்குட்பட்ட சிவில் நிர்வாகத்தை கொண்டு வர முடியவில்லை. காரணம், மக்கள் இன அழிப்பு இராணுவத்திடமிருந்து தப்பி ஓடிவிட்டனர். தென்மராட்சிக்கும், வன்னிப் பெருநிலப்பரப்பிற்கும் இடம்பெயர்ந்து, விவசாய, தொழிற்செயற்பாடுகளில் மக்கள் இறங்கியுள்ளனர். இதனால் யாழ் குடாநாட்டின் சனநெருக்கடி, இராணுவ நடவடிக்கையின் எதிர்விளைவாக குறைகின்றது. அதேவேளை, வன்னி நிலப்பகுதி வளம்பெறவும், விஸ்தரிக்கப்படவும், எல்லைப்புறங்கள் பாதுகாக்கப்படவுமான நிலை ஏற்பட்டுள்ளது. அகதிகள் பிரச்சினை, மிகப் பாரதூரமான விடயமாயினும், TRO போன்ற அமைப்புக்கள், சர்வதேச செஞ்சிலுவைச்சங்கம், MSF போன்ற அமைப்புக்களுடன் இணைந்து அகதிகள் நல வாழ்வு என்ற சவாலை சமாளிக்கப் போராடி வருகின்றன. இவ்விடயத்தில், வெளிநாட்டு வாழ் தமிழர்களின் உதவிகளும் பெருமளவில் கோரப்படுகின்றன. இராணுவ நடவடிக்கையின் கோரத்தின் காரணமாகவும், அகதிகள் தொடர்பாக அரசாங்கத்தின் நிலைப்பாடு கார

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

ணமாகவும் சந்திரிகா அரசாங்கத்தின் மீது சர்வதேச சமூகம் வைத்திருந்த அபிப்பிராயம் மாறி வருகின்றது. அகதிகள் நிவாரண வேலைகளில், ஐ. நா சபையின் உதவி நிறுவனங்கள், MSF போன்ற வைத்திய நிறுவனங்கள், பல்வேறு மனிதாபிமான நிறுவனங்கள், அரசாங்கத்தின் கண்டனத்துக்கும், கண்டிப்புக்கும், கேலிக்கும் உள்ளாக்கப்பட்டன. அதுமாத்திரமில்லாமல், உள்நாட்டு, வெளிநாட்டு அரச சார்பற்ற நிறுவனங்களை உள்ளடக்கிய NGO FROUM என்ற அமைப்பு, கொழும்பில் வருடாந்த மாநாட்டைக் கூட்டி, வட பகுதி அகதிகளுக்கு உதவ முனைந்த போது, அது, அரசாங்கத்தின் பின்னணியில், புத்தபிக்குகளின் தலைமையில் வந்த காடையர் கூட்டத்தால் தடுத்து நிறுத்தப்பட்டது. அது மாத்திரமின்றி, அதில் பங்குபற்ற வந்த உள்நாட்டு, வெளிநாட்டுப் பிரதிநிதிகளும் தாக்கப்பட்டுள்ளனர். அகதிகளுக்கான உணவு, மருந்துப் பொருட்களையும், வெளிநாட்டு மனிதாபிமான நிறுவனங்கள் எடுத்துச் செல்ல முடியாது என்பது பெரும் ஆத்திரத்தை அரசாங்கம் மீது திருப்பியுள்ளது. தரையால், அத்தியாவசியப் பொருட்கள் செல்வதைத் தடுத்து, நூற்றுக்கணக்கான லொறிகள் வவுனியாவின் தென்பகுதியில் காத்து நிற்கின்றன.

அகதிகளுக்கான உணவுப்பொருட்களை அனுப்புவதாகக் கூறி, தனது கப்பல்களில் இராணுவத்தினரது பொருட்களை அனுப்புகிறது. இறுதியில், ஒரேயொரு சர்வதேச நிறுவனத்தையே, உணவுப்பொருட்களை எடுத்துச் செல்ல அனுமதித்துள்ளது. MSF நிறுவனம் மருந்துப்பொருட்களை எடுத்துச் செல்ல அனுமதிக்கப்பட்டபோதும், தேவையான வைத்தியர்களை அழைத்துச் செல்ல மறுக்கப்பட்டுள்ளது. அது சர்வதேச ரீதியில் தமிழ் அகதிகளுக்கான சேவையின் பொருட்டு நிதி சேகரித்தலையும் அரசாங்கம் கண்டித்துள்ளது. எனவே, சர்வதேச சமூகம், தற்போது நன்கு உணர்ந்து வருகின்றது, சந்திரிகா நடத்துவது, விடுதலைப்புலிகளின் மேலான போர் அல்ல; தமிழ்ப் பொதுமக்கள் மீதான போர் என்று. தான் முன்னேறும் வழியிலுள்ள மக்கள் குடியிருப்புக்கள் மீது மாத்திரமல்ல, தப்பி ஓடும் பொதுமக்கள் மீதும் அகதிகளாக மக்கள் இடம்பெயர்ந்த இடங்கள் மீதும் மிலேச்சத்தனமான எறிகணைத் தாக்குதல்களை இராணுவம் நடாத்தியுள்ளது. சண்டை நடைபெறாத வடமராட்சி, தென்மராட்சி பகுதிகளிலும், முல்லைத்தீவுப் பகுதிகளிலும் நடாத்தப்பட்ட விமானக் குண்டு வீச்சுக்களும், பொதுமக்களின் இறப்புக்களும் உலகத்தின் கண்ணைத் திறந்து வருகின்றன. பாதிக்கப்பட்ட மக்கள் மீது உணவு, மருந்துத்தடையினை விதித்து, சர்வதேச செஞ்சிலுவைச் சங்க நடவடிக்கைகளை தாமதப்படுத்தி அரசாங்கம் எடுக்கும் நடவடிக்கையானது மக்களை பட்டினி போட்டு அடிபணிய வைக்கும் முயற்சி என்பதை வெளியுலகம் உணர்ந்துள்ளது. இது ஒரு இனப் படுகொலை முயற்சி என்பது தெளிவாகவே தெரிகின்றது. இது அரசாங்கத்தின் மீது ஆரம்பத்தில் வெளிநாடுகள் கொண்ட நம்பிக்கையை சிதறடித்து வருவதோடு, போருக்கான ஆதரவையும் இழக்கச் செய்துள்ளது.

**ஹிட்லரின் படையணியைச் சேர்ந்த ஒருவன் 'ஸ்ராலின்கிராட்டுக்கு வந்துவிட்டோம். இன்னும் சில நாட்களில் சோவியத் யூனியன் முழுவதையும் பிடித்துவிடுவோம்' என அங்குள்ள சுவரொன்றில் எழுதினான். இதை கவனித்திருந்த சோவியத் படையணி வீரன் ஒருவன் பேர்லினில் உள்ள சுவர் ஒன்றில் 'உங்களை ஸ்ராலின்கிராட்டிலிருந்து துரத்திக்கொண்டு பேர்லின் வரை வந்துவிட்டோம்' என எழுதினான்.**

www.tamilarangam.net

தமிழ் மக்களின் மனங்களை வென்றெடுத்தல், தமிழ் மக்களை மீட்டல் என்ற விடயங்கள் இராணுவ நடவடிக்கைகளால் மீள முடியாத அந்நியப்படுத்தலுக்கே இட்டுச் சென்றுள்ளது. புலிகள் வேறு, மக்கள் வேறு, என்ற அரச கருதுகோளின் இவ் இராணுவ நடவடிக்கையும், அதன் தொடர்ச்சியான அழிவுகளும் என யாழ் பல்கலைக்கழக பேராசிரியர்கள் ஒருங்கிணைந்து வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்தனர்.

அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் நிலத்தைப்பிடித்தல், இராணுவ முகாங்களின் எல்லைப் பரப்பை விஸ்தரித்தல் என்ற விடயமும் சரிவரப்போவதில்லை. பெருவாரியான படையினரை, கிழக்குப் பகுதியிலிருந்து எடுத்து வடபகுதியில் இராணுவ நடவடிக்கைகளில் ஈடுபடுத்தும் போது, கிழக்குப் பகுதி இழக்கப்படுகின்றது. நீண்டகால, இராணுவ, குடியேற்ற நடவடிக்கைகள் மூலம், அபகரித்துக்கொள்ள முயன்ற கிழக்குப்பகுதி, பறிபோவதையும், விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுக்குள் வருவதையும் காணக்கூடியதாக உள்ளது.

பொருத்தமற்ற கால, இடச் சூழ்நிலைகளயில் இராணுவம், பரந்த நிலப்பரப்பில் பரவுவதும், நீண்ட காலம் அப்பகுதியில் தங்கி இருப்பதும் ஆபத்தாகவே முடியும். இம் முயற்சியில் ஏற்கனவே ஏராளமான படைவீரரையும், படைக்கலங்களையும், 10-க்கு மேற்பட்ட டாங்கிகளையும், கவசவாகனங்களையும் அரச படைகள் இழந்துள்ளன. தரை ரீதியான, கடல் ரீதியான, ஆகாய வழி ரீதியான விநியோக மார்க்கங்களும் பெருமளவு தடைப்பட்டுள்ளன. Y-8, AN-32 ஆகிய இராணுவ போக்குவரத்து விமானங்கள் சுட்டுவீழ்த்தப்பட்டுள்ளமையானது, இராணுவத்துக்கு விநியோகத்தைப் பொறுத்தவரை பெரும் கலக்கத்தைக் கொடுத்துள்ளது. இன்னுமொரு Y-8, AN-32, AVRO என்ற வகையில் ஒரு சில போக்குவரத்து விமானங்களே உள்ளன. இவையும் சுட்டு வீழ்த்தப்படும் அபாயம் காணப்படுகின்றது. இத்தகைய நிலையில், பெரும் படையணிகளுடன், விடுதலைப்புலிகள் பெரும் எதிர்த்தாக்குதல்களை மேற்கொள்ளும் போது பெரும் அழிவுகளுடன் பழைய இடங்களுக்கு ஓடுகின்ற நிலையோ, யாழ் மண்ணே அவர்களுக்குப் புதைகுழியாக மாறுகின்ற நிலையோ ஏற்படும்.

விடுதலைப்புலிகளைச் சுற்றி வளைத்து சரணடைய வைக்கப் போவதாக அரசாங்கமும் இராணுவமும் கூறுகிறது. யாரை யார் சுற்றி வளைப்பது என்பது விரைவில் தெரியும். புலிகளின் மண்ணில் நின்று கொண்டு, அவர்களைச் சுற்றி வளைக்கப்போவதாக கூறுவது அபத்தம். வியட்னாமில், வியட்னாம் போராளிகளைச் சுற்றிவளைக்க முற்பட்டு, சுற்றிவளைக்கப்பட்டது பிரெஞ்சு இராணுவம். தின் பின் பூ சுற்றி வளைப்பும், சரணாகதியும் பிரெஞ்சு இராணுவம் முற்று முழுதாக வியட்னாமை விட்டு வெளியேற வழிவகுத்தது. சிங்கள இராணுவத்தின் தீன் பீன் பூ யாழ்ப்பாணத்தில்தான் என்பது நிச்சயம். எப்போது என்பதுதான் தீர்மானிக்கப்பட வேண்டும். ★

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# அடித்தளத்தை சிதைக்க...

“சிறீலங்கா இராணுவம் மேற்கொள்ளும் தாக்குதல் நடவடிக்கைகள் விடுதலைப் புலிகளுக்கு எதிரானது மட்டுமே ஒழிய தமிழ் மக்களுக்கு எதிரானது அல்ல. இது ஒரு சமாதானத்துக்கான போராகும்.” சிறீலங்கா அரசு குடாநாட்டில் நடத்தும் தாக்குதல்களுக்குக் கூறிக் கொள்ளும் விளக்கம் இதுவே.

ஆனால், சிறீலங்கா இராணுவம் மேற்கொள்ளும் ஒவ்வொரு தாக்குதல் நடவடிக்கையின் போதும் அப்பாவித் தமிழ் மக்கள் கொல்லப்படுவதும் படுகாயமடைவதும் மற்றும் ஆயிரக்கணக்கான மக்கள் தமது வாழ்விடங்களையும் பொருளாதார செயற்பாடுகளையும் கைவிட்டு வெளியேறுவதும் வழமையானதாகும்.

இந்த வகையில் குடாநாட்டில் தற்பொழுது வாழ்ந்துகொண்டிருக்கும் மொத்த சனத்தொகையில் சுமார் அரைப்பங்கினர் தமது குடியிருப்புக்களை விட்டு இடம்பெயர்ந்த நிலையிலேயே வாழ்கின்றனர். இதேசமயம் கடந்த ஏப்ரல் 19-ம் திகதிக்குப் பின்னர் இராணுவம் மேற்கொண்ட தாக்குதலில் சுமார் 400-ற்கு மேற்பட்ட அப்பாவிப் பொதுமக்கள் கொல்லப்பட்டும் 2000-க்கு மேற்பட்டோர் காயமடைந்தும் உள்ளனர்.

மேலும் கொல்லப்பட்ட மக்களும் சண்டைகளுக்கு இடையில் சிக்கிக் கொண்டவர்கள் அல்ல. சண்டை இடம்பெறும் பகுதிகளுக்கு அப்பால் தொலைதூரத்தில் 10 கிலோமீற்றர்களுக்கு அப்பாலிருந்துங்கூட கொல்லப்பட்டுள்ளனர். அதிலும் தம்மீது தாக்குதல் ஏதும் நடத்தப்படும் உணர்வுகூட இல்லாத பகுதியிலுள்ள மக்கள் கூட கொல்லப்பட்டுள்ளனர். அத்தோடு பெருமளவிலான தமிழ் மக்களின் சொத்துக்கள் சிறீலங்கா இராணுவத்தால் அழிக்கப்பட்டும் சூறையாடப்பட்டும் உள்ளன. ஆயிரக்கணக்கான மக்களின் வாழ்வியக்கத்துக்குத் தேவையான பொருளாதார மூலவளங்களும் அழிக்கப்பட்டுள்ளன. அல்லது அப்பகுதியிலிருந்து மக்கள் விரட்டப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் தமிழ் மக்கள் மீது தாக்குதல் நடத்துவதோ அன்றி அவர்களைக் கொலை செய்வதோ துன்புறுத்துவதோ எமது நோக்கமல்ல என்ற சந்திரிகா அரசாங்கத்தின் பேச்சுக்கள் யதார்த்தத்திற்குப் புறம்பானவை மட்டுமல்ல கேலிக்குரியவையுமாகும்.

உண்மையில் விடுதலைப் புலிகள் மீதான தாக்குதல் என்ற ரீதியில் சிறீலங்கா அரசாங்கம் மேற்கொள்ளும் தாக்குதல்கள் நீண்டதொரு ஒடுக்குமுறை கொண்ட திட்டமாகும். இது தமிழ் மக்களின் சமூக பொருளாதார வாழ்வுக்கு கட்டாயத்தை சேர்ப்பதன்மூலம் தமிழர் தேசியம் என்பதை சிதைத்து விடவும் அழித்துவிடவும் நோக்கம் கொண்டதாகும்.

தமிழீழ விடுதலைப் போராட்டமானது ஆயுதப் போராட்டமாகக் கூர்ப்படைந்து சுமார் 12 வருடங்களைக் கடந்துவிட்டது. இக்கால கட்டத்தில் இப்பிரச்சினைக்கு தீர்வுகாண சிறீலங்கா அரசானது இராணுவ ரீதியில் தன்னாலான சகல முயற்சிகளையும் செய்து பார்த்துவிட்டது. ஆனால், போராட்டத்தைத் தோற்கடிக்கவோ அன்றி கட்டுப்படுத்தவோ அதனால் முடியவில்லை. மாறாக போராட்டம் வலுவுள்ளதாகவும் உறுதியானதாகவும் வளர்ந்தே வந்துள்ளது. இதற்கு தமிழ் மக்களின் சமூக பொருளாதார கட்டமைப்பு உறுதியானதாக இருந்து வந்துள்ளமையே காரணமாகும். இதுவே தமிழ் மக்களின் தேசியம் சிதைந்துவிடாது உறுதிப்பாடானதாக வைத்திருந்தது.

இந்த நிலையில்தான் தற்பொழுது தமிழ் மக்களின் சமூக பொருளாதார கட்டமைப்பை முற்றாக சிதைத்து தேசியத்தை அழித்துவிட வேண்டுமென சிங்கள அரசு விரும்புகிறது. இதற்கு ஒரு வழிமுறையாகவே தமிழ் மக்களை அவர்களின் வாழ்விடங்களில் இருந்தும் விளை நிலங்களில் இருந்தும் விரட்டிவிட அரசாங்கம் முனைகிறது. இது அவர்களின் பொருளாதார வாழ்வை சிதைத்து சமூக கட்டுமானங்களை அழித்துவிடுமென அரசாங்கம் கருதுகின்றது.

அதாவது அகதி முகாம்களில் இடம்பெயர்ந்த நிலையில் வாழும் மக்களின் தேசிய பங்குகள் கலைக்கப்பட்டு விடும் என்ற நீண்ட நோக்கில் சிங்கள அரசு செயற்பட்டு வருகின்றது. இதன் காரணமாக படிப்படியாக விடுதலைப் போராட்டமும் பலவீனப்பட்டுப் போய்விடும் என்பதோடு இராணுவ ரீதியில் தோற்கடிக்கக்கூடியதாகவும் இருக்கும் என சிறீலங்கா அரசு கருதுகின்றது.

இந்த நிலையில் தமிழ் தேசியத்தை காப்பாற்றுவதற்கான பெரும் போராட்டத்தை நடத்தவேண்டியதொரு வரலாற்றுக் கட்டத்தில் தமிழ் மக்கள் இருக்கின்றார்கள். இன்று தமிழ் மக்கள் தமது போராட்டத்தில் இருந்து பின்வாங்குதல் அல்லது தாமதித்தல் என்பது இலங்கையில் தமிழ் தேசியத்தின் எதிர்காலத்தையே கேள்விக்குறியாக்கிவிடும். ★

## வரலாற்றுக் கடமையை நிறைவேற்றத் துணியும் மக்கள்

**'சூரியக் கதிர்' படையெடுப்பின் விளைவாக வலிகாமத்தில் இருந்து மக்கள் இடம்பெயர்ந்த நிகழ்வு யாழ்ப்பாணச் சமூகத்தின் இளம் சந்ததியினரிடம் மனக்கிளர்ச்சியை ஏற்படுத்தி உள்ளதாகவும் அதன் காரணமாக அவர்கள் போராட்டத்தில் இணைய முன் வருவதாகவும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த கல்விமான் ஒருவர் ஈழநாதத்திற்கு தெரிவித்தார். அவர் மேலும் கூறுகையில் தமிழினத்தின் படைபலம் பெருக்கப்படுவது ஒன்று தான் எமது வாழ்விடங்கள் சிங்களப் படைகளிடம் பறிபோவதை தடுப்பதற்கு ஒரே வழி. அவ்வாறான படைபலப் பெருக்கத்தின் மூலமாகத் தான் ஏற்கனவே பறிபோய்விட்ட எமது இடங்களை மீட்டெடுக்க முடியும் என்பதையும் தமிழ் மக்கள் மிகத் தெளிவாக உணர்ந்துள்ளனர். இன்றைய காலத்தில் ஒரு வரலாற்றுக் கடமைப்பாடு தம்மீது சுமத்தப்பட்டுள்ளது என்பதை அவர்கள் புரிந்து கொள்கின்றனர்.**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




பிரான்ஸ்

# வெளிநாடுகளில் தமிழர்

புலம்பெயர்ந்த தமிழீழ மக்களிடையே புதிய புத்தெழுச்சி பிறந்திருக்கிறது. 'சூரியக் கதிர்' இராணுவ நடவடிக்கையால் எமது மண்ணில் இருள் பரப்ப நிற்கும் சிறீலங்கா அரசின் நிலை கண்டு கொதித்து எழுந்தார்கள். கொடிய இருளை தகர்த்தெறியும் இடி மின்னல் நெருப்பாக அவர்கள் உளக் கொதிப்பு இருந்தது. மண்ணில் சொந்தச் சகோதரர்கள் துன்பத்தில் வாடல் கண்டு சிந்தை இரங்கித் திரண்ட மக்கள் ஆதிக்க வெறியர்களுக்கு ஒரு செய்தியைச் சொன்னார்கள். அடக்க அடக்க இன்னும் சக்தி மிகக் கொண்டு புதிதாய் எழுவோம் என்று. எழுச்சிப் பேரணியைக் கண்டவர்கள் வியந்தார்கள்.



அவுஸ்திரேலியா



இந்த மக்களுக்கு என்ன பிரச்சினை? அமைதியும் நற்பண்பும் சீலமும் மிக்க இந்த இனம் அனுபவிக்கின்ற துயரம் யாது? இவர்களுடைய தாகம் என்ன? இந்த நூற்றாண்டில் இந்த மக்கள் வெளியிடும் அவர்களது அபிலாஷை என்ன? உலகில் இன்று இவ்வாறு கேட்கப்படும் சூழ்நிலையைத் தோற்றுவிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. தமிழர் படை ஐக்கிய நாடுகள் முன்றலுக்குச் சென்றது. ஐரோப்பிய பாராளுமன்றத்தின் முன்னால் திரண்டது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

தாங்கள் தாங்கள் வதியும் நாடுகளின் பாராளுமன்றங்களின் படிகளில் குழுமியது. தாய் மண்ணில் தம் உறவுகள் அழிக்கப்படுவதை, தம் தாயகம் பறிபோவதை, சுதந்திரமான, கௌரவமான நல் வாழ்வு வேண்டும் என்ற துடிப்பை, சிங்கள இராணுவ அடக்குமுறையை அவர்கள் அமைதி வழியில் எடுத்துச் சொன்னார்கள்.

எமது மண்ணின் போராட்ட சாதனைகள், வெற்றிகள், மக்களிடையே புதிய நம்பிக்கையைத் தோற்றுவித்திருக்கின்றன. சர்வதேச சமூகத்திடம் எங்களது தாயகத்தை அங்கீகரிக்கக் கோரி தங்களாலான அனைத்து முயற்சிகளையும் அவர்கள் தாமாகவே முன்வந்து செய்வதற்கான மன மாற்றம் நிகழத் தொடங்கியிருக்கிறது. எங்களால் எமது தேசத்திற்கு என்ன செய்யலாமோ அதைச் செய்தே ஆகவேண்டும் என்ற எண்ணம் பிறந்திருக்கிறது.

# எழுச்சி!

இது புலம் பெயர்ந்து வாழும் மக்களிடையே புதிய ஒரு விழிப்புணர்வின் வெளிப்பாடே. தாய் மண்ணின் போராட்டத்தோடு தம்மை இணைத்துக்கொள்வதற்கான உச்ச வளர்ச்சி நிலையாகக் கொள்ளலாம்.

www.tamilarangam.net

'சூரியக் கதிர்' இராணுவ நடவடிக்கை வெளிநாடுகளில் வாழும் மக்களிடையே கடும் கோபத்தை தோற்றுவித்திருக்கிறது. சந்திரிகாவின் சமாதான தேவதைத் தோற்றத்தை, தேர்தல் வெற்றிக்கான நாடகமாகக் கண்டு கொண்டார்கள்.

அறிவும், ஆற்றலும், வீரமும், தியாகமும், அர்ப்பணிப்பும் மிக்க தமிழ் தேசிய இனம் பற்றி உலகம் நன்கு உணர்ந்து வருகிறது.


அந்த இனத்தின் எழுச்சி, விடுதலைப்பற்றுணர்வு, சுதந்திரதாகம் எத்துணை உச்சமானது என்பதை உலகம் உணரத் தொடங்கி விட்டது.

சிறீலங்கா அரசு இனவெறி கொண்டு தமிழினப் படுகொலையை கட்டவிழ்த்து வருகிறது. தேசிய இனமாக விளங்கும் தமிழ்ச்சமூகத்தின் முன் கட்டவிழ்த்து விடப்பட்டிருக்கும் அரச பயங்கரவாதத்தை உலகுக்கு தமிழர்கள் அமைதியான எழுச்சிப் பேரணிகள் மூலம் எடுத்துச் சொல்லி வரும் போராட்டம் தொடரும்; விடுதலை வரை ஓயாது. புலம்பெயர்ந்த தமிழ் மக்கள் மத்தியில் தோன்றியுள்ள எழுச்சி அவர்கள் தாயகம் நோக்கிய பயணத்தையே குறியாகக் கொண்டிருக்கின்றது.

இம்மக்களால் உலக அரங்கில் சிறீலங்கா தொடர்பான மாயை கிழித்தெறியப்பட்டு வருகிறது.



சுவிஸ்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# விஸ்வாமித்திரன்

**யாழ். பல்கலைக்கழக கலை வாரப் போட்டி - 1994 இல் முதல் பரிசு பெற்ற சிறுகதை**

பல்கலைக்கழகத்தில் 'வெல்கம் பார்ட்டி' மண்டபம் அமளிப் பட்டுக் கொண்டிருந்தது. வண்ண வண்ணச் சட்டை போட்ட சிட்டுக் குருவிகள், காஞ்சிபுரம், பனாரஸ்கள் படபடக்க அங்குமிங்கும் அசைந்து கொண்டிருந்தன. மீசை இல்லாத முகங்கள் அதை வளர்க்கப்போகும் பெருமிதத்துடனும் அச்சம் நீங்கிய சிநேகபாவத்துடனும், மூத்தோருடன் உரையாடிக் கொண்டிருந்தன. கதிரைகளுக்குப் பால்மாற்றி மாற்றி இலக்கம் ஒட்டப்பட்டிருந்தது. யாரோ ஒரு கவிஞன் வரவேற்புரையைக் கவிதையிலே எழுதித் தன்னுடைய கவித்துவத்தை வீணடித்துக் கொண்டிருந்தான். இந்த அமளியிலே அவனது கவிதையை ரசிக்க யாருக்கு வேலைமெனக்கேடு இருக்கப்போகிறது? குதிரை வால்ச்சடைப் பெண்கள் மேடையில் பேராசிரியரின் சால்வையில் ஒரு நூல் இழுபடுவது பற்றிச் சம்பாஷித்துக் கொண்டிருந்தனர். ஆண்கள், அவர்களுள் ஒருவன் மரக்காலைக் குஞ்சரின் மகள் முழங்காலுக்கு மேலே பாவாடை கட்டுவது பற்றிச் சொல்ல, அதைச் சுவாரஷ்யமாக விவாதித்துக் கொண்டிருந்தனர்.

மேடையில் நிகழ்ச்சிகள் தொடர்ந்து நடந்து கொண்டிருந்தன. "பச்சைக் கிளியே - வாவா" முதல் பல்வேறு இலக்கியத்தரம் வாய்ந்த பாடல்கள்(?) மாணவர்களால் தூஷணிக்கப்பட்டுக்கொண்டிருந்தன. ஒருவன் யேசுதாசின் 'ஏழிசைக் கீதமே'வில் உச்சத்தைத் தொடமுடியாமற் 'கொராவிக்' கொண்டிருந்தான். பெண்களுக்குச் சமையற்கலையை நினைவூட்டப் போலும் மேடையின் நாலாபுறங்களிலும் கத்தரிக்காய்கள் கட்டித் தொங்கவிடப்பட்டிருந்தன. ஊதிய பலூன்களோடு வேறு சிலவும் ஆங்காங்கே காணப்பட்டன. அவை போதியளவு காற்றழுத்தப்படாத பலூன்களாக இருக்கலாம் என கணேஷ் அப்பாவித்தனமாக நினைத்துக்கொண்டான். "தம்பி உங்களுக்கு என்ன பேர்?" வாய்க்குள் கற்கண்டு மொறமொறக்க ஒரு காஞ்சிபுரம் கனகாம்பர மாலையில் மயிர்ச்சிக் கெடுத்தபடியே கேட்டது.

"கணேஷ்" மிகச் சுருக்கமாக பதிலளித்தது அதற்குத் திருப்தியளிக்கவில்லைப் போலும். சரமாரியாகக் கேள்விக் கணைகள் தொடுபட்டுக் கொண்டிருந்தன.

"சிலீர்..." எனச் சப்தித்தபடி ஒரு அறைக்கதவு திறபட, சில நாற்காலிகள் தம்பாட்டில் பல்டி அடித்தன. இரண்டு பேர் தள்ளாடியபடி வந்து புதுமுக மாணவர்களைத் தமது புனிதப் பணியிற் பங்காற்ற அழைத்தனர்.

"பல்கலைக்கழக மாணவர்களுக்கு நாம் சகல வசதிகளும் செய்து கொடுப்போம். அவர்களைச் சமூகத்திற்குப் பயன்படும், தலைமை தாங்கும் நற்பிரஜைகளாக உருவாக்குவதே எமது நோக்கமாகும்..." சிறப்பு விருந்தினரின் உரை மேடையில் தொடர்ந்து கொண்டிருந்தது.

"மச்சான் ஒருக்கா எழும்பி வாங்கோ" ஒரு சீனியர் மாணவனின் குரலுக்குப் பதிலாகக் கணேஷ், அவன்பின் தொடர்ந்தான்.

"இதிலை இரும், கொண்டு வாறன்" அவன் எதையோ எடுக்கச் சென்றான். அங்கு நின்றவர்களின் நிலை அவனுக்குத் தப்பான இடத்துக்கு வந்திருக்கிறோம் என்பதை உணர்த்தியது. அவன் இப்போது தனது முன்னைய கதிரையில் இருந்து கொண்டான்.

★★★

மேடையில் இருவர் ஆடிக்கொண்டிருக்க ஒருவரின் புகை பெண் வேடமிட்டவரின் பொன் முகத்திற் கரியடித்துக்கொண்டிருந்தது. அவரின் கைகள் தப்பான இடங்களை

**பா. மகாலிங்கசிவம்**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

ஸ்பரிசித்துக் கொண்டிருந்தன. ஏனோ கணேசுக்கு சின்ன வயதில் வாத்தியார் என்று வீட்டில் நின்ற தென்னை மரங்களுக்கு அடித்தது ஞாபகம் வந்தது.

"நீங்க புறோகிராம் ஒண்டும் குடுக்கேலையே" மற்றப்பக்கத்தில் இருந்த மாணவி புதிய கோணத்தில் உரையாடலைத் தொடங்க முயற்சித்தாள். அவளது நளினமான அந்தப் பேச்சும் அபிநயிப்பும் அவனுள் ஆச்சரியம் விளைத்தது.

"என்ன மச்சான் கூட்டிக்கொண்டு போகச் சொல்லாமக்கொள்ளாம ஓடி வந்திட்டீங்கள். கம்பஸ் மரபை 'ஜூனியேசு'க்குச் சொல்லிக்காட்டி நாளைக்கு எங்கள்ள எல்லே பிழை சொல்லுவாங்கள்"

"இல்லை அண்ணை எனக்கு இதுகள் பழக்கமில்லை"

"அப்ப என்ன நாங்க எல்லாம் பிறக்கேக்கை இதுகளோடயே பிறந்தனாங்கள், எல்லாம் பழகிறதுதான்"

அவன் எதுவும் பேசாமல் தலையைக் குனிந்து கொண்டான்.

"அது வலது குறைஞ்சது; இருக்கட்டும் நீங்க வாங்கோடா" யாரோ சிவப்புக்கண் ஒன்று ஆணையிட ஏனையவை பின்வாங்கின. அவன் கூட்டத்தைப் பார்த்தான். 'கமரா'க்கள் வெளிச்சம் விதைத்தும் சோடி சோடியாக உள்ளே சிறைப்பிடித்தும் கொண்டன. பலர் இடங்களை மாற்றி மாற்றியும் நிலைகளை மாற்றி மாற்றியும் 'கிளிக்' செய்து கொண்டிருந்தனர். ஆனால் அவர்கள், அவர்களாகவே இருப்பது அவனுக்குச் சிரிப்பு விதைத்தது.

"மிஸ் எக்ஸ்கியுஸ்மீ கொஞ்சம் தள்ளியிருக்கிறது உங்களுக்குப் பிரச்சினை இல்லையே?" அவனது நண்பன் சந்திரன் பக்கத்தில் அமர்ந்து கொண்டான். அவனது உதட்டிலும் இப்போதுதான் மீசை மீண்டும் முகங்காட்டத் தொடங்கியிருந்தது.

"என்னடா யோசித்துக் கொண்டிருக்கிறாய்?"

"ஒண்டுமில்லை நிகழ்ச்சியளைப் பாக்கச் சிரிப்பாக்கிடக்குது."

"அதவிடு! வாவன் கொஞ்சம் பாவிச்சிட்டு வருவம் - ஏன்ரா 'சீனியேஸ்' வந்து கேக்க மாட்டனெண்டனியாம்..?"

அவனது பேச்சினூடு கலந்த வாசனை கணேசுக்கு அவனை இனங்காட்டியது.

"எட வீட்டதெரிஞ்சுபோம் எண்டு பயப்பிடுறியே இந்தக் கதையளொண்டும் வெளீல போகாது. கொஞ்சம் இதண்டிட்டு வந்து பேசாம இரன்... 'கம்பசுக்கு' வந்தா 'என்ஜோய்' பண்ணப் பழகவேணும்"

"......"

"எட சும்மா இரடா.. என்ன சீதனம் குறைஞ்சுபோம் எண்டு கவலைப்படுகிறியே... வீட்டிலை உனக்குங் கஷ்ரந்தான் எனக்குங் கஷ்ரந்தான். வெளீல நல்ல பிள்ளையாய்ப் போவம்... என்ன யோசிக்கிறாய்? இரு சாந்தனையும் கூட்டிக்கொண்டு வாறன்" சந்திரன் அடுத்த விக்கட்டை விழுத்த வேகப்பந்து வீச்சாளனாய் நகர்ந்தான்.

★★★

கணேஸ் மேடையைப் பார்த்தான். ஐந்து ஐந்து பலூன்களாய் கட்டியிருந்த குலக்கில் ஒரு பலூனைக் காணவில்லை. கட்டு இறுக்கமில்லாததாற் கழன்றிருக்கும் என்று எண்ணிக் கொண்டான்.

அவனுக்கு ஒரு பெரிய நீர்ப்பிரளயத்தின் நடுவே யாருங் காணாமல் தானும், தன் நண்பர்களும் மூச்சு முட்ட நீந்துவதாக அடிக்கடி வந்து கிளுகிளுக்கும் கனவு நினைவில் வந்தது. அவனுக்குப் 'பாவித்த' சந்தோஷம் பற்றிய நண்பர்களின் மகிழ்ச்சியூட்டும் கதைகள் வந்தன.

★★★

இப்போது பக்கத்தில் திரும்பிப் பார்த்தான். அந்தப் பெண் அழகாகவும் கவர்பவளாகவுந் தோன்றினாள். மேடை அலங்காரங்கள் அவனுக்கு ரசிப்பைத் தந்தன. அதில் ஆடிக் கொண்டிருப்பவர்களே உண்மையான பல்கலைக்கழகங்களாகத் தோன்றினர். "அவவை ஒருக்கா வரச்சொல்லுங்கோ மச்சான்" ஒரு சீனியர் சொல்லப் பக்கத்து இருக்கை வெறிச்சோடியது.

★★★

கணேசுக்கு அப்பா இல்லை. அம்மா கூலிவேலை செய்து தன்னைப் படிக்க வைத்தது நினைவு வந்தது.

கணேசுக்கு, நேற்றுத் தங்கைக்குக் கொப்பி வாங்கக் காசில்லை என்று பொய்சொல்லி, தனக்குக் கேட்டு வாங்கித் தந்த அம்மா விசுவரூபித்தாள்.

**எமது தேசத்தின் எதிர்கால சிற்பிகளாக ஒரு புதிய இளம் பரம்பரை தோற்றங்கொள்ள வேண்டும். ஆற்றல் மிகுந்தவர்களாக அறிவுஜீவிகளாக, போர்க்கலையில் வல்லுனர்களாக, நேர்மையும் - கண்ணியமும் மிக்கவர்களாக, ஒரு புதிய - புரட்சிகரமான பரம்பரை தோன்றவோண்டும்; இந்தப் பரம்பரையே எமது தேசத்தின் நிர்மாணிகளாக, நிர்வாகிகளாக, ஆட்சியாளர்களாக உருப்பெறவேண்டும்.**

**- தமிழீழத் தேசியத் தலைவர் -**

கணேசுக்குச் சற்றுத் தூரத்தில் சந்திரனுடன் வாதாடிக்கொண்டிருக்கும் சாந்தன் பார்வைக்கு வந்தான்.

திடீரெனச் சாந்தன் சுருங்கிக் கொண்டு போவதாய்த் தெரிந்தான். மேலும் மேலும் அவன் சிறுத்துக் கொண்டே போனான். கால்களும், கைகளும் சின்னஞ் சின்னதாக நெருப்புக்குச்சி அளவாக அவன் சுருங்கிக் கொண்டிருந்தான். கணேசுக்கு நம்ப முடியவில்லை. கிள்ளிக் கொண்டான். உண்மைதான்.

★★★

கணேஸ் பார்த்தான், சந்திரனை. அவன் இப்போது பெரிது பெரிதாக வளர்ந்து கொண்டிருப்பது தூரத்திலேயே தெரிந்தது. ஏதோ பயங்கர மிருகம் போல் பூதம் போல் கறுப்புக் கறுப்பாக அவன் வளர்ந்து கொண்டிருந்தான். அவனிலிருந்து இரண்டு பற்கள் பளபளப்புடன் பெரிதாக நீட்டித் தெரிந்தன. அதில் ரத்தம். சொட்டச் சொட்ட ரத்தம், உறுஞ்சிய அடையாளம் தெரிந்தது. அதன் கண்கள் கோரச் சிவப்பாகத் தெரிந்தன. அதன் உடல் முழுதும் வெள்ளை வெள்ளையாக நுரை நுரையாக ஏதோ மிதந்துகொண்டிருந்தது. அது ஒரு கையில் சின்னச் சாந்தனைப் பிடித்துக் கொண்டு எழுந்தது.

★★★

கணேசுக்கு அந்தக் கனவுகள் மீண்டும்... நண்பர்களின் கதைகள் மீண்டும்... நினைவுக்கு வந்தன அருகிலிருந்த உற்சாகமான உலகில் நினைவில்.

அம்மாவும் தங்கையும் மீண்டும் நினைவில்! சந்திரன் கூட்டிச்செல்ல வந்த போது கதிரை வெறிச்சோடி இருந்தது. ✡

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# சாலப்பொருந்தும் சட்டம் வந்தாச்சு "ஏலவிற்பனை" இனியிங்கில்லை!

மின்னாமல் ஒரு ஆனந்தப்பேரிடி
எம் மண்ணில் இறங்கியது.
நிலம் கிழித்தோர் நீரூற்று
குபுகுபுவென்று கொப்பளித்துப்
பூமியை நனைத்துப் போகிறது.
எந்த ஆரவாரமுமற்று
அக்னிக் குஞ்சுக்கு அடைவைத்து விட்டோம்.
நாளை பொரிக்கும்.
பொல்லாப் பிழையை பொசுக்கும்
பெரியமலையைப் புரட்டுவதற்காக....
அடிவாரத்தில் அலவாங்கு குத்தி விட்டோம்
நாளை மலை சரிந்து போக
சமநிலையிங்கு தர்மமாகும்.
உள்ளே கொதிக்கும் உலைக்களங்கள்
இனி ஆறி அடங்கும்.
சுடுமூச்சாகிச் சுவரிடிக்கும் பெருமூச்சுக்களின்
சோகமினித் தொலைந்து போகும்.
மலரில் மதுவருந்தி மயங்குவதற்காக
வண்டுகளுக்குப் பூக்கள்
வரதட்சணை கொடுப்பதில்லை,
காளை மாட்டுக்கு கலியாணச்சீர் கொடுக்கும்
பழக்கமேதும் பசு மாட்டுக்கில்லை,
ஆண்நாய் பெண் நாயிடம்
ஆறுலட்சம் கேட்பதில்லை
மானிடனுக்கு மட்டும் ஏனிந்த இழிநிலை
அதுவும் தமிழனென்றால்...
பிள்ளையை விற்பதில் அவனே பெரியபுள்ளி
மதங்களேதும்
மணக்கொடையை ஆதரிக்கவில்லை
தெய்வங்களெவரும்
சீதனம் வாங்கியதாகத் தெரியவில்லை.
பார்வதிக்குப் பாதியுடல் கொடுத்து
பரமசிவன் அர்த்த நாரீஸ்வரரானார்.
சரஸ்வதியை நாக்கிலே தூக்கிவைத்து
பிரம்மா பெரிய கடவுளானார்.
உள்ளே சென்று உற்றுப்பார்த்தால்
ஆண்டவன் சந்நிதானங்கள் அனைத்திலும்
ஆணும், பெண்ணும் அரையரைவாசியே
பெண்ணைச் சக்தியென்றார் பாரதியார்,
பெரும் சக்தியென்றார் விவேகானந்தர்
தாய்மையின் வடிவமென்றார் பரமஹம்சர்
இவையொன்றும் காதல் வாழ்வுக்குக்
கைகொடுக்க மாட்டாது என்றாலும்,
பெண்ணே பெரியவள்
மாதா; சக்தி
மனைவி; பெரும்பொருள்
மகள்; பிரமிப்பின் பேரொளி.
காதற்குளிப்பில் உடலாறும் போதுதான்
மனிதன் 'ஞானி' ஆகின்றான்
அந்தக் குளியலுக்கு எவனும் காசு வாங்கினால்
அவன் 'பாவி' ஆகின்றான்.
பத்துலட்சம் காசும்,
பன்னிரண்டு பரப்புக் காணியும்
நாற்பது பவுணில் நகையும் வாங்கி
ஏலத்தில் தன்னைக் கூவிவிற்றவன்
எந்த முகத்தோடு முதலிரவுக்கு கதவுமூடுவான்?
காசுக்கு தன்னை விற்றவன் வீட்டில்
மகிழ்ச்சியாகக் கட்டிலும் ஆடாது





**வியாசன்**

மனநிறைவோடு தொட்டிலும் ஆடாது.
மீசை முளைத்ததொன்றை வாங்கும் வழியற்று
இரவில் நட்சத்திரங்களை எரித்தபடி
எடுத்ததெற்கெல்லாம் எரிந்து விழுந்தபடி
நரையெறிந்து,
நடைதளர்ந்து,
கோடை மரமாகி இலையுதிர்ந்து போகும்
முதிர்கன்னியரின் வாசல் கடந்து
கலியாண ஊர்வலம் போகும் போது
யன்னல் கம்பிகளில் முகம் உரசி
தீ மூட்டியபடி
அவர்கள்விடும் அக்கினி மூச்சின் அர்த்தம்
எத்தனை பேரைத் தைத்தது?
"மணக்கொடைத் தடைச்சட்டம்"

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




இது புரையோடிப்போன புண்ணுக்கு
தலைவன் செய்த சத்திர சிகிச்சை.
அதர்மத்தின் அடிமுடியை நீறாக்க
பிரபாகரன் இட்ட பெரு நெருப்பு
போகப்பொருளாகவும், காமப்பொருளாகவும்
பெண்ணை எதிர்கொள்ளும் புன்மை தீருமட்டும்
பேச்சளவில் மட்டுமே பெண்விடுதலை.
ஆணாதிக்கத்தின் வேர்கள்
ஐந்து கண்டங்களையும்,
ஏழு கடல்களையும் கடந்து
எங்கும் நிறைந்துள்ளது.
அது ஆவரங்காலிலும் உண்டு
அமெரிக்காவிலும் உண்டு
விகிதாசாரத்தில் கொஞ்சம் வேறுபாடு
அவ்வளவே.
பெண்ணாகப்பட்டவள்
பானைகழுவி, படுக்கை தட்டிப்போடும்
கண்திறந்து மூடும் யந்திரமல்ல
பேசாப் பொருளாகி ஏவலியற்றும்
'றிமோட்கொன்றோல்' பொம்மையுமல்ல
ஆணைப்போல் அவளுக்கும்
சரியாசனம் வேண்டும்
அரியாசனமும் வேண்டும்.
கண்ணகியை உதறிவிட்ட கோவலன்
இன்னொருத்தியுடன் போனான்.
'மாசாத்துவான்' மகனுக்கு
மடிவற்றிப் போனதும்
காற்சிலம்பு கேட்டு
அவள் காலடிக்குத் திரும்பினான்.

பொருளுக்கும், போகத்துக்குமா
பெண்ஜென்மம்?
நிலவுடமைக் காலத்தில்
பெண்ணுக்கு நீதிகிட்டவில்லை
பொருளுடமைச் சமுகத்திலும்
அவள் பெருமையடையவில்லை,
இன்று வரையும்தான்
அவளின் இடர்தீரவில்லை
"சீனத்து மாநாட்டுத் தீர்மானம்"
என்ன செய்யும்?
ஒருபாட்டம் அழுதுவிட்டு ஓய்ந்து போகும்.
இன்று கண்திறந்தது எங்கள்மண்.
போராட்டம் பெண்ணுக்குப்
புதுவாழ்வு தந்தது.
குச்சொழுங்கையெங்கும் பெண்ணின்குரல்
குதூகலிக்கின்றது.
பேரிகையொலிக்கப் பெண்மை நிமிர்ந்து
சூரியனைத் தொட்டு நிற்கிறது.
அவளின் விழிநீர்துடைக்க ஆயிரம் கரங்கள்.
ஊரதிர நிமிர்ந்த வாழ்வு.
பாரதி சொன்ன
"திமிர்ந்த ஞானச் செருக்கு"
"வாடகைக் கனவுகள்"
அற்ற வல்லமைவடிவாய்
பாடுகின்றாள் விடுதலைப்பண்.
எடுத்துவைக்கும் ஒவ்வொரு அடிக்குள்ளும்
இடரழித்து விட்ட இறுமாப்பு.
ஆகாயம் வந்து அடிபணியும் அதிசயம்.
"மணக்கொடைத் தடைச்சட்டம்"
புதிய பாய்ச்சல்
விற்பனைப்பொருளாய் வீட்டில் முடங்கிய
அற்புதங்களே எழுவீர்!
சாலப் பொருந்தும் சட்டம் வந்தாச்சு
ஏலவிற்பனை இனியிங்கில்லை.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# ஆர்னல்ட் ரொயின்பீயின் சவால் ஏற்புக் கோட்பாடும் தமிழீழக் கொள்கையும்

www.tamilarangam.net

## - ஒரு கண்ணோட்டம் -

வரலாற்று எழுத்தியலில் (Historiography) புதிய ஒரு சகாப்தத்தினை தோற்றுவிக்க அடிப்படையாகவிருந்த ஒரு கோட்பாடு தான் ஆர்னல்ட் ரொயின்பீ (Arnold Toynbee)யின் சவால் ஏற்புக்கோட்பாடு (Challenge and Response Theory) ஆகும். பிரித்தானியாவைச் சேர்ந்த, சூழலியல் வாதியான ரொயின்பீ உலகின் பல பாகங்களுக்கும், நதிப்பள்ளத்தாக்குப் பிராந்தியங்களுக்கும் வருகை தந்து அங்குள்ள இயற்கை முறைமைக்கும் மனித வாழ்வியலுக்குமிடையான தொடர்புகளையும், சாதக - சாதகமற்ற நிலைகளையும் அவதானித்ததன் அடிப்படையில், உலக நாகரிக வாழ்வின் வரலாற்றை பல தொகுதிகளாக எழுதி வெளியிட்டார். அவருடைய Study of History என்ற இந்த நூல் 13 பெருந்தொகுதிகளாக வெளியிடப்பட்டது. மேற்குலக நாடுகளினதும், கீழைத் தேயங்களினதும் மனித நாகரிக வாழ்வியலின் பரிணாமத்தினையும் அதன் பரிமாணத்தினையும் பற்றி இவற்றில் மிகவும் விரிவாக ஆராய்ந்த ரொயின்பீ தனது புதிய கோட்பாடான சவால் ஏற்புக் கொள்கையை முன் வைத்து அதன் செயற்பாட்டினை அவ்வுதாரணங்களூடாக எடுத்துக்காட்டி நிறுவியுள்ளார்.



ரொயின்பீயினுடைய கோட்பாட்டின்படி இயற்கைத் தேர்வுக்கும் மனித வாழ்வுக்குமிடையே மிக நெருங்கிய தொடர்பு காணப்பட்டமை சுட்டிக்காட்டப்பட்டது. அதன்படி மனித வாழ்வின் பரிமாணம் அல்லது அதன் போக்கு இயற்கை விதிக்கும் சவால்களினாலேயே தீர்மானிக்கப்படுகின்றது என்பதை அவதானிக்க முடிந்தது. இயற்கையின் சவால்கள் எல்லா வகையான ஜீவராசிகளையும் எதிர்கொண்ட போதிலும், அவை மனிதனை எதிர்கொண்ட விதத்தில் மட்டுமே அவற்றிற்கு எதிர் விளைவுகள் ஏற்படக் காரணமாகவிருந்தது. மனித பரிமாணத்தில் சிந்தனை வளர்ச்சி, கருவிகளின் கண்டுபிடிப்பு, இயற்கைத் தேர்வினை வெற்றி கொள்ளும் திறன் என்பன போன்ற செயற்பாடுகள் ஏற்படுவதற்கு அடிப்படையாக இருந்த காரணி இச் சவால் ஏற்புக்கொள்கையே என ரொயின்பீ விளக்குகின்றார். அதாவது இயற்கைக்கெதிராக மனிதன் மேற்கொண்ட எதிர் நடவடிக்கைகளின் தோற்றப்பாடே அறிவியல் சாதனைகள் என்பதனை ரொயின்பீ மறைமுகமாக எடுத்துக்காட்டுகின்றார். உலகில் புராதன நதிப்பள்ளத் தாக்குகளில் வாழ்ந்த மக்கள் கூட்டத்தின் எதிர் நடவடிக்கைகளே

செ. கிருஷ்ணராசா

ஆங்காங்கு நாகரிக வாழ்வு உதயமாவதற்குக் காரணமாகியது என்பது ரொயின்பீயினுடைய கோட்பாட்டின்படி ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒன்றாகும். இவ்வடிப்படையிலேயே உலக நாடுகளின் வரலாற்று வளர்ச்சிப்போக்கு அமைந்து கொண்டது என்பதும் அன்று ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு கருத்தமைவாகவிருந்தது. நாடுகள் பற்றிய வரையறை, தேசியம் பற்றிய வெளிப்பாடு, மொழிவளர்ச்சி பற்றிய அளவீடு, மதம் பற்றிய கோட்பாடு யாவும் ரொயின்பீயின் சவால் - ஏற்புக்கொள்கையின் ஊடாகவே சட்டகப்படுத்தப்பட்டிருந்தன. ஆனால் அண்மைக்காலத்தில், உலகுபற்றிய நோக்கவிதானத்தைப் பொறுத்தவரையில் ரொயின்பீயினுடைய இயற்கைத் தேர்வினை விட - அதற்கும் அப்பால் உள்ள - இன்னொரு புதிய முறைமை - மக்கள் வாழ்வு தொடர்பாக, நாடுகளின் தோற்றம் தொடர்பாக, அறிவியல் சாதனைகள் தொடர்பாக இணைக்கப்பட்டுள்ள முறைமை எடுத்துக்காட்டப்பட்டுள்ளது. அத்தகைய ஒரு புதிய முறைமையின் பின்னணியிலேயே இன்றைய யப்பான் அதன் பரிமாணத்தை வளர்த்தெடுத்துக் கொண்டுள்ளது என்றால் அது மிகையாகாது. அதே போன்றதொரு புதியமுறைமையின் செயற்பாடு இன்று தமிழீழம் என்ற கொள்கை வடிவத்தினை உருப்படுத்துவதற்காக மேற்கொள்ளப்படும் நடைமுறைகள் வெளிப்படுத்த முனைந்துள்ளமையை அவதானிக்க முடிகிறது. எனவே இச் சிறிய கட்டுரையின் கண் உலகநோக்குப் பற்றிய அப்புதிய முறைமைக்கும் 'தமிழீழம்' என்ற கொள்கை வடிவத்திற்கான நடைமுறையாக்கங்களுக்குமிடையே உள்ள இயைபு விதியமைவுகளை ஆராய்வது நோக்கமாகின்றது.

### புதிய விதி

ஒரு நாட்டினதோ அல்லது மக்களதோ மேம்பாடு இப்பொழுது இயற்கை விதியில் தங்கியிருக்கவில்லை என்பது அண்மைக்காலக் கருத்தோட்டமாக உள்ளது. அதாவது கட்டிட தளத்துக்கான சதுரமாதிரிகள் (Bulding Blocks) எங்கிருந்து தோற்றப்பாடு பெற்றது என்பதை விட, அவற்றை வைத்து எங்கெங்கு வேண்டுமானாலும் உருவாக்கிக் கொள்ளப்படும் கட்டுமாணத்தின் செயற்பாடே அல்லது அதன்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

தொழிற்பாடே கவனயீர்ப்புக்குரிய தாகின்றதே தவிர அக்கட்டித்தின் (Building Blocks) வர்ண - மூலக்கூறு வேறுபாடுகள் கருத்திற்கெடுத்துக் கொள்ளப்படுவதில்லை. இதே போன்று புதிய ஒரு நாட்டின் தோற்றம், அதன் உருவாக்கம், வளர்ச்சி, அறிவியற்துறைச் சாதனைகள், அவற்றின் மனித நலப் பயன்பாடு என்பன இப்புதிய விதியைத் தழுவிய வகையில் எடுத்துக்காட்டப்படுகின்றன. எவ்வகையிலும் ஆர்னல்ட் ரொயின்பீயின் 'இயற்கை விதி'க் கோட்பாட்டுச் சட்டகத்திற்குள் இன்றைய 'ஜப்பானுடைய முன்னேற்றம்' உள்ளகப்படுத்தப்பட்டதாக அமையவில்லை என்பதே ஜப்பானிய இளம் ஆய்வாளர்களது கருத்தோட்டமாகவுள்ளது. அவ்வகையில் ஜப்பானுடைய பண்பாட்டில் அதன் முழுமையான தனித்துவமான தோற்றப்பாடே கவனயீர்ப்புக்குரியதாகின்றதே தவிர, அப்பண்பாட்டு உருவாக்கத்துக்குரிய மூலங்கள் அல்ல என்பது இப்பொழுது எடுத்துக்காட்டப்பட்டுள்ளது. ஆனால் ரொயின்பீயினுடைய தத்துவத்தின்படி 'பண்பாட்டு மூலங்களே' வரலாற்றக் கட்டுமானத்தில் கவனயீர்ப்புகுரிய பொருளாகின்றது என்பது மனங்கொள்ளத் தக்கது.

அவ்வகையில், புதிய விதியின் படி, தொழிற்பாட்டு ரீதியான வடிவமே இன்றைய உலக நாகரிக வாழ்வில் பெருஞ் செல்வாக்கு செலுத்துகின்றது என்பது வெளிப்படையாகின்றது. பல வர்ணங்கள் அல்லது உள்ளகப் பண்பினையுடைய கட்டிடதளத்துக்கான சதுர மாதிரிகள் (Building Blocks) கொண்டு அமைக்கப்படுகின்ற உருவத்தோற்றம் தொழிற்பாட்டு ரீதியில் ஒரு பாடசாலைக்குரியதாகவோ - அல்லது சினிமா படக்கூடமாகவோ - ஆத்மசாந்தி தரும் திவ்விய மண்டபமாகவோ - அறிவியல் கூடமாகவோ தொழிற்படக்கூடும். ஆனால் அங்கு அவை தோற்றுவிக்கப்பட்ட முறைமை, மூலப்பொருட்கள், வர்ணம் பற்றிய பிரச்சினைகள் எழுப்பப்படுவதேயில்லை. அவ்வகையில் ஒட்டுமொத்தமான பயன்பாட்டு வடிவமைப்பே பண்பாட்டு வெளிப்பாடாக இப்பொழுது கொள்ளப்படுகின்றது. ஜப்பானில் இத்தகைய ஒரு பண்பாட்டு வெளிப்பாட்டை கி.பி. 1912 வரையுமுள்ள 'மேஜிப் புரட்சிக் காலம்' ஆக்கிக் கொடுத்திருந்தது. ஜப்பானிய வரலாற்றிலேயே ஒரு தனித்துவமான காலப்பகுதியும் இதுவாகும். இக்காலத்தில் பக்கம் பக்கமாக ஜப்பானிய பராம்பரியமும் நவீனத்துவமும் சம வளர்ச்சியடைந்திருந்தன. எல்லாத்துறைகளையும் நோக்கிய அறிவியல் வளர்ச்சிக்கான நிறுவனங்கள் உருவாக்கிக் கொடுக்கப்பட்டிருந்தன. அந்நிறுவனங்களின் தொழிற்பாட்டு ரீதியான பயன் இதுவரைக்கும் சமபலமற்றிருந்த ஜப்பானிய சமூகத்தினைப் பின்னர் சமத்துவமுடைய சமூகமாக எஞ்சிய உலகுடன் வாழ வழி சமைத்தது. அதன் வெளிப்பாடாக முதலில் அமைந்த நிகழ்வே முதலாம் உலக மகாயுத்தத்தில் ஜப்பானையும் பங்கு கொள்ளச் செய்த சம்பவமாகும்.

'இராணுவ இயல்' ரீதியாக ஜப்பானிய மக்கள் அடைந்திருந்த வளர்ச்சியின் பெறுபேறே முதலாவது மகாயுத்தத்தில் அவர்கள் ஈட்டிக் கொண்டிருந்த வெற்றியாக அமைந்தது. இப் பின்னணியில் அவ்வுதாரணத்தினை 'தமிழீழம்' என்ற கொள்கை வடிவத்திற்கான நடைமுறை ஆக்கங்களுடன் இணைத்து நோக்க முடிகிறது. அதாவது கி.பி. 1868-ம் ஆண்டுக்கு முன்னர் ஜப்பானிய சமூகம் மேற்குலக வல்லரசுச் சமூகங்களின் மத்தியில் 'ஒரு சிறுபான்மை' நிலையிலேயே காணப்பட்டது. ஆனால் மேஜி நிறுவனத்தின் பயன்பாடு அச்சமூகத்தை மிக விரைவாக சமத்துவமான நிலைக்கு உயர்த்தி வைத்துவிட்டது.

கி.பி. 1914-ன் பின்னர் மேற்குலக வல்லரசுகளுடன் சமத்துவ ஸ்தானத்திலிருந்து உலக விவகாரங்களை நிர்வகிக்குமளவிற்கு ஜப்பான் வளர்ந்தமையானது அப்புதிய விதியின் செயற்பாட்டு வடிவத்தினை விளக்குவதாக உள்ளது. இப்புதிய விதியே இன்று தமிழீழம் என்ற கொள்கை வடிவத்திற்கான நடைமுறைகளுடன் இணைத்துப்பார்க்கப்படுகின்றது. இங்கு சிறுபான்மை என்ற சமத்துவமற்ற நிலை இராணுவ இயல் வளர்ச்சி அடிப்படையில் சமத்துவமான நிலைக்கு இட்டுச் செல்லப்படும் ஒரு நடைமுறையைக் கொண்டிருப்பதனைக் காணலாம்.

இப்புதிய கோட்பாட்டின்படி, புதியதொரு நாட்டினை சமைத்துக் கொள்ள 'தொடர்ச்சியான பாரம்பரிய நிலைத்தொடர்புகள்' அவசியமற்றதாகின்றன. கட்டிட தளத்துக்கான சதுரமாதிரிகள் (Building Blocks) கொண்டு எவ்விடத்திலும் உருவாக்கம் பெறுகின்ற அமைப்பானது அதன் தொழிற்பாட்டு முறையிலேயே மக்களின் பண்பாட்டினை உருவாக்கிக் கொள்கிறது. கனடா நாட்டுத் தேசிய வாதமும் நாட்டுப்பற்றும் இதன்பாற்பட்டதே.

அவ்வகையில் ஆர்னல்ட ரொயின்பீயினுடைய 'இயற்கைவிதி' பண்பாட்டு உருவாக்கத்தில் இப்பொழுது செல்வாக்கு இழந்து விட்ட நிலையையே வெளிப்படுத்துகின்றது எனக் கூறிக்கொள்ளலாம்.

உசாத்துணை நூல்

**Japan Echo. Special issue (Japan's View of the World) 1995.**

## பிரச்சாரத்தின் பின்

**- சத்துருக்கன்**

'இரத்தத்தின் துர்நாற்றம்
தொலைந்து விட,
என்னை அரவணையுங்கள்....
நான் புன்னகை மலர்களைத்
தருவேன் - என்று
கையசைத்து எழுந்தாயே?
அப்போது
உன் வெள்ளைச் சிரிப்பில்
உலகம் மயங்கி நின்றது
நீ
வெண்சேலை கட்டி வந்தபோது
நானும் வெண்மையைப்
பரிமாற முன்வந்தேன்.
எனது தூய்மையின் ஒளியில்
உனது விழிகள் கூச
வெறித்துப் பார்த்துப் பார்த்து
முடியாதென்று சென்ற பிறகும்
'வெண்மையைத் தூதுவிடுவேன்' - என்று
இருளுள் முனகுகிறாயே!
உனது வெண்மையின்
வஸ்திரத்துள்
மறந்து கிடக்கும்
வர்ண வஸ்திரத்தை
உருமறைப்புச் செய்துள்ளதாகவே
நான் உணர்ந்து கொண்டேன்.
நீ இன்று போருக்கு என்னை அழைக்கின்ற
எக்காளத்தின் அதிர்வில்
உனக்கு வியர்த்துக் கொட்டுகிறது.
உடலின் வியர்வைத்துளிகளை
துடைத்துக்கொள்.
பதட்டம் கொள்ளாதே!
பிறகு...
எப்படியுள்ளாய்?

www.tamilarangam.net

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தமிழ்நாட்டில்...




"செந்தமிழினத்தவர் இந்நில
வுருண்டையில்
எந்தப் பகுதியில் இருந்தாலும் - அவர்
சொந்தம் நமக்கே நாமவர்க்கென்றும்
சொந்தம் சொந்தம் என்றுரைப்போம்!
உந்தும் உணர்வும் உறவும் அவர்பால்
உண்டுண் டென்றே முழக்கிடுவோம்! -
அவர்
சிந்தும் கண்ணீர் செந்நீர் எதற்கும்
சீறி யெழுந்தே வழக்கிடுவோம்!"

என்ற பாவலரேறுவின் பாவரிக ளில் நெஞ்சம் தோய்ந்த நிலையில் தமிழகத் தமிழர்களுக்கு கீழ்க்கண்ட அறைகூவலை விடுத்தோம்.

"மானவுணர்வுள்ள தமிழர்களே!

நம் அண்டை நாடான ஈழநிலத் தில் தமிழினமே இல்லாமல் செய்வ தற்கான அனைத்து முயற்சிகளும் மிக மிகத் திட்டமிட்டுக் கட்டுப்பா டின்றிச் செய்யப்படுகின்றன. 'இந்தி' யப் பார்ப்பன வெறி அரசின் கர வான கைக்கோப்போடு சந்திரிகா அரசு, கோரக் கொலைவெறியாட் டத்தை தமிழ்க்குலத்தின் மீது நடத் துகிறது.

சிங்களப்படை வீரர்களின் துமுக் கியிலிருந்து பீறிட்டுக் கிளம்பும் குண்டுகளாலும் 'பீரங்கி'களின் வெடி குழலிருந்து வெளிக்கிளம்பும் வேட் டோசையாலும் ஏதுமறியா தமிழர்

## ஈழத்தமிழர்களின் துயரங்களை

கள் அலறித்துடித்து மடிந்தழிகிறார் கள். தப்பிப்பிழைத்து ஆலயங்களி லும் பள்ளிக்கூடங்களிலும் தஞ்சம் புகுந்தவர்கள், சிங்கள் வெறிப்படை வான்வழியே வீசும் 'பெற்றோல்' குண்டுகளுக்கும் 'செல்'தாக்குதல்க ளுக்கும் உள்ளாகி கொலையுண்டு வருகின்றனர். குவியல் குவியலாய்த் தமிழர்கள் பிணம் அடக்கம் செய் யவும் முடியாத நிலையில் அழுகி நாறி பிணவாடையில் தகிக்கிறது தமிழீழ நாடு.

தமிழர்களுக்கென்று ஒரு நாடு அமைந்திடக் கூடாதென்பதில் சிங் கள இனவெறிக் காடையர்களை விட இந்தியப் பார்ப்பன வெறிக்கூட்டம் மிகமிக விழிப்போடும் கரவோடும் இயங்கி வருகிறது.

தமிழினத்தில் தவறிப் பிறந்திட்ட தமிழகத்து தறுதலைகள் சிலரும் தங் களின் குறுகிய அரசியல் ஊதியத் திற்காக மானப்போர் புரியும் ஈழத் தமிழர்களின் விடுதலைப் போரை இழித்தும், பழித்தும், எதிர்த்தும், காட்டிக் கொடுத்தும் வருகின்றனர்.




தமிழா!

உலகில் வேறெந்த இனமாவது இப்படிப்பட்ட கொடுமைகளுக்கு ஆட்பட்டதாய் வரலாறு உண்டா?

சொந்த மண்ணிலே வாழ்வுரிமை யற்று, உன்னின மக்கள் ஈவிரக்க மற்ற முறையில் கொடுந்தாக்குதலுக் குட்பட்டு அலறித்துடித்து மடிகின்ற அவல ஓலங்கள் உன் காதில் விழ வில்லையா?

உன் சொந்தத் தமையனும் தம்பி யும் தங்கையும் அக்கையும் உகுத்த கண்ணீரிலும் செந்நீரிலும் ஈழம் மிதப்பது தெரியவில்லையா?

செந்தமிழினத்தை சீரழிக்கும் சிங் களக் காடையரின் வெங்கொடுமைச் செயல் உன் நெஞ்சில் சினத்தீயை எழுப்பவில்லையா?

பீறிட்டுக் கிளம்பும் எரிமலையின் சீற்றத்தோடு எழுந்துவா தமிழா!

கொதித்துச் சூடேறிக் கனல்கின்ற உன் நெஞ்சக் குமுறலை உலகுக்கு ணர்த்த வா தமிழா!"

சிங்கள இனவெறி சந்திரிகா அரசின் கொலைவெறியால், துமுக்கி, செல் பீரங்கித் தாக்குதல்களால் சீரழிந்த தமிழினத்தின் துயரங்களை விளக்கித்தான் இந்தக் காயக்கட்டு ஊர்வலம் நிகழ்ந்தது.

"குவியல் குவியலாய் மாண்டு வரும் தமிழர்க்குக் குரல் கொடுக்கக் குடும்பம் குடும்பமாய் பங்கேற்பீர்!

கட்சியை, சாதியை, மதங்களை மறந்து இனத்தைக் காக்க இணைந்து வாருங்கள் தமிழர்களே!"

என்ற அறைகூவலை ஏற்றது தமிழினம்.

# நினைவுகூரும்

கடந்த 28-07-1995 பிற்பகல் 3.00 மணி

www.tamilarangam.net

தமிழ் நாட்டின் விழுப்புரம் நகரில் தொடர்வண்டி நிலைய முகப்பு வாயிலருகே இனமானவுணர்வு கொண்ட தோழர்கள் குழுமத் தொடங்கினர்.

பல்வேறு அமைப்புகளில், அரசியல் தளங்களில் இயங்கி வரும் தோழர்கள் ஈழதமிழினத்திற்கு ஆதரவாக, இல்லை இல்லை தம்மினத்திற்கு ஆதரவாக ஒருங்கு கூடினர்.

சிங்கள இனவெறிப்படையால் தாக்கப்பட்ட தமிழர்கள் போல காயக்கட்டுக்களுடன் அவர்கள் அணியாய் சென்றார்கள்.

"ஆழக்கடலும் அரசுப் பிரிவும்
அவர்க்கும் எமக்கும் தடையில்லை
- எம்
வேழப் பெருந்தோள் எழுந்தால், தமிழர்
வெற்றி நடைக்கெதிர் நடையில்லை"

என்ற பாவலரேறுவின் பாவரிக்கேற்ப நடையிடத் தொடங்கியது ஊர்வலம்.

உள்ளத்தில் கனன்று கொண்டிருந்த உணர்வுகளின் உணர்ச்சி முழக்கமாய் பீறிட்டுக் கிளம்பியது.

தமிழா தமிழா ஒன்று படு!
தமிழர் உரிமையை வென்று விடு!

பறிக்கப்பட்டது தமிழனின் உரிமை!
மீட்டெடுப்பது தமிழனின் கடமை!

வெல்லட்டும் வெல்லட்டும்!
விடுதலைப்புலிகள் வெல்லட்டும்!

மலரட்டும்! மலரட்டும்!
தமிழீழம் மலரட்டும்!

மைய மாநில அரசுகளே!
ஈழத்தமிழனைக் கொன்றுகுவிக்கும்
இலங்கை அரசுடனான அரசியல்
உறவுகளைத் துண்டித்துக் கொள்!

தடையை நீக்கு! தடையை நீக்கு!
விடுதலைப்புலிகள் இயக்கத்திற்கு
தடையை நீக்கு!




# காயக்கட்டு ஊர்வலம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

உடன்படு! உடன்படு!
ஈழவிடுதலைக்கு உடன்படு!

என விண்ணை முட்டிய முழக்கங்களோடு விழுப்புரம் நகரை உலா வரத் தொடங்கிய எழுச்சிப்பேரணி, கடும் மழைக்குள் நனையத் தொடங்கியது. நெருப்பு மழைகளுக்கிடையில் கருகும் ஈழத்தமிழனை நினைந்து கொட்டும் வான் மழையில் நனைந்து கொள்கை முழக்கமாய் இனவுணர்வைப் பறைசாற்றினர்.

தமிழியக்கப் செயலர் தமிழ் வேங்கை தலைமையேற்கப் புறப்பட்ட இவ்வுணர்வுப் பேரணியை, தமிழ்நாட்டின் முன்னாள் அமைச்சர் திரு. க. பொன்முடி அவர்கள் தொடக்கி வைத்து முழக்கமிட்டார்.

ஊர்வலத்தின் இறுதியில் கொட்டும் மழையிலும் குரல்கொட்டி நடாத்தினர் கூட்டம். இதில் மறுமலர்ச்சி தி. மு. க. வழக்குரைஞர் பாலாஜி, விடுதலைச் சிறுத்தைகளின் வடமண்டலச் செயலர் வழக்குரைஞர் ச. லாரன்சு, த. தே. பொ. கட்சி இராஜேந்திரசோழன், திராவிடர் கழகம் (இரா) வீ. அழகரசன், ம. க. இ. க. நடராசன், பேராசிரியர் த. பழமலை, நெம்புகோல் த. பாலு, புரட்சிகர இளைஞர் முன்னணி இரா. கவிச்செல்வன், பெரியார் அண்ணா பேரவை வீ. ஆர். இரவிச்சந்திரன், த. அன்புகணபதி, சி. அப்பாவு ஆகியோர் குரலார்த்தனர். புதுவை சீனு. தமிழ்மணி, புதுவை சீனு தமிழ்நெஞ்சன், கோ. தாமரைக்கோ ஆகியோரும் வந்திருந்தார்கள்.

எம்மியக்கத் தளபதிகள் - தோழர்கள் 'பிரபா' தண்டபாணி, இரா. காமராசு, ஜோசப் ஆகியோர் பேரணியை ஒழுங்குபடுத்தி வந்தனர்.

கூட்ட இறுதியில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்

1. ஈழத்தமிழினத்தை அழித்துவரும் சிங்கள இனவெறி சந்திரிகா அரசுடனான அனைத்து அரசியல் உறவுகளையும் இந்திய அரசு துண்டித்துக்கொள்ள வேண்டும்.
2. ஈழத் தமிழர்களுக்கு உண்மையான, நிலையான பாதுகாப்புக்கு, பிரபாகரனின் தலைமையிலான தமிழீழ விடுதலைப் புலிகளின் விடுதலைப் போராட்டத்தை ஆதரிப்பதன் மூலம் தனித் தமிழீழத்தை அங்கீகரிக்க வேண்டும் என இந்திய அரசை கேட்டுக் கொள்கிறது.
3. இந்திய மண்ணில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கு விதித்துள்ள தடையை நீக்கி உண்மையான ஆதரவை ஈழத்தமிழர்களுக்கு அளிக்க இந்திய அரசை கேட்டுக்கொள்கிறது.

# தோன்றினும் புகழோடு தோன்றுக! தோன்றிய பின் புலிகளாக மாறுக!

ஈழத்தில் நடக்கும் போரின் நிலையை இந்திய வானொலியாகட்டும், தொலைக்காட்சியாகட்டும் சரியான செய்தியை மக்களுக்கு தெரிவிப்பதில்லை. விடுதலைப்புலிகளை கொச்சைப்படுத்தியும், அவர்களது போரின் பெருமையை, சிறுமைப்படுத்தியுமே எழுதிவருகின்றன. அதிலும் தமிழ் நாட்டு செய்தித்தாள்கள் சொல்லவே வேண்டாம்; எல்லாம் பொய். தமிழக தமிழர்கள் இன்னும் உறங்கிக் கொண்டே இருக்கின்றார்கள். ஈழத்தமிழர்களுக்கு குரல் கொடுப்பவர்களை திட்டமிட்டு நசுக்கப் பார்க்கின்றன மத்திய நரசிம்மராவ் அரசும், மாநில ஜெயலலிதா அரசும். இந்த நிலையில் எல்லாவற்றையும் தாண்டி, பல தமிழக அமைப்புக்களும், கட்சிகளும் இயக்கங்களும் விடுதலைப் புலிகளை ஆதரித்தும், ஈழதமிழர் படுகொலைகளைக் கண்டித்தும் பொதுக்கூட்டங்களை நடாத்தியும் கண்டன அறிக்கைகளை வெளியிட்டும் சுவர்ஒட்டிகளை ஒட்டியும் வருகின்றன. பெருந்திரளான மக்கள், கூட்டமாக ஈழமக்கள் ஆதரவுப் பேரணிகளில் கலந்துகொள்கிறார்கள். தமிழக மாணவர்கள் பல இடங்களில் கல்லூரிகளைப் பகிஷ்கரித்தும், சந்திரிகா, நரசிம்மராவ் கொடும்பாவிகளை எரித்தும் போராட்டங்களை நடத்தி வருகிறார்கள்.

இரத்த தானம், மற்றும் உதவிகளை செஞ்சிலுவை சங்கத்தின் வழியாக அனுப்ப ஏற்பாடுகள் செய்யப் பட்டுள்ளன.

நவம்பர் 1-ம், 2-ம் திகதிகளில் சென்னையில் உலகத் தமிழர் பேரவை சிறப்பான பெரும் பேரணியை நடத்தியது. அதில் ஈழத்தமிழர் படுகொலையை முதன்மைப்படுத்தியே 2 நாள் நிகழ்ச்சிகளும் நடந்தன. அலைகடலென வந்த தமிழர் கூட்டம் புலிகள் என்ற சொல் வந்தாலே கர ஒலி எழுப்பி முழக்கமிட்டனர். உணர்ச்சி கவிஞர் காசி ஆனந்தன் அவர்களும் இப் பேரணியில் கலந்து கொண்டார்.

6-11-95 அன்று திராவிடர் கழகத்தினால் ஒழுங்குசெய்யப்பட்ட மாபெரும் பேரணி தமிழகமெங்கும் நடாத்தப்பட்டது. தருமபுரியில் மாவட்ட இளைஞரணிச் செயலாளர் அ. தமிழ்ச்செல்வன் இப்பேரணிக்கு தலைமை தாங்கினார்.




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தமிழ்மொழியின் ஒட்டமைப்புப் பண்பும் இலக்கியத்தில் அதன் செல்வாக்கும்

பேராசிரியர் அ. சண்முகதாஸ்

'திராவிட மொழியியல் - ஓர் அறிமுகம்' (Linguistics -An Introduction) என்னும் ஆங்கில நூலில் கமில் சுவெலெபில் (1990) "திராவிடமும் யப்பானியமும்" என்னும் இயலில் அருமையான சுவையான கருத்து ஒன்றினை முன்வைக்கிறார். ஜே. வி. நியோஸ்ருப்னி (J. V. Neustupny) என்பவர் யப்பானிய மொழியிலே செறிந்துள்ள ஒட்டமைப்புப் பண்பின் செல்வாக்கினாலே அம்மொழியின் கவிதையிலே அடியிறுதி இயைபுத் தொடைப் பண்பு இல்லாமலுள்ளது எனக் கூறியுள்ளார். இவருடைய கருத்தை ஏற்றுக்கொள்ளும் சுவெலபில் (பக். 119) ஒட்டமைப்புப் பண்பின் செல்வாக்கினாலேயே உண்மையான தமிழ் (திராவிட) யாப்பமைப்பிலும் அடியிறுதி இயைபுத்தொடை காணப்படாமலுள்ளது எனக் கூறுகிறார். சுவலெபில் கூறிச்சென்றுள்ள இக் கருத்துத் தமிழ்மொழிக்குப் பொருந்துவதாயமைகின்றதை ஆராய்வதுடன் அதற்குரிய சான்றுகளை முன்வைப்பதுமே இக்கட்டுரையின் நோக்கமாகும். மொழியின் 'ஒட்டமைப்புப் பண்பு' பற்றியும் செய்யுளில் 'அடியிறுதி இயைபுத்தொடை' பற்றியும் முதலிலே விளக்கம் தரவேண்டும்.

### அ] 'ஒட்டமைப்புப் பண்பு'

உலகிலே ஒட்டமைப்புப் பண்புடைய பல மொழிகள் உள்ளன. திராவிட மொழிகளெல்லாம் ஒட்டமைப்புப் பண்புடையன. திராவிட மொழிகளுள் ஒன்றாகிய தமிழ்மொழியும் ஒட்டமைப்புப் பண்புடையது. ஓர் அடிச்சொல்லுடன் பல ஒட்டுக்களை ஆக்கும் பண்பு தமிழ் மொழியிலே காணப்படுகின்றது. எடுத்துக்காட்டாக 'படி' என்னும் அடிச்சொல்லை எடுத்துக்கொள்வோம்.

| | |
|---|---|
| படி | |
| படி-ந்த்-ஆன் | : படிந்தான் |
| படி-கின்ற்-ஆன் | : படிகின்றான் |
| படி-வ்-ஆன் | : படிவான் |
| படி-த்த்-ஆன் | : படித்தான் |
| படி-க்கின்ற்-ஆன் | : படிக்கின்றான் |
| படி-ப்-ப்-ஆன் | : படிப்பான் |
| படி-பு | : படிப்பு |
| படி-வு | : படிவு |
| படி-ம்-அம் | : படிமம் |
| படி-கை | : படிகை |
| படி-தல் | : படிதல் |
| படி-த்-தல் | : படித்தல் |
| படி-க்க-அ-பட்-அது | : படிக்கப்பட்டது |

பல்லாயிரக்கணக்கான தமிழ்ச் சொற்கள் இவ்வாறு பல அடிச்சொற்களுடன் ஒட்டுக்களை ஒட்டுவதால் ஆக்கப்படுகின்றன. இவ்வாறு ஒட்டுக்களைச் சேர்க்குமிடத்து அவ்வொட்டுக்கள் வேறு மொழிகளிலே தனித்து நிற்பதுபோல் அன்றி, தமிழிலே அடிச்சொல்லுடன் சேர்ந்துவிடுகின்றன. இவ்வாறு சேர்ந்த சொற்களைப் பார்க்குமிடத்து சிற்சில வேளைகளில் மயக்கமேற்படுவதுண்டு. எடுத்துக்காட்டாக, **அவரைக்காய்** என்னும் சொல்லை,

அவரை-காய்

அவர்-ஐ-காய்

என்று இரண்டு வகையாகப் பிரிக்கலாம்.

முதலாவது, 'அவரையினுடைய காய்' என்று பொருள்படும். இரண்டாவது 'அந்த ஆளைக் காய் (சினத்தல்)' என்று பொருள்படும். இத்தகைய இயல்பு தமிழ்மொழியின் ஒட்டமைப்புப் பண்பினாலேயே ஏற்படுகின்றது. தமிழ்க் கவிதைகளுக்கு ஒரு வகையான கவர்ச்சியாற்றலைக் கொடுக்கும் ஓர் அணிவகை இவ்வொட்டமைப்புப் பண்பினாலேயே அமைகின்றது. இதனால் இவ்வணியை ஒட்டணி என்றே பெயரிட்டுள்ளனர்.

"வெள்ளரிக்காயா விரும்பு
மவரைக் காயா
உள்ளமிளகாயா ஒரு
பேச்சுரைக்காயா"

என்னும் பாடலை இரண்டு வகையாகப் பிரித்துப் பொருள்கொள்ளலாம்:

வெள்ளரிக்காயா விரும்பும்
அவரைக்காயா
உள்ள மிளகாயா ஒரு
பே(ய்)ச் சுரைக்காயா

"வெள்ளரிக்காயா? விரும்புகின்ற அவரைக்காயா? பெருந்தொகையாக உள்ள மிளகாயா? ஒரு பேச்சுரைக்காயா?" என்று நாம் உண்ணுகின்ற மரக்கறி வகைகளை நிரைப்படுத்துவதாக இப்பாடலைக் கொள்ளுதல் ஒருவகை.

வெள் அரிக்கு ஆயா!
விரும்பும் அவரைக் காயா!
உள்ளம் இளகாயா!
ஒரு பேச்சு உரைக்காயா!

"வெண்மையான காப்பை அணிந்த பெண்ணே! (உன்னை) விரும்புகின்ற அவரைச் சினக்க வேண்டாம்; (உன்) உள்ளம் இளகமாட்டாயா; (என்னுடன் ஒரு பேச்சு உரைக்கமாட்டாயா!" என்று இன்னொரு வகையிலும் பொருள் கொள்ளலாம். இவ்வாறு இரட்டுறமொழியக் கூடிய பாடல் அமைவதற்குத் தமிழ் ஒட்டு மொழிப் பண்பே வகை செய்கின்றது. "வெள்ளருக்கஞ் சடைமுடியான்...." என்னும் கம்பராமயணப் பாடலிலே "ஒருவன் வாளி" என்று முடியும் இறுதி அடியில், "ஒருவன் வாளி" என்று பிரிக்கும் போது 'ஒப்பற்றவனுடைய அம்பு' என்னும் பொருளையும் "ஒரு வன் வாளி" என்று பிரிக்கும் போது 'ஒரு வலிமை மிக்க அம்பு' என்னும் பொருளையும் தருவது இத்தகைய ஒட்டணிப்பாங்கேயாகும்.

### ஆ] அடியிறுதி இயைபுத் தொடை

தமிழிலே எதுகை, மோனை என்று செய்யுளிலே அமைவனவற்றை ஆங்கிலத்திலே பொதுவாக Rhyme என்று குறிப்பிடுவர். ஆங்கிலம் போன்ற இந்தோ - ஐரோப்பிய மொழிகளிலே Rhyme என்பது கவிதை அடிகளின் இறுதியிலே இடம்பெறுவதாகும். இறுதியில் இடம்பெறும் சீர்களிலோ சொற்களிலோ ஒலியியைபு

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

ஏற்படுகின்றது. எடுத்துக்காட்டாக,

Twinkle twinkle little star
How I wonder what you are
Up above the world so high
Like a diamond in the sky

என்னும் கவிதைப் பகுதியிலே நான்கு அடிகள் உள. முதலிரு அடிகளிலும் பெறும் ஈற்றுச் சொற்கள் star, are என்னும் இரண்டிலும், இறுதி இரண்டடிகளிலும் இடம் பெறும் ஈற்றுச் சொற்கள் High, Sky என்னும் இரண்டிலும் ஒலி இயைபு இடம்பெறுகின்றது.

திராவிட மொழிகளுள் மிக நீண்டகால இலக்கியப் பாரம்பரியமுடையது தமிழ்மொழி. இம்மொழியின் பண்டைய செய்யுட்களை அடிப்படையாகக் கொண்டே சுவெலெபினுடைய கூற்றினை நாம் ஆராய வேண்டும். ஆங்கிலம் போன்ற இந்தோ - ஐரோப்பிய மொழிகளிலே ஈற்றடி இயைபுத்தொடை (Rhyme) காணப்படுவதாக முன்னர் குறிப்பிட்டோம். ஆங்கிலக் கவிதையொன்றை எடுத்துக்காட்டாகக் குறிப்பிட்டுள்ளோம். இந்தோ - ஐரோப்பிய மொழிகளைச் சேர்ந்த சமஸ்கிருதத்தில்,

**அக்னிம் ஈலே புரோஹிதம்**
**யக்ஞஸ்ய தேவாம் ரிக்விஜம்**
**ஹோதாரம் ரத்ரதாதமம்**

என்னும் இருக்குவேதப் பாடலையும் சிங்கள மொழியில்,

**முவ சினி கல்லாஅஸ சினி தல்லா**
**தஹஸக் அவிகென சினியம கல்லா**
**கினி துல் மத்தென் எனியம பல்லோ**

என்னும் பாடலையும் எடுத்துக் காட்டுக்களாகத் தருகின்றோம். இவற்றிலெல்லாம் ஈற்றடி இயைபுத் தொடை இடம்பெறுவதைக் காணலாம். தமிழ்ச் செய்யுட்களிலே இத்தகைய ஈற்றடித்தொகை இடம்பெறுகின்றதா என்பதை நோக்கலாம்.

தமிழ்ச் செய்யுட்களிலே ஈற்றடி ஒலியியைப்புப் பண்பு பிற்காலத்திலேய இடம்பெறத் தொடங்கியுள்ளது. தமிழின் மிகப் பழையனவாகிய சங்க இலக்கியங்களிற் பல செய்யுட்களிலே எதுகை, மோனை ஆகியன அருகியே காணப்பட்டன. புறநானூறு என்னும் நூலிலே எதுகை, மோனை எதுவுமின்றிப் பேச்சோசை அமைப்பிலே பல பாடல்கள் காணப்படுகின்றன.

**“அதெள்ளெறிந் தன்ன நெடுவெண் களரின்**
**ஒருவ னாட்டும் புல்வாய் போல**
**ஓடி உய்தலும் கூடுமன்**
**ஒக்கல் வாழ்க்கை தட்குமா காலே”**

என்னுஞ் செய்யுளை (193) எடுத்துக்காட்டாக்கலாம். பிற்காலத்து யாப்பு இலக்கண நூல்கள் கூறும் எதுகை, மோனை போலன்றிப் பேச்சோசையிலே இடம்பெறும் சில ஒலியியைபுகளையுடையனவாகப் பல செய்யுட்கள் புறநானூற்றிலும் ஏனைய சங்கநூல்களிலும் காணப்படுகின்றன. எடுத்துக்காட்டாகக் குறுந்தொகையிலே,

**“இல்லோ னின்பங் காமுற் றாஅங்கு**
**அரிதுவேட் டனையா னெஞ்சே காதலி**
**நல்ல ளாகுத லறிந்தாங்கு**
**அரிய ளாகுத லறியா தோயோ”**

என்னுஞ் செய்யுளில் (120) ‘இல்லோன்’, ‘நல்லாள்’ என்பன முறையே முதலடியிலும் மூன்றமடியிலும், ‘அரிது’, ‘அரிய’ என்பன முறையே இரண்டாமடியிலும் நான்காமடியிலும் இடம்பெறுகின்றன. இத்தகைய ஒலியியைபு சில பாடல்களிலேயே காணப்படுகின்றது.

**பூழ்க்கா லன்ன செங்கா லுழுந்தின்**
**ஊழ்ப்படு முதுகா யுழையினங் கவரும்**
**அரும்பனி அச்சிரந் தீர்க்கும்**
**மருந்துபிறி தில்லையவர் மணந்த மார்பே**

என்னும் குறுந்தொகைச் செய்யுளில் (68) ‘பூழ்’, ‘ஊழ்’, ‘அரும்பு’, ‘மருந்து’ என முறையே நான்கடிகளின் முதலசைகளிலே ஒலியியைபு ஏற்படுவதையும், ‘பூழ்கால்’, ‘செங்கால்’ என முதலடியிலும், ‘ஊழ்’, ‘உழை’ என இரண்டாமடியிலும், ‘அரும்’, ‘அச்சிரம்’ என மூன்றாமடியிலும் ‘மருந்து’, ‘மணந்த’, ‘மார்பு’ என நான்காமடியிலும் ஒலியியைபு ஏற்படுவதையும் இங்கு எடுத்துக் காட்டலாம்.

பிற்கால யாப்பிலக்கணக் கட்டளைகளுக்கு ஏற்புறும் எதுகை, மோனை, அமைந்த செய்யுட்கள் சங்க இலக்கிய நூல்களுள் கலித்தொகையிலும் பரிபாடலிலும் இடம்பெறத் தொடங்குகின்றன.


**“எறித்தரு கதிர்தாங்கி ஏந்திய குடைநீழல்**
**உறித்தாழ்ந்த கரகமும் உரைசான்ற முக்கோலும்**
**நெறிபடச் கவலசைஇ வேறொரா நெஞ்சத்துக்**
**குறிப்பேவல் செயமாலைக் கொளைநடையந்தணீர்”**


என்னும் கலித்தொகைச் (8) செய்யுளடிகளையும்,

**“புலவரை யறியாப் புகழொடு பொலிந்து**
**நிலவரை தாங்கிய நிலைமையிற் பெயராத்**
**தொகையா நேமிமுதல் தொல்விசை யமையும்**
**புலவராய் பரைத்த புனைநெடுங் குன்றம்”**

என அமையும் பரிபாடல் பதினைந்தாம் பாடலடிகளையும் இங்கு எடுத்துக்காட்டுகளாகத் தரலாம். இத்தகைய எதுகை, மோனையமைப்புத் தமிழ்ச் செய்யுட்களிலே இடம் பெற்று வரலாயிற்று.

இந்தோ - ஐரோப்பிய மொழிச் செய்யுட்களிலே நெடுங்காலமாக இடம்பெற்று வந்த அடியிறுதி ஒலியியைபுப் பண்பும் தமிழ்ச் செய்யுட்களிலே இடைக்காலத்திலே இடம் பெறத் தொடங்குவதைக் காணமுடிகின்றது. ஆனால், இவற்றிலே வழக்




www.tamilarangam.net
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கமாக தமிழ்ச் செய்யுட்களிலே இடம்பெறும் அடிமுதல் எதுகையுடன் ஆங்கிலப் பாடல்களிலே வழக்கமாக இடம்பெறும் அடியிறுதி ஒலியியைபும் சேர்ந்து வருவதைக் காணக்கூடியதாக உள்ளது. நந்திக் கலம்பகம் (கி. பி. ஒன்பதாம் நூற்றாண்டு) கடவுள் வாழ்த்துப் பாடல்களுள் ஒன்றினை எடுத்துக்காட்டாக இங்கு தருகின்றோம்:

**"செழுமலர் துகைதரு தெரிகணை**
**மதனனது**
**எழில்உடன் பொடிபட எரிதரு நுதலினை**
**அருவரை அடிஎழ முடுகிய அவுணனது**
**ஒருபது முடிஇற ஒருவிரல் நிறுவினை"**

இச்செய்யுளிலோ 'மதனனது', 'அவுணனது', 'நுதலினை', 'நிறுவினை' எனும் அடியிறுதி ஒலியியைபுகள் இடம்பெறுகின்றன.

பதினன்காம் நூற்றாண்டுக்குப் பின்னர் பல இசைப்பாடல்களிலே அடியிறுதி எதுகை பெருமளவு இடம்பெறலாயிற்று. சித்தர் பாடல்களிலே பல எடுத்துக்காட்டுகளைக் காணலாம்.


கடுவெளிச் சித்தருடைய:

**நந்த வனத்திலோ ராண்டி - அவன்**
**நாலாறு மாதமாய்க் குயவனை வேண்டிக்**
**கொண்டுவந் தானொரு தோண்டி -**
**மெத்தக்**
**கூத்தாடிக் கூத்தாடிப் போட்டுடைத்**
**தாண்டி**

என்னும் பாடலிலே 'ஆண்டி', 'வேண்டி', 'தோண்டி', 'போட்டுடைத் தாண்டி' என்னும் ஒலியியைபு எதுகை இடம்பெறுகின்றது. அவருடைய பாடல்கள் எல்லாமே இப்படியான அடியிறுதி எதுகை கொண்டனவாயமைகின்றன.

பள்ளு, குறவஞ்சி போன்ற இசை, நாடகப் பண்புடைய இலக்கிய வடிவங்கள் பதினைந்தாம் நூற்றாண்டுக்குப் பின்னர் தோன்றுகின்றன. குமரகுருபரருடைய மீனாட்சியம்மை குறம், முக்கூடற்பள்ளு, திருக்குற்றாலக் குறவஞ்சி போன்ற இலக்கியங்களிலே பல செய்யுட்கள் அடியிறுதி எதுகை கொண்டனவாயமைந்துள்ளன.

**"கொழுங்கொடியில் விழுந்த வள்ளிக் கிழங்**
**கல்லி எடுப்போம்**
**குறிஞ்சிமலர் தெரிந்து முல்லைக் கொடியில்**
**வைத்துத் தொடுப்போம்**
**பழம்விழுந்த கொழுஞ்சாற்றின் தேறலின்**
**வாய் மடுப்போம்**
**கிம்புரியின் கொம்பெடுத்து வெம்புதினை**
**இடிப்போம்"**




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

என்னும் மீனாட்சியம்மை குறம் பாடலிலே 'எடுப்போம்', 'தொடுப் போம்', 'மடுப்போம்', 'இடிப்போம்' என்னும் ஒலியியைபு அலகுகள் இடம்பெறுகின்றன. முக்கூடற்பள்ளு நூலிலிருந்து பின்வரும் பாடல் எடுத் துக்காட்டாகத் தரப்படுகின்றது.

"தத்தும் பாய்புனல் முத்தம் அடைக்கும்
சாலைவாய்க் கன்னல் ஆலை உடைக்கும்
கத்தும் பேரிகைச் சத்தம் புடைக்கும்
கலிப்பு வேலை ஒலிப்பைத் துடைக்கும்
நித்தம் சாறயர் சித்ரம் படைக்கும்
நிதியெல் லாந்தன் பதியிற் கிடைக்கும்
மத்தம் சூடும் மதோன்மத்த ரான
மருதீசர் மருதூர் எங்கள் ஊரே"

அண்ணாமலை செட்டியாரு டைய காவடிச் சிந்துப் பாடல்க ளிலே அடியிறுதி எதுகை பெருமளவு பயின்று வந்துள்ளது. பாரதியினு டைய சிந்துப் பாடல்களும் பண்பு டையதாயமைகின்றன. பாரதியின்,

வெடிபடு மண்டத் திடிபடு தாளம்
போட - வெறும்
வெளியி லிரத்தக் களியொடு பூதம்
பாடப் - பாட்டின்
அடிபடு பொருளின் அடிபடு மொலியிற்
கூடக் - களித்
தாடுங் காளி! சாமுண்டி! கங்காளி!

என்ற 'ஊழிக்கூத்துப்' பாட்டிலும்,

காலமாம் வனத்திலண்டக் கோலமா
மரத்தின்மீது
காளிசக்தி யென்றபெயர் கொண்டு - ரீங்
காரமிட் டுலவுமொரு வண்டு - தழல்
காலும் விழி நீலவன்ன மூல அத்து
வாக்களெனும்
கால்களா றுடைய தெனக்
கண்டு - மறை
காணுமுனி வோருரைத்தார் பண்டு.

www.tamilarangam.net

என்று 'மஹாகாளியின் புகழ்' என்னும் பாட்டிலும் அடியிறுதி எதுகை அமைவதைக் காணலாம். பிற்காலத்திலே பல கவிதைகளிலே இத்தகைய செய்யுட்பண்பு இடம் பெற்றுள்ளது. மிக அண்மையில் கவிஞர் புதுவை இரத்தினதுரையினு டைய கவிதை ஒன்றில்,

"ஆலமரக் கிளையிலிங்கு ஏணையொன்று
ஆடுது
அந்தரிக்கும் பறவையொன்று சோக இசை
பாடுது
பாலமுத வாயெடுத்துப் பாடும் ஒரு
பாட்டு - என்
பல்லவிக்குச் சரணங்களை நீயெழுதிக்
காட்டு
கோணமலை ஆண்ட குளக்கோட்டனது
பேரனே
கோயிலெல்லாம் தவமிருந்து பெற்றெடுத்த
வீரனே.

'ஆடுது', 'பாடுது', 'பாட்டு', 'காட்டு', 'பேரனே', 'வீரனே' என ஈற்றடி எதுகை இடம்பெறுவதை நோக்கலாம்.

செய்யுளிலே அடிமுதல் எதுகை நீண்டகாலமாகக் காணப்படும் பண்பாகும். ஆங்கிலச் செய்யுளைத் தமிழிலே மொழிபெயர்க்கும் போது கூட இப்பண்பே மேலோங்கி நிற்கின்றது. தமிழ்ச் செய்யுளின் அடிமுதல் எதுகையாலே ஒரு நல்ல பயன்பாடு இருந்தது.

நீண்டகாலமாக எம்முடைய எழுதுகருவிகள் ஓலை - எழுத்தாணி, கல் - உளி, சீலை - துரிகை ஆகிய னவாகவே அமைந்தன. இவற்றுள் ஓலை - எழுத்தாணி மிகப் பெரிய அளவிலே பயன்படுத்தப்பட்டன. ஓலையிலே எழுதுகின்றபோது செய் யுட்களை அடிபிரித்தெல்லாம் எழுது வதில்லை. தற்போது நாம் கையா ளும் குறியீடுகளெல்லாம் ஆங்கிலக் கல்வியினாலே பெறப்பட்டவை. இன்றைய கணணினித் திரை 21 அலகுகளைக் கொள்ளுமெனில், மொழியின் அலகுகளை அறியாதவர், 21 எழுத்துக்களை அச்சிடுவது போல (சில வெளிநாட்டுத் தமிழ்க் கண ணிப் பிரசுரங்களில் இப்படி நடக் கின்றது) ஓலையில் இடமிருக்கும் வரையும் எழுதினார்கள். செய்யுளின் அடி, சொற்றொடர், சீர் போன்ற வற்றுக்கு ஏற்றபடி எழுதப்படுவ தில்லை. ஆனால், காலங்காலமாக ஓலையிலே எழுதப்பட்ட செய்யுட் களை இலகுவாக அடி, சீர்பிரித்துப் படித்துவிடுகிறார்கள். இதற்கு செய் யுளின் அடிமுதல் எதுகை ஓரளவு வாய்ப்பாக இருந்தது. ஓலையிலே பின்வருமாறு எழுதப்பட்டுள்ளது. எனக் கொண்டால்,

பொனனின சோதிபோதினினாமாநறம
பொலிவே போலதெனனுணதேனின
நீருசுவை செருசொற கவியினபம
கனனிமமாடததுமபரின
மாடேகளிபே டோடன நமமாடும
முனதுறைகணடங
கயலநினறார்

அப்பாடலின் அடியை முதலடி யின் எதுகையாக அமையும் 'ன்' மெய்யெழுத்து இரண்டாவது அடி யின் தொடக்கத்தை இனங்காணத் துணைசெய்கின்றது. எனவே,

பொன்னின் சோதி போதினி னாற்றம்
பொலிவேபோல்
தென்னுண்................
கன்னிம்................
டன்னம்................"

என்னும் அடிகளைப் பிரித்தறிய அடிமுதல் எதுகை பயன்படுகிறது. அச்சியந்திரம் வந்த பின்னர் அடி பிரித்து அச்சிடக்கூடிய வாய்ப்பு ஏற் பட்ட போதிலும் அடிமுதல் எதுகை அமைத்துச் செய்யுளமைக்கும் பழக் கம் இன்றுவரையும் பின்பற்றப்படு கின்றது. புதுக்கவிதை பாடும் கவி ஞர்கள் இந்நீண்டகால மரபிலிருந்து விடுபடுவதை நாம் இன்று காணக் கூடியதாகவும் உள்ளது.

ஆங்கிலம் போன்ற மொழிகளிலே இடம்பெற்ற Rhyme (அடியிறுதிச் சொல் எதுகை) ஒட்டுமொழிகளா கிய தமிழ் (திராவிட), யப்பானிய மொழிகளிலே பெரிதும் இடம்பெறா மல் இருப்பதற்கு அம்மொழிகளின் ஒட்டமைப்பே காரணமாக அமை கின்றது.

ஆங்கில மொழிச் சொற்கள் தனித் தனியாக அமைவன. இவை அடியி றுதியிலே இயைபுபெற்று வருவதற் குப் பயன்படுத்த முடியும். ஆனால், தமிழ் போன்ற மொழிகளிலே பெரும்பாலான சொற்கள் ஒட்ட மைப்பிலேயே அமைகின்றன. இத னால் அடியிறுதிச் சொல் எதுகை, மோனைகளெல்லாம் பெரும்பாலும் தங்கியுள்ளன. யப்பானிய மொழி யிலே இதுகூட அருகியே காணப் படுகின்றது.

## புன்னகை

ஒரு புன்னகை....
அது
இதயத்தை நெருடும்.
கண்ணீர் ஓடையைப்
பெருக்கெடுத்து ஓடச் செய்யும்
ஒரு போராளியின் முகத்தில்
பூவாக மலரும்,

எண்ணியதே இல்லை!


அந்தப்புன்னகை
கத்தியை விடக் கூர்மையானது....
ரத்தத்தை விடப் பிரகாசமானது....

அந்தப் புன்னகை
ஒளி வீசிக் கொண்டிருக்கிறது.
ரத்த காட்சியின் உதடுகளில்!

- ஆந்திரக் புரட்சிக்கவிஞன்
சிவசாகர்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# பாக்கியம் மாமியும் பரமேசுவரியும்

**பாக்கியம் மாமி:** என்ன சரசு இந்த நேரத்திலை ஊருலாத்த வெளிக்கிட்டிட்டாய்... வீட்டிலை சமையல் சாப்பாடு ஒண்டுமில்லையே...

**பரமேசுவரி:** ஏனில்லை.. எல்லா அலுவலும் நடக்குது. நானொருக்கா சின்னத்தம்பி மாமாவின்ரை பெடியனைப் பாக்கவெண்டு போறன்...

**பாக்கியம் மாமி:** ஆர் வீட்டிலை சமைக்கிறது.. மனிசனே..

**பரமேசுவரி:** இல்லை மாமி... சின்னவள் வீட்டிலை நிக்கிறாள் சமைப்பாள்..

**பாக்கியம் மாமி:** ஏனடியாத்தை.. பெடிச்சி படிக்கப் போறேல்லையே...

**பரமேசுவரி:** படிப்பாலை மறிச்சுப் போட்டனணை... படிச்சு என்ன பிரயோசனம்... படிப்புக்கூடக் கூட சீதனத்திலையும் கூடக்கேக்கிறாங்கள்... பாத்திட்டு மறிச்சாச்சு..

**பாக்கியம் மாமி:** விசரி விசரி... நீ பெத்த பிள்ளையின்ரை வாழ்க்கைக்கு நீயே மண் அள்ளிப் போடுறியே... பாவி...

**பரமேசுவரி:** என்னத்துக்கெணை இப்ப என்னைத் திட்டுறாய்...

**பாக்கியம் மாமி:** பொம்பிளைப்பிள்ளையள் எண்டவுடனை ஆக கல்யாணத்தையும் சீதனத்தையும் தான் நினைக்கிறியள்...

**பரமேசுவரி:** அப்ப வேற என்னத்தை நினைக்கச் சொல்லுறாய்...

**பாக்கியம் மாமி:** ஒரு வேள்விக்கு கிடாய் வளத்த மாதிரி பொம்பிளைப் பிள்ளையளை வளத்த காலமில்லை இது... விளங்குதோ... இண்டைக்கு எங்கடை நாட்டிலை பொம்பிளப் பிள்ளையள் செய்யிற சாதனையளை வெள்ளைக்காறங்கள் பாத்து மூக்கிலை விரல் வைக்கிறாங்கள்... பொம்பிளை எண்டால் முந்தி கண்ணகியும், சீதையும் தான் ஞாபகம் வாறது. இண்டைக்கு அங்கயற்கண்ணியும் நளாயினியும் சாந்தாவும்... எண்டுதான் நினைப்பு வருது. அந்தளவுக்கு எங்கடை இனம் விழிப்படைஞ்சிட்டுது...

**பரமேசுவரி:** ஒண்டுரண்டு பேர் அதுக்கெண்டு பிறந்ததுகள் செய்யுதுகள்... எங்கடை பிள்ளையளாலை ஏலுமே?

**பாக்கியம் மாமி:** அதுகளும் உங்கட பிள்ளையள் மாதிரிப் பிறந்து வளந்ததுகள்தான்... ஆனா அதுகள் நல்லா யோசிச்சு... வைராக்கியமா தங்களை உருவாக்கிச்சுதுகள்... நீ உன்ர பெடிச்சியை படிக்கவும் விடாம சிந்திக்கவும் விடாமல் செய்யுறாய்...

**பரமேசுவரி:** படிக்கிறன் எண்டு சொல்லி... அவள் கூட்டமெண்டும்... கூத்தெண்டுமெல்லே திரியுறாள்... பாத்திட்டு 'வீட்டில் இரு' எண்டு மறிச்சுப் போட்டன்

**பாக்கியம் மாமி:** ஏன்... ஏன்... உன்ரை நடுவிலான் விடிஞ்சாப் பொழுதுபட்டா மதகிலையும் ... சந்தியிலையும்... வம்பளக்கிறான்... அவனை வீட்டிலை மறிபாப்பம்...

**பரமேசுவரி:** அவன் ஆண்பிளைப்பிள்ளையெல்லே எணை.

**பாக்கியம் மாமி:** உதுதானே நீங்கள் விடுறபிழை... பிள்ளையள் எல்லாம் ஒண்டுதான்... ஆம்பிளைப் பிள்ளையை ஒரு மாதிரியும் பொம்பிளைப் பிள்ளையை ஒரு மாதிரியும் நினைச்சு வளர்க்கப்பிடாது...

## நகைச்சுவை

**லக்ஸ்மன் கதிர்காமர்:** பீரிஸ்! எங்கட ஜனாதிபதி, யாழ் குடாநாட்டை பிடிக்க 'ஒப்பறேசன் முன்னேறிப் பாய்ச்சல்' நடவடிக்கை யென்று பெயர் சூட்டினார். ஆனால் பிரபாவின் பாய்ச்சல் வயிற்றைக் கலக்குது.

**ஜீ. எல். பீரிஸ்:** கதிர்காமர்! அது தான் புலிப் பாய்ச்சல். அடுத்த நடவடிக்கைக்கு பிரபா 'கரும்புலிப்பாய்சல்' என்ற பெயர் வைத்திருக்கிறார் என்று கேள்விப்பட்டேன்.

**லக்ஸ்மன் கதிர்காமர்:** எனக்கு ஆபத்து வந்தாலும் வரும். யுத்தத்தைக் கிளப்பி விட்டு விட்டு நான் குடும்பத்தோடு பிரித்தானியாவுக்கு போகப் போறன்.

- யோ. யூட்நிமலன்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# சொந்த மண்ணிலும் அகதிகளாய்...

'சூரியக் கதிர்' இராணுவ நடவடிக்கையால் 5 இலட்சத்திற்கு மேற்பட்ட மக்கள் இடம் பெயர்ந்து தென்மராட்சி, வடமராட்சி பகுதிகளை நோக்கி நகர்ந்துள்ளனர். தொடர்ந்தும் மக்களில் பெரும்பாலானோர் மூட்டை முடிச்சுக்களுடன் வெளியேறிக் கொண்டிருந்தனர். வலிகாமம் கிழக்கு, வலிகாமம் மேற்கு பகுதிகளில் ஏற்கனவே இடம்பெயர்ந்து நகரத்தை அண்டிய பகுதிகளில் தஞ்சமடைந்திருந்த அனைத்து மக்களும் சேர்ந்து இடம் பெயர்ந்தனர். கண்ணுக்கு எட்டிய தூரம் வரை அலை அலையென திரண்ட மக்கள் நெருக்கி அடித்த வண்ணம் சென்றனர். யாழ்நகர எல்லையில் இருந்து தென்மராட்சி வரை எங்கும் சனசமுத்திரமாகவே காணப்பட்டது. சொந்த வீடு, பொருள்கள், கால்நடைகள் யாவற்றையும் இழந்து மக்கள் தென்மராட்சியில் கட்டிடங்களுக்குள்ளும், கோயில்களுக்குள்ளும், முகாங்களுக்குள்ளும், மரங்களின் கீழும், உறவினர்கள், நண்பர்கள் வீடுகளிலும் தங்கினர்.



தென்மராட்சிப் பகுதியில் அத்தியாவசிய உணவுப் பொருள்களுக்கு பெரும் தட்டுப்பாடு நிலவத் தொடங்கியது. வலிகாமம் பகுதியில் நடைபெறும் இராணுவ நடவடிக்கையினால் பல இலட்சக்கணக்கான மக்கள் தற்காலிகமாகவே முதலில் அங்கு தங்கினர். அந்த வேளையில் மக்கள் அரிசி, மா, சீனி, பால்மா, பாண் போன்ற அத்தியாவசிய பொருள்கள் தட்டுப்பாட்டால் மிகவும் கஸ்டங்களை எதிர்நோக்கினர்.

இந்நிலையில் வலிகாமம் பகுதியில் இருந்து இடம்பெயர்ந்த மக்களில் ஆயிரக்கணக்கானோர் வன்னிப் பெருநிலப்பரப்பில் சென்று குடியேற ஆர்வம் காட்டத் தொடங்கினர். இதன்போது விடுதலைப்புலிகள் கிளாலியில் இருந்து விசேட இலவசப் படகுச் சேவைகளைப் புரிந்தனர். 50,000க்கும் அதிகமானோர் முதலில் கிளாலியில் வன்னிப் பெருநிலப்பரப்பை நோக்கி செல்வதற்காக காத்து நின்றனர். இப்பொழுது அங்கு இரண்டு இலட்சத்திற்கும் அதிகமான மக்கள் சென்றடைந்திருக்கிறார்கள். இப்படகுப் பயணங்களின் போது மக்கள் துன்பங்களை அடைய நேரிட்டது. இவர்களை தகுந்த முறையில் பாதுகாக்கும் நடவடிக்கையில் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் ஈடுபட்டது.

'சூரியக்கதிர்' இராணுவ நடவடிக்கையினால் மக்கள் இடம்பெயர்ந்து போகையில் வயோதிபர்கள் நெரிபட்டு இறக்கவும் நேர்ந்தது. அதை விடவும் மக்கள் அவ்வாறு வெளியேறிக் கொண்டிருக்கையில் - புக்காரா குண்டுவீச்சு விமானங்கள் மக்களை இலக்கு வைத்து தாக்கின. இதன்போது மக்களில் சிலர் காயப்பட்டும், கொல்லப்பட்டும் போயினர். வேட்டை நாய்களால் துரத்தப்படுவது போன்ற நிலையில் உள்ள மக்கள் மீது வானத்திலிருந்து கொடிய கழுகுகளும் சேர்ந்து தாக்கியது போன்றதான கொடுமையை மக்கள் அனுபவித்தார்கள்.

இந்த நிலைமைகளினால் இடம் பெயர்ந்த மக்களின் துன்ப துயரங்களை உணர்ந்து அவர்களது அடிப்படை வசதிகளை கவனிப்பதற்காகவும், நிவாரண நடவடிக்கைகளையும், மற்றும் சுகாதார சேவைகளையும் கவனித்துக் கொள்வதற்காகவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. சர்வதேச உதவி ஸ்தாபனங்களான சிறுவர் பாதுகாப்பு நிதியம், NORAD நிறுவனம், கேயர் இன்ரநஷனல் நிறுவனங்கள் வலிகாமப் பகுதிகளில் தமது அலுவலகங்களைத் திறந்தன. இதேவேளை பருத்தித்துறை பகுதியில் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் விசேட அலுவலகம் ஒன்றை திறப்பதற்கு ஏற்பாடுகளை மேற்கொண்டது. அகதிகளுக்கான தங்குமிட வசதி, சுகாதார வசதி என்பனவற்றை ஏற்படுத்திக் கொடுப்பதே அவர்களது முதற்பணியாக





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இருந்தது. இவ்வனைத்துச் செயற்பாடுகளையும் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் ஒருங்கமைத்துச் செயற்படுத்தி வருகின்றது. பெருந்தொகையாக அதாவது 5 லட்சத்துக்கும் அதிகமான மக்கள் அகதிகளாக இடம் பெயர்ந்து அனுபவிக்கும் துன்ப துயரநிலை குறித்து தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் பொறுப்பாளர் திரு. சு. ப. தமிழ்ச்செல்வன் ஐ. நா. பொதுச்செயலாளருக்கு விரிவான கடிதம் ஒன்றை அனுப்பியிருந்தார். யாழ் மாவட்ட பொதுசன அமைப்புக்களின் ஒன்றியமும் அகதிகள் துயர நிலை குறித்த கடிதம் ஒன்றை ஐ. நா. செயலாளர் நாயகம் கலாநிதி பூட்ரஸ் பூட்ரஸ் காலிக்கு அனுப்பியிருந்தனர்.

யாழ் குடாநாட்டில் மாரிகாலம் ஆரம்பித்திருப்பதால் மக்கள் பெருமளவு துன்பங்களை அனுபவிக்கின்றனர். உணவுப் பற்றாக்குறை வெகுவாகப் பாதித்துள்ள வேளையில் மாரிகாலம் பொதுவாகச் சுகாதாரம் சீர்கெடவும், தொற்றுநோய்கள் பரவுதற்கும் வாய்ப்புக்கள் உண்டு. இலட்சக்கணக்கான மக்கள் இடம் பெயர்ந்துள்ள இந்த நிலையில் சுகாதார சீர்கேடு என்பது அச்சுறுத்தலாக அமைந்திருந்தது. பெருமளவிலான மக்கள் அகதிகளாக இடம் பெயர்ந்த நிலை கண்டு சர்வதேச மட்டங்களில் பலபாகங்களில் இருந்தும் கவலை தெரிவிக்கப்பட்டிருந்தது. அத்தோடு ஐ. நா. பொதுச் செயலாளர் பூட்ரஸ் பூட்ரஸ் காலி இடம்பெயர்ந்த மக்களுக்கு உடனடியாக உதவ நடவடிக்கைகள் மேற்கொள்ளுமாறு உலக உதவி வழங்கும் நிறுவனங்களைக் கேட்டிருந்தார். இதையொத்த கோரிக்கையை அமெரிக்க நிர்வாகமும் விடுத்திருந்தது. இது குறித்து கருத்து வெளியிட்டுள்ள கிளின்டன் நிர்வாகம் இலங்கையில் தற்போது சண்டையினால் இடம்பெயர்ந்த மக்களுக்கு நிவாரணங்களை வழங்கும் பணியில் ஈடுபட்டுள்ள அமைப்புக்களுக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு கோரிக்கை விடுத்திருந்தது.

இவ்விடயத்தில் எழுந்த முக்கிய பிரச்சினை, இவற்றை தடுத்து நிறுத்துவதில் சந்திரிகா அரசு காட்டிய தீவிர ஆர்வமே ஆகும். வலிகாமத்தில் இருந்து இடம் பெயர்ந்தவர்களை அகதிகள் என உதவி பெற அருகதையற்றவர்கள் எனக் கூறியதோடு அவர்கள் ஒரு நாட்டின் எல்லையை விட்டு கடந்தால் மட்டுமே அகதிகளாகக் கொள்ள முடியும் எனவும் வாதாடினார். இக்கூற்றை அடியொற்றி கதிர்காமரும் தனது பங்கிற்கு நிலைமை அப்படியானது தான் என்று தனக்குப் போடும் எலும்புத் துண்டில் பாதிப்பு வராது பார்த்துக் கொண்டார்.

இந்த நிலை சந்திரிகா அரசின் இன வெறித் தோற்றத்தை அறிய உதவியது. வாழ்விடங்களை இழந்தும், மாரி மழையில் நனைந்து, சுகாதாரச் சீர்கேடுகளால் துன்புற்றும், உணவு நெருக்கடியால் அல்லலுற்றும் நிற்கும் மக்களுக்கு உதவ முன் வருபவர்களை தடுத்து நிறுத்த முயன்றது. இந்த நிலையில் தமிழர்கள் எனது நாட்டு மக்களே என சந்திரிகா அரசு கூறிக் கொள்வது ஓநாய்க் கூச்சலாக உலகின் செவிகளில் ஒலித்திருக்கக் கூடும். ★







தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# நேர்காணல்

# திரு. நா. யோகேந்திரநாதன்

## நேர்முகம்: கருணாகரன்



*சிறுகதை, நாடகம், கவிதை, விமர்சனம் என்று 1970-களில் மிகவும் அறியப்பட்ட படைப்பாளியாக விளங்கிய கிளிநொச்சி, திருவையாறைச் சேர்ந்த திரு. நா. யோகேந்திரநாதன், இடையில் நீண்டகாலம் எழுத்துத்துறையில் இருந்து ஒதுங்கி இருந்தார். பின்னர் தமிழீழ விடுதலைப் போராட்டம் உச்சக்கட்டத்தை அடைந்த 1985-ல் இருந்து தமிழரின் தேசிய இனப்போராட்டத்தின் நியாயத்தை உளமார ஏற்று அதற்கு உறுதுணையாக கலை, இலக்கியங்களில் கவனத்தைச் செலுத்தி வருகின்றார். இடதுசாரி இயக்கங்களுடன் மிகவும் ஈடுபாடுடையவராக இருந்த இவர் தமிழர்களின் உரிமைப் போராட்டத்தின்பால் ஈர்க்கப்பட்டது ஒரு வரலாற்று நிகழ்வு என்று பெருமைப்படும் வேளையில், தற்பொழுது ஈழநாதம் (வன்னிப் பதிப்பு) பிரதம ஆசிரியராக பணிபுரிந்து அதன் வளர்ச்சிக்கான மூல காரணர்களில் ஒருவராக உழைத்து வருகிறார்.*

**❋ எழுபதிலும் அதற்கு முன்னைய காலகட்டத்திலும் கலை இலக்கிய உலகில் நன்கு அறியப்பட்ட படைப்பாளியாக தங்களை இனங்காட்டியுள்ளீர்கள். அதற்கு அப்பாலும் சென்று தங்களின் தோற்றுவாயையும், தொடர்ந்து தங்கள் இளமைப்பராயத்தையும் இளைய தலைமுறையினரும் அறியத்தக்கதாகத் தாருங்கள்?**

❍ எனது தந்தையார் ஒரு அரசாங்க ஊழியராக இருந்த காரணத்தினால் எனது சிறுவயதில் அனுராதபுரத்திலும், 1958-ம் ஆண்டுக்குப் பிற்பட்ட காலம் எனது சொந்தக் கிராமமான கரணவாயிலும் வாழ வேண்டிய நிலைமை ஏற்பட்டது. எனது தந்தையார் திரு. நாராயண பிள்ளை ஒரு தொழிற்சங்கவாதியாகவும், இடதுசாரி அரசியல் நாட்டமுடையவராகவும் இருந்தார். எனது தாயார் திருமதி. இராசம்மா நிறைய வாசிக்கும் பழக்கம் உள்ளவர். இதனால் எனக்கு ஒரே நேரத்தில் அரசியலிலும், இலக்கியத்திலும் ஈடுபாடு கொள்ளக்கூடிய சூழ்நிலை ஒன்று ஏற்பட்டது. நானும் இன்னும் சில மாணவர்களுமாகச் சேர்ந்து எட்டாம் வகுப்பு படிக்கும் போது 'மாணவன்' என்று ஒரு பத்திரிகை வெளியிட்டோம். முதல் வெளியீட்டுடன் பத்திரிகை தனது ஆயுளை முடித்துக்கொண்டு விட்டது. ஏனெனில் தொலைந்து விட்டது என்று வீட்டில் பொய் கூறிவிட்டு மோதிரத்தை விற்று அடுத்த இதழை வெளியிட என்னிடமோ என் நண்பர்களிடமோ வேறு மோதிரம் இருக்கவில்லை. இச்சூழ்நிலையில் எனது கவனம் நாடகங்களின் பக்கம் திரும்பியது. எனது குரு என்று நான் பெருமையுடன் சொல்லிக் கொள்ளுமளவுக்கு இத்துறையில் திரு. எம் பெருமான் அவர்கள் எனக்கு வழிகாட்டியாகத் திகழ்ந்தார். இந்நாட்களில் எனது பாடசாலையான உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியில் 'பண்டைத்தமிழர் பண்பாட்டு நாள்' கொண்டாடியமைக்காக நானும் முன்னின்று செயற்பட்ட இன்னும் எட்டு மாணவர்களும் தண்டனைக்கு உட்பட்டது மறக்கமுடியாத அனுபவம். அந்நாட்களில் பாடசாலைக்கு நீலக் காற்சட்டை வெள்ளை சேட்டுடன்தான் செல்லவேண்டும். வேட்டி சேட்டுடன் சந்தனப் பொட்டு வைத்துப் பாடசாலைக்குச் சென்றால் தண்டனை வாங்கத்தானே வேண்டும். பின்பு எனது உயர்தர (A/L) கல்விக்காக நான் சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் சேர்ந்த பின்பு 'ஈழநாடு' பத்திரிகையுடன் தொடர்பு ஏற்பட்டது. எனது முதலாவது சிறுகதையே ஏதோ ஒரு போட்டியில் இரண்டாவது பரிசு பெற்றது. இச் சம்பவம் ஏற்படுத்திய உற்சாகத்தில் ஈழநாடு, வீரகேசரி, தமிழின்பம் போன்ற பத்திரிகைகளுக்கு சிறுகதைகளை எழுத ஆரம்பித்தேன்.

இக்காலகட்டத்தில்தான் இரு குறுநாவல்களையும் எழுதினேன். இச்சந்தர்ப்பத்தில் என்னுள் இருந்த அரசியல் ஆர்வம் செயலுருவம் பெறத்தொடங்கியது. 'கம்யூனிஸ்ட் கட்சி'யில் உறுப்பினராக இணைந்து கொண்ட நான் முதல்முறை ஏ. எல். பரீட்சையை எழுதியதுமே முழு நேர ஊழியராகப் பணியாற்ற ஆரம்பித்தேன். கம்யூனிஸ்ட் கட்சியின் (சீன சார்பு) வடபிரதேச வாலிபர் சங்கச் செயலாளராக பணியாற்றிய நான் கிளிநொச்சி மாவட்டத்தில் அரசியல் வேலை செய்வதற்காக 1966-ல் அனுப்பப்பட்டேன். இக்கால கட்டத்தில் இடம்பெற்ற தீண்டாமை ஒழிப்புப் போராட்டத்தில் தீவிரமாகப் பங்குகொண்டேன். அப்போதுதான் முதன் முதலில் கவிதை, இசைப்பாடல் ஆகிய துறைகளில் என் ஆர்வம் திரும்பியது. 1970-ம் ஆண்டு காலப்பகுதியில் ஆயுதப் போராட்டத்தின் பால் கம்யூனிஸ்ட் கட்சியை நகர்த்த நான் எடுத்த முயற்சிகளும் தயாரிப்புக்களும் என்னைப் பல பிரச்சினைகளுக்குள் தள்ளின. வெளியே பொலிஸாரின் பிரச்சினைகளுக்குள் முகங்கொடுக்க வேண்டியிருந்த அதேவேளையில் கட்சிக்குள்ளே 'அதிதீவிரவாதி' என்றும் 'நக்ஸலைட்' என்றும் முத்திரை குத்தப்பட்டு ஒதுக்கப்பட்டேன். இது என்னைக் கட்சியை விட்டு வெளியேற்றும் நிலைக்குத் தள்ளியது. 1971-லிருந்து 1981 வரையிலான காலப்பகுதியில் என் கவனம் வானொலி நாடகங்கள் எழுதுவதிலேயே கழிந்தது. 1982-ம் ஆண்டு எனக்கு 'விடுதலைப் புலிகளு'டன் ஏற்பட்ட தொடர்பு காரணமாக

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

எனது எழுத்தின் பார்வை தமிழீழத் தேசியத்தின் பால் திரும்பியது. 'ஈழமுரசு' சிறுகதைப் போட்டியில் பரிசுபெற்ற ஒரு சிறுகதையைத் தவிர வேறு எந்த ஆக்கமும் 1982 1990 காலப்பகுதிகளில் வெளிவந்ததாக நினைவில்லை. 1990-க்குப் பிற்பட்ட காலத்தில் விடுதலைப் புலிகள் கலைபண்பாட்டுக் கழகத்தில் இணைந்து பணியாற்ற ஆரம்பித்த பின்பு சிறுகதை, கட்டுரை, கவிதை, நாடகம், இசைப்பாடல்கள், வீடியோப் படத்துறை எனப் பல துறைகளிலும் ஈடுபட்டு வருகின்றேன். அது மட்டுமன்றி 'வெளிச்சம்' பத்திரிகையில் பணியாற்றுவதற்கும் 'புலிகளின் குரல்' வானொலிக்கு நிகழ்ச்சிகளைத் தயாரிக்கவும் வாய்ப்புக்கள் எனக்குக் கிடைத்தன. தற்சமயம் 'ஈழநாதம் வன்னிப் பதிப்பி'ன் பிரதம ஆசிரியராகப் பணியாற்றுகிறேன்.

❋ **ஒரு காலத்தில் எல்லோரையும் போலவே, இலங்கை ஒரு நாடு என்ற தேசியச் சூழலில் சிக்குண்டவர்களில் தாங்களும் ஒருவர். அதிலிருந்து தமிழீழத் தேசியத்தின் பால் தங்களைத் திருப்பிவிட்ட காரணிகளைத் தர முடியுமா?**

❍ ஏகாதிபத்தியம் என்றுமில்லாதவாறு தன் கரங்களை அகல விரித்துள்ளது. சுரண்டலின் பிரதான வடிவம் இன்று தேசிய ஒடுக்குமுறையாக மாற்றமடைந்துள்ளது. தேசிய இனங்களின் தனித்துவங்களையும் கலாச்சார அடிப்படைகளையும் அழிப்பதன் மூலமும், ஒரு உதிரிச் சமூகக் கட்டமைப்புக்களை உருவாக்குவதன் மூலமும் உலகில் பரந்த சந்தையை உருவாக்கி வருகின்றனர். எம்மை ஒடுக்குவதற்கான யுத்தங்களால் பெரும் ஆயுத வியாபாரத்தையும், அடக்கி எம்மைச் சீரழிப்பதனால் எமக்கு அந்நியமான பொருட்களை எம்மீது திணித்து லாபம் பெறவும் விளைகின்றனர். இதற்குப் பேரினவாதிகள் கருவியாக உபயோகப்படுத்தப்படுகின்றனர். எனவே எமது தனித்துவத்தைப் பேணி, ஆரோக்கியமான ஒரு சமூகத்தை உருவமைக்க எமக்கு ஒரு தேசம் அவசியமாகிறது. 1982-ம் ஆண்டு முதன்முதலில் நான் 'ரஞ்சன் லாலா'வைச் சந்தித்தபோது இந்நோக்கை நிறைவேற்ற வல்லமையுள்ள நேர்மையான, கட்டுப்பாடு பொருந்திய ஒரு இயக்கம் 'விடுதலைப் புலிகள்' மட்டுமே எனபதைப் புரிந்துகொண்டேன். நாம் சில புத்தகங்களையும், தத்துவங்களையும், அரசியல் பிரச்சினைகளையும் வைத்து சில விஷயங்களைக் கணிப்பிட்ட போதிலும் தேசிய விடுதலை இயக்கமும் அதற்கு விடுதலைப் புலிகள் தலைமை தாங்குவதும் ஒரு இயல்பான வரலாற்று நிகழ்வு என்பதை தொடர்ந்து நடந்த இனக்கலவரங்களும் இன ஒடுக்குமுறைகளும் நிரூபித்தன. எவ்வித குழப்பத்திற்கும் ஆட்படாமல் விடுதலைப் புலிகளின் செயற்படும் ஆதரவாளனாக மாறினேன்.

❋ **ஈழநாதம் (வன்னிப்பதிப்பு) தினசரியின் பிரதம ஆசிரியராகப் பணிபுரியும் தாங்கள் இன்று முகிழ்ந்து வரும் வன்னி இலக்கிய முயற்சிகளை இனங்கண்டு கொண்டிருப்பீர்கள். தாங்களும் ஒரு இலக்கியப் படைப்பாளி என்ற ரீதியில் இந்த இலக்கிய முயற்சிகள் பற்றித் தங்கள் கருத்துக்களை அறியவிரும்புகிறோம்?**

❍ அ. பாலமனோகரன், தாமரைச் செல்வி, விவேக், ச. முருகானந்தன், மணலாறு விஜயன், வவுனியா திலீபன், அகளங்கன் ஆகிய படைப்பாளிகள் வன்னி மண்ணில் ஏற்கனவே இனங்காணப்பட்டுள்ளனர். ஆனால் ஒரு புதிய எழுச்சியும் உழைக்கும் வர்க்கத்திற்கேயுரிய உத்வேகமும் விஷயங்களை ஆழமாகவும் அடிப்படை வரையும் பார்க்கும் துடிப்பும் கொண்ட இளைய தலைமுறையினரின் படைப்புகள் எம்மைப் பிரமிக்க வைக்கின்றன. ஈழநாதம் வன்னிப் பதிப்பு வாரமஞ்சரியின் உதயத்தின் பின்பு ஒரு புதிய எழுச்சி உருவாகியுள்ளதை அவதானிக்க முடிகின்றது. அங்கதன், செம்மலையூரான், வதனா, செ. விவேக், தயா பொன்னையா, பெரு. கணேசன், மணலாறு மங்கை, அ. முருகேசு ஆகியோரும் இன்னும் பலரும் சிறுகதைத் துறையில் நல்லதொரு எதிர்காலத்தை நோக்கி வளர்ச்சியடைந்து வருகின்றனர். இதேபோல் கவிதைத் துறையிலும் சிவஜெயா, சஞ்சயன், கவிப்பிரியா, சுதாகர், சிவாஞ்சலி போன்றோர் ஒரு புதிய வீச்சுடன் முன்வந்து கொண்டிருக்கின்றனர்.

❋ **யாழ் குடாநாட்டுக்குள் எழும்பும் இலக்கியக் குரல்கள் உலகத்தின் திசைகளைச் சென்றடைவது போல் தமிழீழத்தின் மற்றைய இடங்களில் எழுந்து வரும் கலை இலக்கியக் காற்று வெளியே வீசத்தவறுகிறது. இதற்கான காரணம் என்னவென்று நினைக்கிறீர்கள்?**

❍ ஒரு படைப்பின் காத்திரத்தன்மையை வெளிப்படுத்துவதும் அப்படைப்புக்கு ஒரு இலக்கிய அந்தஸ்தைத் தருவதும் விமர்சனங்கள்

## போராட்டமும் கல்வியும் இணைந்ததே எம் வாழ்வு

**"நாம் போராட்டத்தில் பங்கு கொள்வதன் நோக்கம் எமது இனத்தையும், கல்வியையும் எதிரியானவன் அழிப்பதைத் தடுப்பதற்காகவே இன்றைய நிலை தொடர்ந்தால் எமது கல்வியின் நிலை என்னாவது? இதற்கு ஒரு முடிவை நாம் போராடியே எடுக்க வேண்டும்" இவ்வாறு ஒரு விஞ்ஞான பீட மாணவன் தெரிவித்துள்ளார்.**

**"விடுதலைப் போராட்டமானது கல்வியை அடிப்படையாகக் கொண்டது. கல்வியும் போராட்டமும் ஒன்றோடு ஒன்று பின்னிப்பிணைந்துள்ள வாழ்க்கையில்தான் நாம் இன்று வரை வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். எதிரியானவன் எங்கோ ஒரு மூலையில் நின்று எம் இனத்தை அழிக்கும் தன் பணியைத் தொடர்ந்து கொண்டு இருக்கின்றான். ஆனால் இனியும் கை கட்டிப் பார்த்துக் கொண்டிருக்க கையாலாகாத கோழைகளா நாம்? மாணவ சமுதாயமே சற்று சிந்தியுங்கள்! எதிரியின் இந்த இன அழிப்பு நடவடிக்கைகளினால் இதுவரை எத்தனை பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், அப்பாவிப் பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளனர். இன அழிப்போடு எமது கல்வியையும் எதிரியானவன் அழிப்பதைத் தடுக்கவேண்டும். இன்றைய நிலை தொடர்ந்தால் எமது கல்வியின் நிலை என்னாவது? குறுகிய காலத்தில் எமது விடுதலையை அடைவதற்கு எமது கல்வி வளங்கள் அனைத்தையும் இன அழிப்புக்கு எதிராகப் பயன்படுத்துவோம். வாழ்வா? சாவா? என்ற நிலையில் நாம் எல்லோரும் உறுதியாகப் போராடி எமது மண்ணை மீட்கப் புறப்படுவோம் எனக் கூறி பல மருத்துவ பீடத்தைச் சேர்ந்த மாணவர்கள் இயக்கத்தில் தம்மை இணைத்துக் கொண்டிருக்கிறார்கள்" என அம் மாணவன் மேலும் தெரிவித்திருந்தார்.**

www.tamilarangam.net
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

(பேச்சளவில் என்றாலும் கூட), என்றே நான் கருதுகிறேன். யாழ் குடாநாட்டுக்குள் உள்ள எழுத்தாளர் களும், விமர்சகர்களும் தமது புகழு ரைகளையோ கண்டனங்களையோ இந்த எல்லைக்குள்ளேயே நடத்தி முடித்துவிடுகிறார்கள். குடாநாட் டுக்கு வெளியேயுள்ள எழுத்தாளர்க ளின் படைப்புக்கள் கவனத்திற்கெ டுத்துக் கொள்ளப்படுவதில்லை. இவர்களின் பார்வைகள் வெவ்வேறு திசையிலிருப்பினும் இதுவும்கூட ஒரு வித குழுமனப்பான்மையே. இன் றைய சர்வதேச, தேசிய சூழ்நிலைகள் யாழ் குடாநாட்டின் ஊடாகவே சர் வதேச வாசகர்களைச் சென்றடைய வேண்டியுள்ளது. இந்நிலையில் யாழ் குடாநாட்டில் அங்கீகாரம் பெறாத இலக்கியக்காற்று எவ்வாறு வெளியே வீசமுடியும்? எனினும் 'வெளிச்சம்' மூலம் சில குடாநாட்டுக்கு வெளியே உள்ள எழுத்தாளர்கள் வெளி அரங் கிற்கு அறிமுகப்படுத்தப்பட்டதை மறுப்பதற்கில்லை. ஆனால் பெரும ளவில் குடாநாட்டுக்கு வெளியே யுள்ள புதிய எழுச்சியை ஏற்கனவே முத்திரை குத்தப்பட்ட இலக்கியவா திகள் அங்கீகரிக்கவில்லையென்றே சொல்லவேண்டும். எப்படியிருப் பினும் எமது தேசிய விடுதலைப் போராட்டம் இப்புதிய மலர்களின் சுகந்தத்தை எட்டுத்திக்கும் கொண்டு செல்லும் என்ற நம்பிக்கை எமக்கு உண்டு.

www.tamilarangam.net

## புலிகள் பாசறை

**- கவிஞர் காசி ஆனந்தன்**

**நீல மலைகள் நிமிர்ந்து நிற்கும்!**
**காலம் வெய்யில் காலம் ஆயினும்**

**புல்லைப் போல் கருகாத பனைகள்**
**எல்லைப் புறத்தில் காவல் இயற்றும்...**

**ஈழப் புலிகள் குடி இருப்பின்**
**சூழல் அழகை சொல்லுதல் எளிதோ?**

**நெருப்பு விழியொடும் நிற்கும் புலிகள்**
**இருப்பிடம் இஃது நெருப்பிடம் கண்டீர்!**

**தோள்கள் வளரும் தோட்டம் என்பேனா?**
**ஈழம் வளரும் கருப்பை என்பேனா?**


**என்னென்பேன் யான்! என்னென்பேன் யான்!**
**பொன்னின் காலைப் பொழுதில் புலிகள்**

**நடத்தும் போரின் பயிற்சி கண்டால்**
**முடத் தமிழருக்கும் முதுகு நிமிரும்!**

**ஒப்பிலா வீரம் ஒன்றுடையார் தம்**
**இப்படை பார்த்தால் எலி புலியாகும்!**


**அடடா! இந்நாள் அஞ்சாப் புலிகள்**
**படைவாழ் பாசறை இடையான்**
**வாழ்ந்தேன்!**

**வீறுடையாரைப் பாட என் பேனா**
**பேறு பெற்றதே! பேறு பெற்றதே!**



**❋ 60-ம் ஆண்டுகளிலிருந்து கலை இலக்கியத்தின் சகல கூறுகளுடனும் தாங்கள் சம்பந்தப்பட்டுள்ளீர்கள். தங்களால் படைக்கப்பட்ட, எழுதப் பட்ட கலை இலக்கியப் படைப்புக் களை 'வெளிச்சத்துக்குக்' கூற முடி யுமா?**

❍ கலை இலக்கியத் துறையில் எனது ஈடுபாடு ஒரு நீண்ட கால கட்டத்தை உள்ளடக்கியது. எனவே சகலவற்றையும் நினைவுகூர்ந்து இங்கே கூறுவது சாத்தியமில்லை. ஆனால் சில குறிப்பிடத்தக்கவற்றை மட்டும் கூறுகிறேன். எனது முதற் சிறுகதை 'விடிவிளக்கு' மற்றும் இரு சிறுகதைப் போட்டிகளில் பரிசு பெற்றுள்ளேன். மேலும் 'தகவம்' தனது காலாண்டுத் தெரிவில் 'அவள் அக்காவாகி விட்டாள்' என்ற எனது சிறுகதையை முதலாவதாகத் தெரிவு செய்தது. கவிதைகளில் 'செத்துப் போனவர்க்கும், சாகப்போபவர்க் கும்' குறிப்பிடத்தக்கது. 'வெளிச்சத் தில்' எமது மண்ணின் பாரம்பரியங் கள் சம்பந்தமாகவும் எமது தேசிய விடுதலைப் போராட்டத்தினூடாக எமது பண்பாடுகள் காப்பாற்றப்படு வது பற்றியும் எழுதிய கட்டுரைகள் பெரும் பாராட்டைப் பெற்றுள்ளன. 1963, 1964 காலப்பகுதியில் 'ஈழநாடு' பத்திரிகையில் வெளிவந்த 'வானத் தாமரை' குறுநாவல் மிகவும் புகழ் பெற்றிருந்ததை மறக்கமுடியாது. நாட்டுக்கூத்துத் துறையில் எனது



'வெற்றிக்களத்தில் வீரவேங்கை' என்ற படைப்பு 300-க்கு மேற்பட்ட தடவை கள் மேடையேறின. நாடகத் துறை யிலும் 'கேள்விகள், கேள்விகள், கேள்விகள்', 'வியர்வைத்துளிகள்' என்பன மிகவும் மக்கள் ஆதரவைப் பெற்றன. வானொலி நாடகத் துறை யில் முப்பதுக்கு மேற்பட்ட நாடகங் களை நான் எழுதிய போதும் 'காட்டு நிலா' என்ற நாடகம் என் நெஞ்சில் என்றும் நிலைத்திருக்கும். வீடியோத்துறையில் 'சுழியோட்டம்', 'எதிர்காலம் இருளல்ல', 'சந்தனமரம்' ஆகிய படங்களைத் தயாரித்துள் ளேன். அண்மையில் வெளியான 'எல்லை கற்கள்' படத்திற்கு திரைக் கதை அமைத்து வசனம் எழுதியுள் ளேன்.

**❋ கணிசமான காலம் வெளிச்சத் தின் ஆசிரியர் குழுவில் ஒருவராகவும் வெளிச்சத்தை உருவாக்கிய கரங்க ளுக்குரியவர்களில் ஒருவராகவும் பணிபுரிந்தீர்கள். அந்த அனுபவத்தி னூடாக தமிழீழப் போராட்டத்தை கலை இலக்கியப் படைப்பாளிகள் பதிவாக்கியதில் எவ்வளவு தூரம் வெற்றி பெற்றிருக்கிறார்கள் என்ப தைக் கூறமுடியுமா?**

❍ நாம் இந்த இலக்கில் முழுமை யான வெற்றி பெற்றுவிட்டோம் என்று சொல்லமுடியாது. 'வெளிச் சம்' இந்த நோக்கத்தில் கூடிய வீதம் வெற்றியீட்டியிருந்தாலும் கூட ஏனைய சஞ்சிகைகள் இதில் ஆற்றிய பங்கு நிறைவானது என்று சொல்லி விட முடியாது. எமது பெயர்பெற்ற எழுத்தாளர்களில் பலர் மக்கள் மத்தியிலுள்ள முரண்பாடுகளையே

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

கதைக்கருவாக எடுத்தாள்கின்றனர். ஆனால், இன்று எமக்கும் எதிரிக்குமி டையேதான் பிரதான முரண்பாட் டுக் களம் விரிந்து கிடக்கிறது. இப் பிரதான முரண்பாட்டை இலக்கி யத்தின் அடிப்படையாகக் கொண் டோமானால் அதன் வீச்சில் இரண் டாம்தர முரண்பாடு தானாகவே செயலிழந்து போவதை அவதானிக் கலாம். நாம் இரண்டாம்தர முரண் பாட்டை பெரிதுபடுத்துவதனால் பிரதான முரண்பாடு மறைக்கப் படும் அபாயம் உண்டு. மேலும் தென்னிந்திய புதியவகை இலக்கியங் களின் பிரதிபலிப்பும் இங்கே விளை வதற்கான சில அறிகுறிகள் தென் படுகின்றன. 'மனிதத்தின் தேடல்' என்ற போர்வையில் விரக்தியை விதைக்கும் அத்தகைய படைப்புக்கள் எமது போராட்ட வாழ்வுக்கு ஊறு செய்பவை என்றே நான் கருதுகி றேன். ஆனால் குறிப்பிட்ட ஒன்று இரண்டு கவிஞர்கள் எவ்வாறு புதுக் கவிதையை எமது தேசவிடுதலைப் போருக்கு உரமாக்கலாம் என்பதை யும் சில புதிய எழுத்தாளர்கள் நவீன சிறுகதை வடிவத்தை எவ்வாறு சரியான திசைமார்க்கத்தில் பிரயோ கிக்கலாம் என்பதையும் நடைமுறை யில் நிரூபித்துள்ளனர். என்னும் எமது படைப்பாளிகள் எமது போராட்டத்தையும் போராட்ட வாழ்வையும் ஆழ்ந்து நோக்குவதன் மூலம் இச்சாதனையை நிறைவு செய்யமுடியும். நடன நாடகத்துறை யிலும் விரல்விட்டு எண்ணக்கூடிய ஒருசிலவற்றைத் தவிர ஏனையவை எமது மக்களின் குறைபாடுகளைக் 'கிண்டல்' செய்வதிலேயே கவனம் செலுத்துகின்றன. அல்லது கலைத்து வம் இல்லாத 'ஏ.கே. யையும் கண்ணிவெடி'களையுமே கதாநாய கர்களாகக் காட்டும் படைப்புக ளையே மேடையேற்றுகின்றன. இத் துறையில் நாம் வெகுதூரம் செல்ல வேண்டியுள்ளது. அதேவேளையில் எமது நவீன வளர்ச்சிப் போக்குகள் மக்களிலிருந்து அந்நியப்படாமல் பார்த்துக்கொள்ளவேண்டும்.

www.tamilarangam.net

**❋ இன்று புதிதாக முகிழ்ந்து வரும் நவீன கலை இலக்கிய இலக் கியங்களின் பங்கும் பணியும் பற்றி உங்கள் கணிப்பை எமக்குத் தர முடியுமா?**

❍ இதுபற்றி முன்னைய பதிலி லேயே சில விஷயங்களைக் கூறி விட்டேன். எனினும் மேலும் சில அபிப்பிராயங்களை முன்வைக்க லாம் எனக் கருதுகிறேன். உலகம் கலை இலக்கியத்துறையில் வளர்ச்சி யடையும் போது நாமும் அதற்கேற்ப வளர்ச்சியடைந்தேயாக வேண்டும். ஆனால் நவீன உலகின் யந்திரமய வாழ்வும், குடும்ப உறவுகளாலும் பாரம்பரிய மரபுகளாலும் பின்னப் பட்ட எமது வாழ்வும் வெவ்வேறா னவை. வாழ்வு எப்படியோ கலை இலக்கியமும் அவ்வாறே அமைய வேண்டும். எமது கலை, இலக்கியத் தில் பயன்படுத்தப்படும் படிமங்க ளும், குறியீடுகளும், நவீன உத்திக ளும் எமது மக்கள் மத்தியிலிருந்தே தேடியெடுக்கப்பட வேண்டும்.

# எங்களுக்கென்றொரு நாடு வேண்டும்; அதற்கு எங்களுக்கென்றொரு படைபலம் வேண்டும்

எமது மண்ணில் இன்று உள்ள நெருக்கடியான நிலைமைகள் குறித்து பலவித கோணங்களில் இருந்தும் பலரால் பலவிதமான கருத்துக்கள் முன்வைக் கப்படுகின்றன. எங்களில் அனேகமானோர் போராடத் துணியாதவர்களாக இருந்திருக்கின்றோம்; அல்லது போராட்டத்தில் பார்வையாளர்களாக நின்றிருக்கின் றோம். அல்லது எங்கள் வீடு, எங்கள் சுற்றம், எங்கள் சொத்து, சுகம் என்று சுற்றிச் சுழன்றிருக்கின்றோம். விடுதலைப்போரில் ஒரு அங்கமாக நின்று செயற் படாமலும், போராட்டம் பற்றிய தெளிவில்லாதும், எங்களது தேசிய பாதுகாப்புப் பற்றிய சிந்தனையற்றவர் களாகவும் இருந்திருக்கின்றோம். இவை போன்ற பல கருத்துக்கள் பலரால் முன்வைக்கப்படுவதைக் கேட்டி ருக்கிறோம். புலம் பெயர்ந்து வாழும் தமிழீழ மக்க ளைப் பொறுத்த வரையில் இவைபோன்ற குற்றச்சாட் டுக்கள் இன்னும் வலுத்துக் காணப்படுகின்றன. எனவே இந்த அடிப்படையில் எழும் கருத்துக்களையிட்டு கவலை கொள்ள நேரிடுவது உண்மையே. எனவே நாங்கள் எமது தேசிய பாதுகாப்பு குறித்து தீவிர செயற்பாடுகளில் உடனடியாக இறங்க வேண்டியவர் களாக உள்ளோம்.

தாயகப் பகுதிகளை எதிரியின் படையெடுப்பொன் றின்போது நாம் இழந்தோம். எமது உயிரினுமினிய உறவுகளை இழந்தோம். அகதிகளாக தேசமெங்கும் அலைந்தோம். தட்டிக் கேட்க ஒரு தாயகம் இன்றித் தவித்தோம் என்ற ஒப்பாரி வரிகளை ஓலமிட்டுக் கொண்டிருக்கப் போகிறோமா?

இங்கும் அடிபட்டு, அகதித் துன்பங்களைச் சுமந்து, அடிமையாகி குனிக் குறுகி நின்று செல்வத்தைத் தேடி எங்கள் வீடுகளை வளம்படுத்த நினைக்கிறோம். அதே வேளை அதனிலும் மேலாக எமக்கென்றொரு சொர்க் காபுரி போன்றதொரு நாடு வேணும், எங்களுக்கென் றொரு படை வேணும் என்ற சிந்தனை எம்மிடம் இல்லாது போனதுதான் கவலை. அது தான் இன்று நாம் எதிர்நோக்கியுள்ள பிரச்சினை. பிரச்சினையை நாம் விளங்கிக் கொள்வதோடு மட்டுமல்லாமல் அதற்காக உழைக்க முன் வரவும் வேண்டும். எமது மண்ணில் எமது மக்கள் இராணுவ நடவடிக்கைகளால் இன்று நேற்று மட்டும் ஓடவில்லை. இது ஒரு தொடர் கதை. ஆயினும் இம் முறை இந்த இராணுவ நடவடிக்கை குறித்து மக்களுக்கு விடுதலைப்புலிகள் முன் கூட்டியே தெரிவித்திருந்தனர். இதனால் தம் பிள்ளைச் செல்வங்களோடாவது தப்பித்துக் கொள்ள முடிந்தது.

இந்த துன்ப நிகழ்வுகள் எமக்கு ஒரு படிப்பினையை ஊட்டியிருக்க வேண்டும். எமக்கென்றொரு படைபலத் தைக் கட்டி அமைக்க வேண்டும் என்பதே அச் சிந் தனை. இனியும்கூட காலம் போகவில்லை. எங்களின் மத்தியில் இச் சிந்தனை குறித்த கருத்து வலுப்பெற வேண்டும். இல்லையேல் மிகவும் அவலமான, எதிர் காலமற்ற ஒரு சந்ததியினரை நாம் தோற்றுவித்தவர்க ளாகவும், நாடற்றவர்களாகவும் இருந்து புலம்பநேரிடும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஆனால், அந்தத் தேடலுக்கான பரப்பளவை பலர் குறுகிய வட்டத்திற்குள் நிறுத்தி விடுகின்றனர். இதன் பரப்பளவு அகலிக்கப்படவேண்டும். ஆழச்சுழியோடவும் வேண்டும். 'நுனிப்புல் மேயாமல்' மக்களின் அடிப்படை உணர்வுகளையும், விடுதலைக்கான தாகத்தையும் சரியான முறையில் இனங்கண்டு படைப்புக்கள் மூலம் மக்கள் விளங்கும் மொழியில் (முறையில்) அழகுபட நவீன உத்திகளுக்கூடாக வெளிக்கொண்டு வரவேண்டும்.

**✻ 'எல்லைக் கற்கள்' என்ற எமது வீடியோ நாடாவின் கதை வசன கர்த்தா என்ற முறையில் வேறு சில ஒளிப்படத் தயாரிப்புக்களில் உங்களுக்குப் பங்கிருப்பதாலும் தமிழீழத்தின் ஒளிப்பட வளர்ச்சி பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?**

❍ சரியான திசையில் முன்னேறி வருகிறோம் என்றே நான் கருதுகிறேன். குறிப்பாகக் 'காற்றுவெளி', 'பிஞ்சுமனம்', 'தாயகக் கனவு' என்பன ஒரு குறிப்பிட்ட தரத்தை எட்டியுள்ள அதேவேளையில் இந்திய வியாபாரப் படங்களிலிருந்து மக்களைச் சரியான ரசனையை நோக்கித் திசைதிருப்பவும் வல்லவை. எனினும் வேறு சில படங்கள் ரசிகர்களை அதிசயங்களைப் பார்த்துப் பிரமிக்கும் வெறும் பார்வையாளர்களாக மாற்றும் முறையில் அமைந்திருந்தது வரவேற்புக்குரியதல்ல. அத்துடன் 'அன்னை பூபதி', 'மேஜர் கிண்ணி' சம்பந்தப்பட்ட இரு படங்களையும் இன்னும் திறம்படச் செய்திருக்கலாம் என்ற கருத்து என் மனதிலுண்டு. அளப்பரிய இத்தியாகிகளின் வரலாறு படமாக்கப்படும் போது நிறைய ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டிருக்க வேண்டும். அவர்களுக்குரிய தனித்துவங்கள் கண்டுபிடிக்கப்பட்டிருக்க வேண்டும். சர்வதேசச் சந்தையைக் கைவசம் வைத்திருக்கும் ஆங்கிலப்படத் தயாரிப்பாளர்களே எவ்வளவு நீண்ட கால முயற்சியில் 'காந்தி' படத்தைத் தயாரித்தார்கள். எமக்கு இவை வெறும் படங்களல்ல; எமது காலத்தின் பதிவும் கூட. எனவே இப்படியான தயாரிப்புக்களை ஆழமான, நுண்ணிய ஆய்வுகளின் பின்பு மேற்கொள்வதே பொருத்தமானது. மேலும் 'இது எங்கள் தேசம்' படத்தில் அன்னை பூபதியை விட இந்திய இராணுவக் கொடுமைகளுக்கு முக்கியத்துவமளிக்கப்படுகின்றது. 'இன்னும் ஒரு நாடு' படத்தில் மேஜர் கிண்ணியின் தனித்துவத்தை விட 'சண்டைக்கே' பிரதான இடம் கொடுக்கப்பட்டுள்ளது. இவை சரியான வழிமுறையாக எனக்குப் படவில்லை.

**✻ எம்மண்ணில் பண்பாட்டு மரபில் ஆழவேரோடி நிற்கும் நாட்டாரியல் கூறுகள் தங்களின் படைப்புகள் அனைத்திலும் அநேகமாகத் தலைகாட்டி நிற்கின்றன. அதைப் பலர் அனுபவித்தும், ரசித்தும் கூறியதையும் அறிந்துள்ளோம். இதற்கான காரணியின் பின்புலத்தைச் சொல்லுங்கள்:**

❍ எனது சொந்த இடமான கரணவாயில் நான் கழித்த இளமைக் காலம் என்றைக்குமே என்னால் மறக்கப்பட முடியாதது. அங்கு நான் வாழ்ந்த காலத்தில் கிராமியக் கட்டுக்கோப்பு குலையாமலே இருந்தது. அந்த உப்புக்கடலும், சோளக்காற்றுக் காலத்தில் வெள்ளை மண்ணை அள்ளிக் கொட்டி அலங்கரிப்பதும், சமூகம் வெவ்வேறு சாதிகளாகப் பிரிந்திருந்த போதிலும், அவர்களுக்குள் நிலவிய உன்னதமான ஒரு உறவும் பாசமும் என்னுள் ஆழமான ஒரு பாதிப்பை ஏற்படுத்தியிருந்தன. அங்கு அடிக்கடி நடைபெறும் 'காத்தவராயன் கூத்து', 'பூதத்தம்பி விலாசம்' போன்ற நாட்டுக்கூத்துகளும் எங்கள் குடும்பங்களிலே உள்ள வயது முதிர்ந்தோர் பாடும் தாலாட்டுக்கள், ஒப்பாரிகளும் துன்னாலையிலிருந்து நாகர்கோவிலுக்கு விறகு கொண்டுவரச்செல்லும் பெண்கள் தலைச்சுமையுடன் வரும்போது பாடும் இனிமையான பாடல்களும் என்னை மிகவும் கவர்ந்திருக்கின்றன. இன்று அந்த வாழ்வு பெருமளவு குலைந்து போய்விட்டாலும் அந்த அனுபவிப்புக்கான ஏக்கம் இன்றும் என் நெஞ்சில் உண்டு. இதன் காரணமாகவே எனது படைப்புக்களில் நாட்டாரியலின் தாக்கம் இழையோடி வருகின்றது. மேலும் எமது இனத்தை அடையாளம் காட்டும் கூறுகளில் நாட்டாரியலும் ஒன்று. எனவே இவை மெருகூட்டப்படவும் காலமாற்றத்திற்கேற்ப வளர்த்தெடுக்கப்படவும் வேண்டும். இல்லையேல் இவை மங்கி மறைந்து அழிந்து போய்விடக்கூடிய அபாயம் உண்டு. எனது சக்திக்கேற்ற வகையில் இப்பணியை எனது படைப்புகள் மூலம், குறிப்பாக நாடகங்கள் மூலம் செய்து வருகின்றேன். ★

“புலம்பெயர் வாழ்வு கடலில் கரைந்து போன புளியாகத் தடயமற்றுப் போய்விடுமா?”

ஆங்காங்கு பெருமூச்சுக்களாகக் கிளம்பிக்கொண்டிருந்த இக்கோஷம் இப்போது பெருங்காற்றாகி, வேரில்லாத புலம்பெயர் சமுதாய மரங்களின் மீது உக்கிரமாக மோதிக்கொண்டிருக்கக் காண்கிறோம்.



தாய்நாட்டை விட்டு நீங்குவதற்கு முன்பே பலமான சிந்தனைக்கு உட்படுத்தியிருக்க வேண்டிய ஒரு விடயத்தை வெளிநாடுகளில் இருப்புக்கொண்ட பின்பாக வாழ்வுக்குள் வைத்து அவலப்படுவது காலந்தப்பிய துயரமாகவே தெரிகிறது.

ஒரு சிந்தனை சரியான நேரத்தில் வெளிப்பட்டால் அதற்குப் பெயர் அறிவு. அதுவே தாமதமாக வந்தால் சுடலைஞானமாகிவிடுகிறது. சுடலைஞானம் என்பது எல்லோர் தலைகளிலும் உதிக்கவல்லது. ஆனால், ஞானம் அப்படிப்பட்டதல்ல. சரியான பாதை; அதில் நம்பிக்கை; அதேநேரத்தில் கடின உழைப்பு இவர்களைத் தன்னகத்தே கொண்டியங்கும் ஞானமே அறிவின் சிகரம்.

உரியநேரத்தில் உருவாகும் அறிவிற்கே திசைமாறிய வாழ்வை சரியான தடத்திற்கு திருப்பும் வல்லமை உள்ளது. இது ஓர் இரகசியமாகும். வெற்றிபெற்றவர்களின் வாழ்க்கை ஏடுகளிலெல்லாம் இதை மிக அழகாக வாசிக்க முடியும். ஆயினும் இவற்றை மனிதர்களுக்கு விளங்கக்கூடிய மொழியில், பூமிப்புத்தகத்தின் மீது ஓடும் நதிகளாக வரைந்து சென்றுள்ளது இயற்கை. எப்போதுமே தடைகளைத் தாண்டி இலக்கை அடைவனவே நதிகள். ஆகவேதான் தடை தாண்டி ஓடும் வாழ்வுக்கும், “வாழ்க்கைநதி” என்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

**இயற்கையும் புலம்பெயர் வாழ்வும் - 2**

www.tamilarangam.net

# நதிகள் சொல்லும் பாடம்

**கே. எஸ். துரை**

பது சிறப்புப் பெயராயிற்று.

இன்று தமிழீழத்தில் மட்டும் நமது மக்கள் நிலைபெறவில்லை. ஐரோப்பா, ஆசியா, அமெரிக்கா, அவுஸ்திரேலியா எனப் பலவாறு கண்டப்பட்டுக் கிடக்கிறார்கள். இப்படியாகப் பிரிந்துபோன சமூகத்தைக் கூறுபடுத்திக் காணும்போதே எண்ணங்களில் நாற்றமெடுக்கிறது. வாழ்வு விரக்தியும், வரட்சியுமாக விஞ்சி நின்று விடுகிறது. புலம்பெயர் மக்களையும், தாயகத்தோடு சேர்த்து ஒரே நதியாக இணைவுபடுத்துவதன் மூலமே தேசந் தொலைந்த தலைமுறையொன்று உருவாகாது தடை போடலாம். தாயகமாம் தமிழீழம் தலைமை நதியினால், ஒவ்வோர் புலம்பெயர் நாடுகளின் மக்கள் குழுக்களும் அதன் ஒவ்வொரு கிளை நதிகளாக மாறிப் புதுவலு சேர்க்க வேண்டும்.

இலட்சியத்தை நோக்கி, உறுதியுடன் ஓடும் தலைமை நதியுடன் புதிது புதிதாய் ஊற்றெடுக்கும் கிளை நதிகள் தம்மைத் தயங்காது இணைத்துக் கொள்வதே இயற்கை. புது வெள்ளமும், புதிய சங்கமுமே ஒரு நதியின் வேகத்தை மேலும் மேலும் விரைவுபடுத்தும்.

வெளிநாடுகளில் நாம் பெறும் வளம் தரும் ஆற்றல்களை தாய் நதிக்குப் பலம் சேர்க்கும் வகையில் பாயவிட்டால் புலம்பெயர் வாழ்வு சுடர்மை பெற வேறென்ன வேண்டும்? போர் ஆபத்தாக இருக்கலாம்; மாபெரும் ஆறுகள் எல்லாம் அபாயம் நிறைந்த பாதைகளால் தான் பயணம் செய்கின்றன. ஆபத்துக்களை வென்றே அவை இறுதி இலட்சியத்தையும் அடைகின்றன.

மேலிருந்து பார்க்கும் போது கிளைகளைக் கொண்ட நதி முக்கோண வடிவில் தோற்றம் காட்டும். வரைபடமின்றி உலகத்தைச் சுற்றி வரும் பறவைகளும் நதிகளின் அமைப்பிலேயே முக்கோண வடிவமெடுத்துப் பறந்து செல்வதைக் காணலாம். வானில் கிளைபரப்பி, பூமியைக் குடைந்து, வேரோடும் மரங்களின் கிளைகளின் கிளைகளும், வேர்களும் நதிகள் போலவே முக்கோண வடிவில் அமைதல் காண்க.

இயற்கையிடமிருந்து இரவல் வாங்கிய இந்த அறிவின் துணையோடு தான் மனிதன் வடிகால்களை அமைத்தான். விஞ்ஞான உபகரணங்களுக்குள் நதிகளின் வடிவில் மின்னோட்டத்தைப் பாய்ச்சி அற்புதமாக இயங்க வைத்தான். இப்படியொரு மூலச் சூத்திரத்தாலேயே நமது நரம்பு மண்டலமும் வடிவமைக்கப் பட்டிருப்பதையும், உயிரினங்கள் உருவாக்கப்பட்டிருப்பதை



யும் ஏனோ நிறையப்பேர் மனங் கொள்வதில்லை. இவைகளைப் புரிந்துகொள்ள முடியும். இது விதி. இதற்குப் புலம்பெயர் வாழ்வு மட்டும் விதிவிலக்கானதல்ல.

இதுவரை உலகத்தில் செய்து முடிக்கப்பட்ட அனைத்துக் காரியங்களுமே, முதலில் செய்ய முடியாதென்று கருதப்பட்டவை தான். அவை எப்படிச் செய்யப்பட்டன என்பதைப் புரிந்துகொள்ளும் போதே, மனிதன் தனது எண்ணற்ற ஆற்றல்களையும் அளந்து விடுகிறான். "மூன்று பேர் ஒருவருக்கு ஒருவர் உதவி செய்தால் அவர்களால் ஆறுபேர் சுமக்கக்கூடிய பாரத்தைச் சுமக்க முடியும்" என்பது பழைய மொழி. ஆனால் அண்மைத் தரவுகளோ மனித பலத்தை மேலும் மேலும் அதிகரித்துக் காட்டுகின்றன. தாய் நதியும் கிளை நதியும் இணைந்து நுட்பமாக உருவாக்கிக் கொள்ளும் பெருவிசையைப் போல, மனிதனும் தனது தசைநார்கள் அனைத்தையும் ஒரே விசையில் இயக்கினால் அவனால் 25 தொன் எடையுள்ள பொருளை ஒரே மூச்சில் தூக்கிவிட முடியுமென்றும் கூறுகிறது. நமது தேசத்தை விடுவிக்க நமது சக்தியே போதுமென்பதற்கு இதைவிட வேறென்ன சான்று வேண்டும்?

தமிழீழத்தை அமைப்பதற்கு வாய்ப்பாக என்றோ ஈழத்தை இந்தியாவிடமிருந்து பிரித்தெடுத்து விட்டது கடல். பாக்குநீரிணை வடிவில் இயற்கை அந்தச் செய்தியை எமக்காகவே எழுதி வைத்து விட்டு, தமிழீழ விடுதலைக்காகக் காத்திருக்கிறது. நாமோ கடல்கள் சொல்வதையும் படிப்பதில்லை; நதிகள் சொல்வதையும் பார்ப்பதில்லை. காலந்தப்பிய சிந்தனைகளின் அலைக்கழிவிலும், அச்சத்திலும் கழிந்து போகிறது நமது வாழ்வு.

புலம்பெயர் சமூகத்தையும், இரண்டாவது தலைமுறையான குழந்தைகளையும் தாய் நதியின் இலட்சியத்தில் சங்கமிக்கும் கிளைகளாக வளர்ந்தெடுக்கத் தவறுவோமாயின் அதனால் பாதிக்கப்படப் போவது நமது பேரக் குழந்தைகளே! தாய் நதியோடு தொடர்பில்லாத கிளை நதிகளைக் குளம், குட்டைகள், அடர்சேறுகளாகத் தனிமைப்படுத்திக் காட்டுவதன் மூலம், ஆங்காங்கே எச்சரிக்கை விளக்குகளை ஏற்றி வைத்திருக்கிறது இயற்கை.


ஓய்வில்லாது அலைகளை இயக்கி, இறுதி இலக்கைத் தொட்டுவிடும் நதிகளிடம் புலம்பெயர் வாழ்வு படிப்பதற்கு நிறைய இருக்கிறது.

**(மேலும் உண்டு)**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# "அனுபவங்களின் இந்த முதிர்ச்சி நிலையில்தான் நான் இயக்கத்தை ஆரம்பித்தேன்"

www.tamilarangam.net



சிறு வயது முதல் இந்தியப் போராட்ட வரலாறு என்னைக் கவர்ந்திருந்தது. இப்போராட்டத்தில் நேதாஜி அவர்கள் கொண்டிருந்த பங்கு என்னை ஆழமாகத் தொட்டது. அந்தக் காலத்தில் நான் வீட்டில் மிகவும் கட்டுப்பாடான சூழலில்தான் வளர்ந்தேன். வெளியாரோடு கலந்து பழக எனக்கு அனுமதி இருக்கவில்லை. இளம் பெண்களைக் கண்டால் வெட்கப்படுவேன். என் தந்தையின் நல்லொழுக்கம் என்னை நெறிப்படுத்தியது. வெற்றிலை கூடப் போடமாட்டார். ஒழுக்கங்களை நான் அவரைப் பார்த்தே உருவாக்கிக் கொண்டேன். ஓர் அரச ஊழியராக, மாவட்ட நிலை அதிகாரியாக அவர் இருந்தார். என் தந்தையார் கொஞ்சமும் ஒளிவு மறைவு இல்லாதவர். நேர்மையானவர். எமது ஊர் மக்கள் இப்படிச் சொல்லிக்கொள்வார்கள்: "அந்த மனிதர் நடந்தால், அவர் காலின் கீழே உள்ள புல்லுக்குக்கூட நோகாது". ஆம் அப்படிப்பட்ட தந்தைக்கு இப்படிப்பட்ட ஒரு மகன் பிறந்தானே என்றுதான் மக்கள் பேசிக்கொண்டார்கள். அவர் கண்டிப்பானவராக இருந்தார். அதே வேளை நெஞ்சைத் தொடுகின்ற ஓர் ஆற்றலும் அவரிடம் இருந்தது. நண்பன் ஒருவனைப் போல், பக்கத்தில் உட்கார்ந்து நியாயங்களை எடுத்துச் சொல்லி, அவர் என்னை நல்வழிப் படுத்தினார்.

சுபாஷ் சந்திரபோஸின் வாழ்க்கை என்னைப் பெரிதும் கவர்ந்தது. சிறுவனாய் இருந்தபோது காந்தி அடிகளின் உண்மை-பிரமச்சாரியம் பற்றிய நூல்களைப் படித்தேன். சின்ன வயதிலேயே ஆன்மீகத்தைத் தேடிப் போய், ஈற்றில் துறவு வாழ்க்கையில் வெறுப்புற்றுத் திரும்பிய சுபாஸ் சந்திரபோஸை எனக்குப் பிடித்திருந்தது. ஆனாலும், வாழ்க்கையில் துன்பமும் தொல்லையும் சூழ்ந்த போதெல்லாம் அவர் மீண்டும் மீண்டும் ஆன்மீகத்தையே நாடினார். சுபாஷின் வாழ்க்கை மிகவும் என்னைக் கவர்ந்தது. என் நெஞ்சில் சுபாஷ் நிலைத்த மனிதனானார். அவர் ஆற்றிய சொற்பொழிவுகள் (நூல்வடிவில் வந்தவை) அப்படியே நெஞ்சில் பதிந்தன. "கடைசித் துளி இரத்தம் இருக்கும் வரை என் மண்ணுக்காக நான் போராடுவேன்" என்ற சுபாஷின் வீர உரையை எடுத்துக்காட்டாகச் சொல்லலாம். நினைவுக்கு வரும் போதெல்லாம் இந்தச் சொற்கள் என் நெஞ்சைச் சிலிர்க்க வைத்தன. அடுத்து "பகவத்சிங்கின்" வரலாறு என்னை ஆகர்சித்தது.

சுருக்கமாகச் சொன்னால், அநீதியாளர்களை மோதியவர்களின் வாழ்க்கை வரலாறுகளையே, அந்த நாட்களில் நான் சுற்றிச் சுழன்று கொண்டிருந்தேன்.

இதற்கெல்லாம் ஒரு காரணம் இருந்தது. எமது தாயகத்தில் சிங்களவர்கள் அப்போது எம்மை மிகவும் கொடுமையாக நடத்திக்கொண்டிருந்தார்கள். அக்கொடுமைகள் பற்றிய செய்திகள் அவ்வப்போது பத்திரிகைகளிலும் நூல்களிலும் வெளிவந்து கொண்டிருந்தன. ஒரு கட்டத்தில் 1958-ல் நடைபெற்ற பயங்கர தமிழர் படுகொலைகள் பற்றி நான் படிக்க நேர்ந்தது. அந்த நிகழ்ச்சிகள் எத்தனை கொடூரமானவை தெரியுமா? கோயிலில் உறங்கிக்கொண்டிருந்த பூசை செய்யும் ஒரு பிராமணரைத் தட்டி எழுப்பிய கொடிய சிங்களவர்கள் எண்ணெய் ஊற்றி எரித்துக் கொன்றார்கள். பாணந்துறை என்ற இடத்தில் இந்த நிகழ்ச்சி நடந்தது.

கடவுள் பக்தி உள்ள, சமய உணர்வுள்ள எமது மக்களின் கோயில் அர்ச்சகரையே கொன்றுவிட்டார்களே கொடியவர்கள். நாங்கள் ஏன் இவர்களைத் திருப்பித் தாக்கக் கூடாது? என்று எண்ணத் தலைப்பட்டோம். இந்த இனவெறிக் கலவரத்தில் இன்னொரு கொடுமையும் நிகழ்ந்தது. ஒன்றும் தெரியாத பிஞ்சுத் தமிழ்க் குழந்தை ஒன்றைச் சிங்கள வெறியர்கள் துடிக்கத் துடிக்க தாரில் தோய்த்துக் கொன்றார்கள். இந்நிகழ்ச்சிகள், என் நெஞ்சிலும் என் நண்பர்கள் நெஞ்சிலும் அந்தச் சின்ன வயதிலேயே நெருப்பை மூட்டிற்று. ஒன்றுமறியாத அப்பாவிகளைக் கொல்கின்றார்களே. திருப்பி நாம் ஏன் இவர்ளை ஓங்கி அடிக்கக்கூடாது? என்று எண்ணத் தொடங்கினோம்.

இந்தக் கால கட்டத்தில்தான் இந்தியப் போராட்ட வரலாறும் என் உணர்வுகளுக்கு எருவாயிற்று. ஒவ்வோர் ஆண்டும் இந்திய சுதந்திர நாளில் பத்திரிகைகளும் சஞ்சிகைகளும் இந்திய விடுதலைப் போராட்டம் பற்றிய கட்டுரைகளை வெளி

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

யிட்டு வந்தன. அவற்றைப் படிக்கும் வாய்ப்பு அப்பொழுது எனக்குக் கிடைத்தது. திருப்பூர்க் குமரனை எடுத்துக் கொள்ளுங்கள். அவனுடைய அகிம்சையிலும் ஓர் இரும்பு உறுதி இருந்தது. ஆயுதப் போரின் அனுபவங்களைப் பற்றி நான் கற்றறிந்த அதேவேளை, அகிம்சைப் போரின் ஒழுங்குணர்வாலும் கவரப்பட்டேன். இப் போராட்டங்களில் காணப்பட்ட மன உறுதியும் துன்பங்களின் நடுவில் நிற்கும் துணிச்சலும் என்னை உணர்ச்சிவசப்படுத்தின. சின்ன வயதிலேயே இத்தகைய உணர்வுகளில் தோய்ந்துதான், சிந்திக்கத் தொடங்கினேன். 'நாமும் ஆயுதப் போராட்டத்தைத் தொடங்கினால் என்ன?' நெப்போலியனின் எழுச்சி - வீரச் செயல்கள் பற்றி அன்று நான் படித்தவை இன்றும் நெஞ்சில் நிலைத்து நிற்கின்றன.

மகாபாரதத்தில் வீமன், கர்ணன் ஆகிய பாத்திரங்களைப் படித்த போது ஒரு மன நிறைவு ஏற்பட்டது. பாரதத்தில் வரும் ஒவ்வொரு கதா பாத்திரங்களை ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமாகப் பார்ப்பார்கள். தன்னிழப்புக்கு - உயிர்த் தியாகத்துக்கு ஒவ்வொரு மணித்துளியும் தயாராக இருந்தானே கர்ணன் - அவனை எனக்கு மிகவும் பிடித்திருந்தது. விவேகானந்தரின் பொன்மொழிகள் சிலவற்றைப் படித்தேன். இளைஞர் அணி ஒன்றைத் திரட்ட வேண்டும் என்ற எண்ணம் மெல்ல மெல்ல அரும்பிற்று. ஆம், அப்பொழுது எனக்கு 16 வயதுதான்.

கிருபானந்தவாரியாரின் சொற்பொழிவுகளைக் கேட்டிருக்கின்றேன். அரசியற் கூட்டங்களுக்குப் போயிருக்கிறேன். எங்களூர் மேடையில் அரங்கேறிய "சோக்கிரட்டீஸ்" போன்ற நாடகங்களைப் பார்த்திருக்கிறேன்.


இப்படித்தான் நாங்கள் உருவாகினோம். எமது வரலாற்றுப் பின்னணியே எம்மை ஆயுதபாணிகள் ஆக்கிற்று. நாங்கள் சிந்தித்தோம். ஆயுதங்கள் இன்றி நாம் வெறுங்கையோடு பாதுகாப்பற்ற நிலையில் இருப்பதால் தானே, ஆயுதங்கள் உள்ள சிங்களவர்கள் எங்களைக் கொடுமையாகத் தாக்குகின்றார்கள். நாம் ஏன் வெறுங் கைகளோடு இருக்கவேண்டும்? ஆயுதங்களை - ஆயுதங்களால் முறியடிப்போம்! ஆம்; அனுபவங்களின் இந்த முதிர்ச்சி நிலையில்தான் நான் இயக்கத்தை ஆரம்பித்தேன். ★

www.tamilarangam.net

# உணர்வெழல்

- செ. பொ. சிவனேசு

எதையெண்ணி முடங்க
நான் ஏன் கலங்க?
இழந்து போனேன் வயற்பரப்பை
ஆயினும், மண்வெட்டியை அல்ல
பறிகொடுத்தேன் கடற்பரப்பை
படகினை அல்ல
எரிக்கப்பட்டவை எனது ஆலைகளே
எனது பொறிகள் அல்ல!
எனது மூளை, எனது உணர்வு
நரம்பு, நாடி, குருதி
எல்லாவற்றுக்கும் மேலாக எனது உழைப்பு
இன்னமும் என்னவையே
ஈகம், தீரம், திடம் திரண்ட தலைமை
பின்னுக்கு குதி தள்ளாப் போர்ப்படை
இன்னமும் எனக்காகவே!
பிறகு,
எதையெண்ணி முடங்க
நான் ஏன் கலங்க?



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தபாற்காரன் வருவானா?

**"அன்பான சடலங்களே!**
**நீங்கள்தான் ஒரு காலத்தில் எனது தாயகத்தின் நம்பிக்கையாக விளங்கினீர்கள்...**
**சிதைவுறும் உங்கள் எலும்புகளின் துகள்களை என் நெற்றியில் இடுங்கள்..**
**உங்கள் குளிர்ந்த கரங்களால் எனது இதயத்தைத் தொடுங்கள்...**
**எனது காதுகளில் ஏங்கி அரற்றுங்கள்..!"**

கொள்ளு மடித்து வந்த பொட்டளத்தின் உட்புறம் இந்தக் கவிதை இருந்தது. தற்செயலாகக் கண்டு கொண்ட சின்னக் குதிரை பரியலத் தாத்தாவிற்காக வாய்விட்டுப் படித்தது.

வாசிக்கவும், கருத்துச் சொல்லவும் ஏழு பிறவிகளுக்கு முன்பே சின்னக் குதிரை வல்லமை பெற்றிருந்தது. அது மட்டுமே தெரிந்திருந்ததால் முதலாம் உலகப் போருக்குப் பின்னர் மூன்று தடவைகளுக்கு மேல் இறந்து.. பிறந்து.. இறந்து... இன்று அலைய வேண்டியதாய் போயிற்று.

கடைசியாக இறந்தபோது ஒரு அரசியல் கூட்டம் நடந்தது. அது எங்கே? எப்போது நடந்தது? என்பது நினைவில் இல்லை. அமைதிப் புறா, அகிம்சைச் சட்னி, படுகொலை விலாஸ் என்றபடி இரண்டொரு சொற்களை மட்டுமே நினைவுகளால் எட்டித்தொட முடிந்தது.

சாவதற்கு முன் ஒரு நாள் சின்னக் குதிரை அவசர அவசரமாக ஆஸ்பத்திரி போனது. அப்போது அது ஒரு மனிதன். கையில் சாப்பாட்டுப்பொதி. பாட்டி வருத்தமாய்க் கிடந்தாள்.

போகும் போது துப்பாக்கிக் கட்டைகளால் வழிமறித்தார்கள். "தேர்தல் கூட்டம் வைக்கிறோம். வந்து கைதட்டி விட்டுப்போ!" முதுகை முதுகை இடித்தனர்.

ஏற்கனவே தட்டியதில் பாதி இரேகைகள் அழிந்து போய் விட்டன. கவனம்! ரேகை இழந்த கைகளில் எதிர்காலத்தைக் காணமுடியாது! சாஸ்திரியின் ஆணை தடுத்தது. நோய்வாய்ப்பட்டிருக்கும் பாட்டிக்கும் சரியான நேரத்தில் தீனி போடவேண்டும். "இம்முறை மட்டும் போக அனுமதியுங்கள். அடுத்த தடவை கண்டிப்பாக..." இரேகைகள் தேய்ந்து போய்விடாமல் பக்குவமாய்க் கும்பிட்டதாகத்தான் ஞாபகம்.

அப்போதும் சுட்டார்கள். பற்கள் நொறுங்கி, பிடரி சிதறியது. பிறப்பதும் இறப்பதும் ஒரு சறுக்கீஸ் விளையாட்டாயிருந்தது. பிறகுதான்; யாரிடமும் அகப்படாமலிருக்கவும், தலைதெறிக்க ஓடவும் வசதிகொண்ட சின்னக் குதிரை வடிவமாகியது.

கவிதையைக் கேட்ட பரியலத் தாத்தா தேகத்தை உசுப்பினார். "தலையில்லாது திரியும் பேய்களின் பெயர் பரியலங்கள்!" என்று பாட்டி கதை சொல்லுவா. இந்தத் தாத்தாவின் தலையும் முன்னரே அரிந்தெடுக்கப்பட்டுவிட்டதால் அவருக்கும் பெயர் பரியலத் தாத்தாவாயிற்று. நன்மைக்கும், தீமைக்கும் வயிற்றால் விடைகாணும் வாழ்வு.

அன்று ஒரு விசேஷம் -

ஒரே ஒரு ஊரிலே நாளை பௌர்ணமி நிலவு வரும். அந்த நிலவில் ஒரு வழக்கிற்குத் தீர்ப்புச் சொல்லப் போகிறார்கள். வழிந்தோடும் நிலவில் இருவரும் பறந்து போய்ப் பார்ப்பதாக ஒப்பந்தம்.

வயிறு கிழித்துக் குடலை கொற கொறவென இழுத்து, சமிபாடடையாத மலங்களைப் பருக்கைகளாகப் பிசிறி, சிதழும், கொழுப்பும், இரத்தத்தில் கட்டிய நீச்சல் குளங்களுமாக... அந்த ஒரே ஊரைப்பற்றி உல்லாசப் பயணிகளுக்காக விளம்பரம் செய்திருந்தார்கள். அங்கு போக விமானக் கட்டணம் மிக மலிவாக இருந்தது. ஏனோ இருவரும் விமானத்தில் ஏறப் பயந்தனர். கடைசியில் சின்னக் குதிரையில் பரியலத் தாத்தா ஏறி உட்கார இருவரும் வானில் மிதந்து சென்றனர்.

அது இறந்தவர்களின் ஊர். பைபிளில் அதை சாத்தானின் தேசமென்று குறிப்பிட்டிருப்பதாகச் சிலர் சுட்டிக்காட்டினர். அங்கே ஒரு நரகக் குழி. நடுவில் சடலக் களிமம் பிடித்த பொல்கொட வாவிச்சேறு. அதன் அடி மூலையில் ஒரு கசாப்புக்கடைத்தெரு.

உண்மையில் இருவருமே சரியான இடத்திற்கே வந்து சேர்ந்து விட்டனர்.

கசாப்பு நீதிமன்றத்தில் எப்போதோ சுடப்பட்ட பூமகளின் வழக்கிற்குத் தான் தீர்ப்புக் கூறப்போகிறார்கள். போய்ச் சேர்ந்த போது நிறையத்



தோழர்கள் முன்வரிசையில் இருப்பது தெரிந்தது. மூலையில் இரண்டு இருக்கைகள். இருவரும் வசதியாகக் குந்திக் கொண்டனர்.

மனித எலும்புகளில் கடைந்து, மிக நுட்பமாகச் செதுக்கப்பட்ட கூண்டில், முள்ளந்தண்டால் செய்யப்பட்ட நாற்காலியில் பூமகள் அமர்த்தப்பட்டிருந்தாள். அவளின் மண்டைக் கபாலம் சிதறி, மூளைத் துண்டுகள் குருதியில் நீச்சலடித்தன..... பாவம் பூமகள் அழுகிறாள் போலும்.

சில சிற்பிகள் மண்டையோடுகளை அடுக்கி சீவுளிபோட்டு, மட்டமாக்கி படிக்கட்டுகளை வடிவமைத்திருந்தார்கள். மூட்டோடு அறுத்தெடுக்கப்பட்ட கைகள் காற்றாடிகளாகச் சுழல, அரச தரப்பு வக்கீல் குதியாளம் போட்டார். ஏடு முறிந்த சட்டப் புத்தகங்கள் காற்றில் புரண்டன.

**கே. எஸ். துரை**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சம்பவதினம் என்ன நடந்தது?

கண்கண்ட சாட்சிகள் பிதற்றல் பேர்வழிகள். நல்ல வேளையாக சில அசூலடித்த அன்பர்கள் அதை ஒரு வீடியோ படமாக்கியிருந்தனர். ஜூரர்களின் இறுதிப் பார்வைக்காக நீதிபதி அதைத் திரையிட்டார்.

வெள்ளித்திரையில் ஆரம்பமே இருட்டு...

கும்மிருட்டு -

செவிப் பறைகளின் நடுவில் பிக்கானால் கொத்தியது போல திடீரென மண்டபமே அதிர்ந்தது.

ஹெலிகள் பறந்து, விளக்குகளை எங்கும் வீசிக்கொண்டிருந்தன. தொப்பித்தலையர்கள், டிரக்குகள், முகமூடிகள், குரைக்கப் பயந்த நாய்கள், பயந்து சிறுநீர் வடிக்கும் ஆடுகள்... கொலைக்கறியின் தாளித வாசனை மூக்கைப் புரட்டியது.

சம்பந்தமில்லாது பூமகள் மட்டும் அந்த நேரம் கனவு கண்டு கொண்டிருந்தாள்.

தூய சுத்தமான, களங்கமில்லாத நீலவானில் திட்டுத்திட்டாக பஞ்சு முகில்கள் தவழ்ந்தன. ஆகாய விமானம், "ஜிவ்...." வென்று பறக்கிறது. கீழிருந்து ஆகாயத்தை நோக்கி ஒரு பட்டுக்கம்பளம் சிவப்பாக.... ஓரத்தில் மறக்காமல் தங்கநிறச் சரிகை. ஐரோப்பாவிலிருந்து புறப்பட்டு, அலைபோல ஆடி வந்து விமானத்தைத் தொடுகிறது. அதன் மீது மேள தாளம் முழங்க, மணமகன் நடந்து வந்தான். படாரென விமானத்தின் கதவுகள் திறக்க, அவளை இரு கைகளாலும் தூக்கி நிறுத்தி, தட்டிலிருந்த தாலியை மணமகன் தர்மப்பிரியன் ஆசையோடு கட்ட....

"கெட்டிமேளம்... கெட்டிமேளம்..."

"டும்! டும்!! டும்!!! சீச்சீ இதென்ன அபசுரமான கெட்டிமேளம்?" கனவுகள் புயலில் சிக்குண்டு கலைந்து போயின.

அது கெட்டிமேளமல்ல; காட்டு மாடுகள் போல இருவர் கதவுகளை ஓங்கி இடிப்பதால் பீரிட்ட ஒலி. "குய்யோ முறையோ?" என்று குடும்பமே விழித்துக்கொண்டது.

சால்வைத்துண்டும், வேஷ்டியும் கட்டியிருந்த ஒரு கிழவர் பயந்து பயந்து போய்க் கதவைத் திறந்தார். அவ்வளவுதான். இரண்டு மனித மாடுகள் மூசிக்கொண்டு உள்ளே ஓடின. கைகளில் துப்பாக்கி வேறு. அவை அவக்கென்று சின்னவள் யுவராணியின் கையைப் பிடித்திழுத்தன.

கிழவர் மன்றாடுகிறார். தகப்பன் பாத்திரம். எல்லோரும் ஓவென அலறித் துடிக்க அவை யுவராணியைத் தூக்கிச் சென்றன.

வெளியில் கருப்பாக, முடிகொட்டிய, ஒன்றரைக்கண் பிசாசொன்று நின்றது. அந்தத் தமிழ்ப் பிசாசு யுவராணியைப் பார்த்தது; கோபம் கொண்டது. உயிர் நிலையில் ஓங்கிக் காலால் எற்றியது. தான் தேடிவந்தவள் இவள் அல்ல என்று கத்தி, அடுத்தவளைப் பிடித்து வரும்படி ஆணையிட்டது. இப்போது யுவராணியைச் சுழற்றி வீசினார்கள். அவள் மண்ணில் உருண்டு.. எழுந்து.. விழுந்து.. ஓடி இருளில் தொலைந்தாள்.

"பரமண்டலத்தில் இருக்கும் எங்கள் பிதாவே! பொழுது விடிந்து விட்டால் போதும்.. பூமகள் இந்த மண்ணை விட்டு நீங்கி விடுவாள் இந்தக் கூலிப் பிசாசுகளுக்கு அஞ்சி அவள் தேசத்தை விட்டே ஓடப் போகும் கடைசிக் கணங்களும் இவையே! எங்கள் பிதாவே! எங்கள் சுதனே! எங்கள் ஜீவ ஆவியே! அந்த அபலையை நீங்கள் ஏன் வாழ விடக்கூடாது? பரலோகத்தைக் கொழுத்திய குற்றத்திற்காகவா இவள் இத் தண்டனையைப் பெறுகிறாள்?" இரவில் கண்பெற்ற ஒரு ஆந்தை, 'அவுக்! அவுக்!'கென இதைத்தான் வாய்க்குள்ளாக அதக்கி ஓலமிட்டது.

"பெண்ணே! தப்பி ஓடி விடு!" சில சிறகுகள் தறிக்கப்பட்ட வெள்ளைப் புறாக்கள் அலறியபடியே மண்ணில் சரிந்தன.

"தரதர" வெனப் பூமகளை இழுத்து வந்து கொடியவனின் எதிரில் வீசினார்கள்.

அவள் அந்த முகமூடிப் பேயின்

(தொடர்ச்சி 42-ம் பக்கம்)

## பேராளியின் பாடல்

என் சிறுவம் கரைந்த
பரம்பரை மண்ணின்
காவலனாய்க் களத்திலிருந்து
வெடியிசைகளின் லயத்திற் பின்னி
வீரியம் ததும்ப உரக்கப் பாடுவேன்!

வெயில், புயல், இருள் மழை
ஏதெனுமொரு பொழுதின்
சாவிளிம்பிலென் பயணம்!

கற்தரையில் கால் புதையக்
கனத்த சுமை சுமப்பேன்!
திசுக்களினால் ஆகித் துடித்திருக்கும்
என் இதயப்
பூ நசிக்கும் துயர் பொறுப்பேன்!
ஊனோடு உயிருருகி வழிய
ஒளி கொடுப்பேன்!

எக்கணமும்
திடுமெனப் பீறி
என்னுட் புகுந்துயிரின்
துடிப்படக்கவென்றே
ஓர் சிறிய ரவை முனையுள்,
எறிகணையுள்
அன்றிப்
பொறிவெடிகள் எதிலேனும்
சந்தடியற்றுக் காத்திருக்கும் சாவு!

இருப்பின் முழுமை பற்றி
இறப்பின் மகிமை பற்றி
அதிகம் புரியும் எனக்கு!
வையத்துள் வாழ்வாங்கு வாழ்வதாய்
உணர்கிறேன்.!
போலியிலன்றிப் பெருமையில்
மூழ்குவேன்!

அற்பங்களில் சிக்குண்டு
அங்கிங்கெனாதபடி
அர்த்தம் கொள்ளுமென் வாழ்வு!



- இளந்திரையன்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# காதலின் புதிய பரிமாணம்



இப்போதெல்லாம்
அவனை அடிக்கடி காண முடிவதில்லை
சற்றுத்தொலைவில்
வேறொரு முகாமிற்கு
மாற்றப்பட்டிருந்தான்.
என் பாதைகளை
மாற்றியும் கூட,
அவனை அடிக்கடி காண முடிவதில்லை.

முகாமின் வாசலில்
அவனது வாகனமோ
தோழர்களோ
நிற்கக்கூடும்.
எல்லாவற்றையும் தாண்டிய
தேடலாய்
என் பார்வை விரியும்.
அவனுடைய
ஒவ்வொரு அசைவும்
என்னுள்ளே மனப்பாடமாயிருக்கிறது.
கடிதங்களோ
அவனருகிலாய் உணர்த்தும்.

கடிதங்களை மீட்டலில்
பதிவுகளை வெளிக்கொணர்தலில்
காலம் நகர்த்தலாய்
கழிவுறும் நாட்கள்.

எப்போதாவது,
தெருவில்
அவசர இயக்கத்தில்
கண்டு விட நேர்கையில்,
சந்திப்பை வரவேற்பதாய்
அவன் கண்கள்
ஒரு முறை விரியும்;
மறுகணம்
ஆழ்ந்து மூடிக்கொள்ளும்.
அவனுக்குத் தெரியும்
எனக்கும் அது போதுமென்று.

-நாமகள்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# இராத்திரிப்பூச்சியின் போர்ப்பாட்டு



இராத்திரிப்பூச்சியே
என்னோடு இரு
உன் பாடலை நிறுத்தி
இரகசியமாக உணர்;
காற்றின் சருமம் நடுங்குவதை,
ஒரு கண்ணிழந்த பறவையென
இந்த இரவு திசைகெட்டுப் பரிதவிப்பதை.

இது உயிரை உசுப்பும் துயரமல்லவா?

இந்தக் கணம்
என்னோடு இரு
எந்தச் சத்தமுமின்றி
காலத்தின் சொல்கேட்டு
மிக அவதானமாக
மிக ஆக்கோரசமாகக் காவலிருப்போம்.
எதிரே, வாழைகள் நெரிபடும்
தோட்டத்தின் பின்னே
வெளியில்; புற்கள் மண்டிய வெளியில்
ஏதோ நாலுபறவைகள்
திடுமெனப் பறந்தெங்கோ சிதைய
பாழடைந்த நிழல்களாய்
பகை மூட்டமசையும்.
ஆட்களற்ற வீடுகளிலிருந்து
பரியலங்கள் உலாவுகின்ற
வாடைபடும் எல்லை இது
அழுக்கு மாலை அணிந்து பிணத்தின்
வாடையுடன்
சூரர்கள் வெறிகொண்டு வருவர்.

வாடையின் குறிப்புணர்ந்து
நீமருள்வாய்
காலம் நசுங்கி முனகுவதை
நானறிவேன்
என் பூச்சியே நீயும் உணர்
காலமும் சூழலும் நெருங்கி வர
மூழும் யுத்தம்
வெற்றி வரும் வரை யுத்தம்.

நெஞ்சுகள் கொதித்துக் கொதித்துக்
குமுறும் வெம்மையில்
நூற்றாண்டுகால அடிமைச் சாசனங்கள்
எரியுண்டு போக
இராத்திரிப் பூச்சியே
அப்போது பாடு
மருளாமல் ஆக்ரோசமாகப் பாடு
நம் நிலத்தில் முளைத்த போர்ப்பாட்டை.

- கருணாகரன்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

(39-ம் பக்கத் தொடர்ச்சி)

காலடியில் விழுந்து மன்றாடினாள். இந்தத் தேசத்தை விட்டே ஓடிவிடுவதாக அழுதாள். தன் திருமணத்திற்காக உருகினாள். தன்னுயிரை மற்றவர்களிடம் பிச்சையாகக் கேட்டு மன்றாடும் புதிய பிச்சைக்காரியானாள்.

துப்பாக்கியோடு நின்ற வடநாட்டு மசாலா ஒன்று கண்ணீருக்குள்ளும் தனது காமக் கண்களை வீசி அலப்பியது. அடுத்தடுத்து வரக்கூடிய வாய்ப்புகளுக்காக சுற்றிநின்ற எச்சில் கோப்பை மாடுகள் வீணம் சிந்தின. ஆசைப்பட்ட அவளைக் கசக்கி, மகரவீணையின் குடங்களை நொருக்கி, முறுக்கெடுக்கும் நரம்புகளின் உபாதையால் அலைக்கழிந்தான் முகமூடி.

சும்மா கிடந்தவளுக்கு மேல் சில குற்றச்சாட்டுக்கள். ஆசை... அவசரம்... காமம்... அதற்குள்ளும் பாழாய்ப் போன அரசியல்... வானம் பொறுமையிழந்து இரண்டு மேகங்களின் தலைமுடிகளைப் பற்றி, "டாண்!" என்று மோத வைத்தது.

இடிகள் உருண்டன...

திகிலாடும் கண்கள்...

"பிதாவே! சுதனே! ஒரு பாவியின் காதலை ஏற்க மறுத்த குற்றத்திற்காக அபலை இரத்தம் சிந்தவேண்டுமா? இதை நியாயப்படுத்திய பின்பும் உலகம் மானிடம் பற்றிப் பேசப் போகிறதா?" ஆந்தை மறுபடியும் அலற மழை, "பொட பொட!" வென கூரைகளில் மோதியது.

அவன் துப்பாக்கியை எடுத்தான்!

"பிளீஸ்! பிளீஸ்!!.. சுடாதே! அவள் வாழப்போகும் இளம்குருத்து. உலகத்தையே அழிப்பதை விட இது கொடுமையானது... வேண்டாம் வேண்டாம்... "சின்னக்குதிரை எழுந்து நின்று அகோரமாக மன்றாடியது. பரியலத் தாத்தாவும் வழியின்றி வயிற்றை வயிற்றை ஆட்டினார்.

பூமகள் கையெடுத்துக் கும்பிட்டாள்! கண்களை இமைகளால் இறுக்கிக் கடித்தாள். வாழ்வா? சாவா? இனி ஒரே ஒரு வினாடிதான்.

நான்கு... மூன்று... இரண்டு... ஒன்று... "படீர்!!" திரையில் மூளை சிதறி வெண்மையாக ஒழுகியது. படம் முற்றாக நின்றே போனது.

> **'ஒரு வானம்பாடி இசைக்கும் போது அதன் ஒலி காலத்தைத் தாண்டி படுவேகமாக எதிர்காலத்தை நோக்கி ஓடுவது போலத் தோன்றும். ஆனால் ஒரு நைட்டிங்லே பறவை பாடும் போது, செழுமையான சென்ற காலங்களின் நினைவுகளின் ஒத்திசைவை நமக்குக் கொடுப்பதாக இருக்கும். கவிதையும் அப்படியே'**
>
> **- டி. எஸ். லோறன்ஸ்**

"உண்மையிலையே அவள் இறந்திருக்க முடியாதல்லவா?" யாரையாவது கேட்க வேண்டும். ஆத்மம் துடிதுடித்தது. ஆனால் பூமகள் இறந்துவிட்டாள். கிழவன் வாய்விட்டு அழமட்டும் அனுமதி கேட்டதாக வரும் இறுதிக் காட்சி மட்டும் சென்சராகி விட்டது.

எல்லோரும் எல்லாவற்றையும் முடித்துக் கொண்டு தீர்ப்புக்காகக் காத்திருந்தார்கள்..

"பூமகளுக்கு ஒரு நீதி வேண்டும்!" வெளியில் யாரோ ஊர்வலம் வைத்துக் கூச்சலிடுவது கேட்டது. "ஐரோப்பியச் சந்தை! அமெரிக்கச் சந்தை! பற்றிப் பேசுவோர்கள், தயவு செய்து இதைப்பற்றியும் ஒரு வரி பேச வேண்டும்!" வேறு சிலர் கூச்சலிட்டனர்.

இடையில் ஒரு வெண்டைக்காய் எழுந்து, "பிசாசுதான் ஜனநாயகத்தைப் பின்பற்றும் முதலாவது நபர்!" என்று பழமொழி கூறியது.

"பூமகளின் கொலைக்கு யார் பொறுப்பு?"

ஒரே கூச்சல்! குழப்பம்! சாத்தானின் நகரமே முறுகிச் சூடேறியது. எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டிருந்த நீதிபதி விலா எலும்புகளால் சோடிக்கப்பட்டிருந்த கதிரையை உதைத்தபடி எழும்பினார்.

மறுபடியும் மயான அமைதி -

"அநியாயங்களைத் தட்டிக் கேட்க திராணியில்லாத பொதுமக்களே இத்தகைய கொடுமைகளுக்குப் பொறுப்பு! உண்மையில்... வாய்களைத் திறக்காதிருக்கும் சனங்களே சாத்தானின் தேசங்களைப் படைக்கிறார்கள்!" என்று உரக்கக் கத்தினார். அவர் ஏற்கனவே நாக்கு நறுக்கப்பட்ட நீதிபதியாதலால்; அந்தக் கூச்சலை ஒருவராலுமே விளங்கிக் கொள்ள முடியவில்லை.

இறுதியில் இந்த வழக்கும் செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்யப்பட்டது.

முடிவில் எல்லோருக்கும் அவரவர் கண்களை ஒற்றிக்கொள்ள அழகான கைக்குட்டைகளை மறந்துவிடாமல் கொடுத்தார்கள். சின்னக் குதிரையும் வழிந்தோடிய கண்ணீரைத் துடைத்துக்கொண்டது. பரியலத் தாத்தாவிற்குத் தான் தலையே இல்லையே? கைக்குட்டையை சின்னக் குதிரையிடமே கொடுத்து விட்டார்.

நீதிமன்று கலைந்தது.

கசாப்புக் கடைத் தெருவைத் தாண்டும் வழியில், "இப்படியாகப் பட்ட இந்தப் பூமியில் மொத்தம் எத்தனை பேர் நல்லவர்கள் என்பதையாவது நான் அறியலாமா?" தாத்தாவிடம் குதிரை கேட்டது.

"இந்த உலகத்தில் இருவர் மட்டும் நல்லவர்கள்!"

"அதில் முதலாவது நபர்..?"

"இறந்து விட்டார்!"

"இரண்டாவது நபர்..?"

"இன்னும் பிறக்கவில்லை!" பரியலத் தாத்தா கூறினார்.

"அப்படியானால் அவர் எப்போது பிறப்பார்?"

சின்னக்குதிரைதான் மறுபடியும் கேட்டது.

"மக்கள் எப்போது முன்வருகிறார்களோ? மக்கள் எப்போது பொறுப் பேற்கிறார்களோ? அப்போது!"

அதைக் கேட்டதும் குதிரையும் ஓட முடியாமல் அப்படியே நின்றது. அக்கணம் ஒரு மணி ஒலித்தது.

ஒரு தபால்காரன் தோன்றி பெரிய பார்சலைக் கையில் கொடுத்துவிட்டு மறைந்தான். அதற்குள் என்றோ தொலைந்து போன தன் தலையிருப்பதைக் கண்டு அதிசயித்தார் தாத்தா.

தலைபெற்ற தாத்தா அன்றுதான் முதல் தடவையாக உலகத்தைப் பார்த்தார். அப்போதே நிறையப் பேர் தபால்காரனுக்காகக் காத்திருப்பதையும் கண்டு கொண்டார்.

www.tamilarangam.net
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்


www.tamilarangam.net

# நினைவில் நிறைந்தவன்

## கப்டன் வேணு (சுடர்மணி)

அந்தத் துயர் மிகுந்த கொடிய நாள் -

*07-02-1995,* இரவு பத்து மணிக்கு ஐந்து நிமிடம் இருக்கையில், இரவின் நிசப்தத்தைக் குலைத்துக் கொண்டு அந்த வெடியோசை கேட்டது. 'பிப்ரி'க்காரரின்ரை (50 கலிபர்) வீட்டுப்பக்கம் தான் சத்தம் கேட்டது என்று எல்லோரும் அங்கே ஓடிப் போக, ஒரே புகை மண்டலமாக இருந்த அந்த அறைக்குள், இரத்த மும் சதையுமாய், முகமே அடையா ளம் தெரியாமல், உயிர் பிரிந்த நிலையில் குமரன், அவனுக்குப் பக் கத்தில் இரத்த வெள்ளத்தில் முன கிய படி வேணு. உடனடியாகவே



வாகனம் வரவழைக்கப்பட்டு, அதில் வேணுவைத் தூக்கி ஏற்றி மருத்துவ மனைக்கு அனுப்பினோம். போன வாகனம் சிறிது நேரத்தில் திரும்பி வந்தது; 'மருத்துவமனைக்கு போகும் வழியில் வேணு வீரமரணம்' என்ற செய்தியைச் சுமந்து கொண்டு.

வேணு! மெலிந்த உயரமான உட லமைப்பு - எந்த நேரமும் புன்சிரிப் பான முகம் - இவை தான் உன் பெயரைச் சொன்னதும் ஞாபகத் துக்கு வரும். வீட்டுக்கு ஒரே ஒரு ஆண்பிள்ளை. தாய் தந்தை உனக் குச் செல்லமாக இட்ட பெயர் வர தன். உனக்கு அடுத்ததாக ஒரு தங்கை பிறந்து சில வருடங்களில், அடுத்த டுத்து உன் அம்மாவும் அப்பாவும் கண்ணை மூட, உறவினர்களின் அரவணைப்பிலேயே வளர்ந்தாய் நீ. பிறந்த இடம் புங்குடுதீவு. ஆனால் பெற்றோரின் மறைவுக்குப் பின் நீ பலாலியில் உள்ள உனது உறவினர் வீட்டிலிருந்து கல்வி கற்றாய். பின் னர் எம் மண்ணுக்கு இந்திய இரா ணுவம் வந்ததும், மீண்டும் உனது சொந்த ஊருக்கே சென்றாய். இந் நிலையில் இந்திய இராணுவம் வெளி யேற 'இரண்டாவது ஈழப்போர்' ஆரம்பமானது. கோட்டை நோக்கி ஊர்காவற்றுறையிலிருந்து சிறீலங் காப் படைகள் முன்னேறிய போது தீவுப்பகுதி மக்கள் சொல்லொணாத் துயரங்களை எதிர்நோக்கினர். தொடர்ச்சியான இராணுவத் தாக்கு தல்களால் எம்மினிய மக்கள் பலர் கொல்லப்பட்டனர்; பெருந்தொகை யான மக்கள் அகதிகளாயினர். இந் தக் கொடுமைகள் கண்டு பொறுக்க முடியாது இன்னும் சில இளைஞர் களையும் கூட்டிக்கொண்டு, 1990-ன் இறுதிப்பகுதியில் நீ தமிழீழ விடுத லைப் புலிகளுடன் இணைந்து கொண்டாய்.

பயிற்சி முகாமில் உனக்கு இடப் பட்ட பெயர் வேணு. பயிற்சி முகா மில் பயிற்சியின் போதும் சரி, ஏனைய வேலைகளின் போதும் சரி, உனது ஆர்வமான செயற்பாடுகள் காரணமாகப் பயிற்சி முகாம் பொறுப்பாளாரான சரா அண் ணையின் நன்மதிப்பைப் பெற்றிருந் தாய். பயிற்சி முகாமில் குறும்புத் தனத்துக்கும் பெயர் பெற்றவன் நீ. அங்கு ஒவ்வொரு ஞாயிறும் நடை பெறும் நிகழ்சிகளில், எல்லோரும் ஏதாவது ஒரு நிகழ்விலாவது கட்டா யமாகப் பங்குபற்ற வேண்டும். ஆனால் நீ ஒவ்வொரு முறையும் எதாவது சாக்குப் போக்குச் சொல்லி நிகழ்ச்சி செய்யாது தப்பி விடுவாய். இதை ஒரு நாள் உன்னில் சற்றுக் 'கறள்' வைத்திருந்த ஒரு போராளி மாஸ்ரரிடம் சொல்லிவிட்டான். "இந்த முறை வேணு கட்டாயம் ஏதாவது நிகழ்ச்சியில் பங்குபற்ற வேண்டும். இல்லாவிட்டால் தண் டனை கிடைக்கும்" என்று மாஸ்ரர் சொல்லி விட்டார். உன்னைக் காட் டிக் கொடுத்த போராளி நாடகம் ஒன்றில் பொதுமகனாக நடிப்பதாக வும், அந்த நாடகத்தில் ஆமிக்கு நடிக்க ஆள் தேவை என்றும் கேள் விப்பட்ட நீ "நான் ஆமியாக நடிக் கிறேன்" என்று சொன்னாய். நாடகம் தொடங்கியது. பொதுமகனை ஆமி அடித்துத் துன்புறுத்தும் கட்டம். பிறகென்ன, நாடகத்தோடு நாடக மாகச் சிரித்துச் சிரித்து நல்ல சாத்துக் கொடுத்துவிட்டு வந்தாய்!

பயிற்சி முடிவடையும் நேரம், காரைநகர் சண்டைக்குப் போவதற் கென 'குறூப்' பிரிக்கப்பட்டது. போவதற்கு வாசிக்கப்பட்ட பெயர்க ளில் உனது பெயர் இல்லை. உடனே சரா அண்ணையிடம் போய்ச் சண்டை பிடித்தாய். "என்னை ஏன் அனுப்பேல்லை? என்னை அனுப் புங்கோ. நானும் போகப் போறேன்" என்றாய்.

"எல்லோரும் போனால் ஆர் பயிற்சி முகாமிலை நிற்கிறது? நீ நில். கட்டாயம் உன்னை அடுத்த முறை அனுப்பிறன்" என்று சரா அண்ணை சொல்ல, அரை மனதுடன் சம்மதித் தாய்.

பின்னர் ஆனையிறவுச் சண்டை தொடங்கியது. சரா அண்ணையு

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

டன் பயிற்சி முகாமில் நின்றவர்கள் 15 பேர் கூட்டிச் செல்லப்பட்டனர். அதில் நீயும் போனாய். வெற்றிலைக் கேணியிலிருந்து ஆனையிறவு நோக்கி முன்னேறிய இராணுவத்தினருட னான சமரில், உனது அணியும் பங்கு கொண்டது. நீங்கள் எல்லோரும் கூடுதலாக எஸ். எல். ஆர். துப்பாக் கியையே வைத்திருந்தீர்கள். அதனால் ஏனைய தோழர்கள் உங்களைப் பாரத்து, "இந்தியன் ஆமியில 'பரா'த் துருப்புக்கள் இருக்கு; அது மாதிரி எங்களிட்டை 'சரா'த் துருப் புக்கள் இருக்கு" என்று கேலி செய் வார்கள்.

ஆனையிறவுச் சண்டை முடிந்த தும் நீ தொடர்ந்தும் பயிற்சி முகா மிலேயே கடமையாற்றினாய். 1991-ம் ஆண்டு இறுதிப் பகுதியில், யாழ் மாவட்டத்துக்கென ஒரு 50 கலிபர் துப்பாக்கி கொடுக்கப்பட்டது. அதற் குத் தேவையென, பயிற்சி முகாமில் நின்றவர்களில் பத்துப் பேரை தமிழ்ச் செல்வன் அண்ணை எடுத்தார்; அதில் நீயும் ஒருவன். அன்றிலிருந்து உனது போராட்ட வாழ்வின் இறு திக்காலம் வரை நீ 50 கலிபர் துப் பாக்கியுடனே இருந்தாய். பயிற்சி யின் போதும், சண்டைக் களங்களி லும், வேலைகளின் போதும் உனது அணியை முன்னின்று திறம்படச் செயற்படுத்துவாய். ஆமியை வழி நடத்துவதற்கு உன்னை முன்மாதிரி யாகப் பொறுப்பாளர்கள் காட்டு மளவிற்கு, உனது செயற்பாடுகள் அமைந்திருந்தன. ஆயுதத்தின் மூலம் எதையாவது சாதிக்க வேண்டும் என்ற ஆர்வம் உன்னிடம் நிறைய இருந்தது.

ஆரம்பத்தில் லோடராக, பின்னர் உதவி ஆயுத இயக்குனராக, என்று படிப்படியாக உயர்ந்து, 1993 இன் ஆரம்பத்தில் இருந்து நீ வீரமரணம் அடையும் வரை, 50 கலிபர் அணி யின் பொறுப்பாளராக இருந்தாய். தெல்லிப்பளையைப் பிடிக்க இரா ணுவம் முன்னேறிய 'சண்டமாருதம்' சேந்தான்குளம் மீதான இராணுவ நடவடிக்கை, பண்டத்தரிப்பைப் பிடிக்கப் பகைவன் வந்த "சதுரங்கம்" குடாநாட்டைத் துண்டாட எதிரி முயன்ற "பலவேகயா2", வளலாயில் 150 காவலரண் மீது எம்மவர் மேற்கொண்ட தாக்குதல் உட்பட, யாழ். மாவட்டத்தில் இராணுவ முன்னேற்றத்திற்கு எதிரான தாக்கு தல்களிலும் இராணுவத்தின் மீது

(தொடர்ச்சி 46-ம் பக்கம்)

www.tamilarangam.net

# பத்தாயிரம் பேர் வந்தால் பலாலியில் கூட துளாவலாம்



சங்கிலி மன்னா, உன் பழைய இராணுவ வாசல் நோக்கி
சிங்களப்படைகள் வந்து கொண்டு இருக்கின்றது.
பொய்யை வெற்று வார்த்தைகளால் அலங்கரிக்க விரும்பவில்லை.

உன் கோட்டையில் இருந்த சங்கிலி வளவை
310 வருடத்திற்குப் பின்னர் எதிரி எட்டிப் பார்க்க முயலலாம்.
ஆட்பலம் அவனுக்கு அதிகம்
மந்திரி முனையும் யமுனை வீதியும் எதிரியின் கால்பட்டு
சிதறிடக்கூடும்.
மக்கள் எல்லோரும் கூடு கலைந்து தென்மராட்சியிலும் வன்னியிலுமாக
திசைக்கொன்றாய் சிதறி விட்டனர்.
நீ நெஞ்சு நிமிர்த்தி பெருமை உறும் உன் பேரன் பிரபாகரன் கலரவில்லை
இறுதி வரை போராட உறுதி எடுத்துள்ளான்.
புலிவீரர் குழையா நெஞ்சுடன் போரில் குதித்துள்ளனர்.
பட்டப் படிப்பை தூக்கி எறிந்துவிட்டு அறிவுலகம் கூட
போருக்கு புறப்பட்டு விட்டது.
இது புதிய மாற்றம்
எம் மண் புலியாகின்ற குறியீடு
பகை துரத்த படையில் வாருங்கள் என்று இளைய
தலைமுறைக்கு விண்ணப்பித்துள்ளோம்.
உன் பரம்பரையில் வீரம் செத்துவிடவில்லை
அலை அலையாக திரளுகின்றார்; நல்ல செய்திக்காக
எல்லோரும் காத்திருக்கின்றனர்.
10 ஆயிரம் பேர் வரட்டும் பலாலியை துழாவி விட்டு
அவரவர் ஊருக்கு அனைவரும் திரும்புவோம்.
சங்கிலி மன்னா நம்பிக்கையுடன் இரு. அடுத்த மடலை உனக்கு
நல்லூர் ராசதானியில் இருந்து எழுதுவேன்
அதுவரை நிறுத்துகிறேன்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# அந்தப் பருப்பு வேகாது



மக்கள் மீது எறிகணைகளை வீசிக் கொன்ற படி, அவர்கள் இடம்பெயர்ந்து அல்லல் படும்போது குண்டுகளை வீசி அழித்தபடி, பல்வேறு படைகளையும் மக்களுக்கு எதிராக ஏவி அவர்களைப் பல வகைகளிலும் கொடுமைப்படுத்தியபடி, 'இது தமிழ் மக்களுக்கு எதிரான போரல்ல' என்று அறிக்கை விடும் துணிவை சந்திரிகா அம்மையாருக்கு கொடுத்தது எது? தமிழர்கள் ஏமாளிகள்; அரசியல் சூட்சுமங்கள் தெரியாத இளிச்சவாய்கள் என்ற நினைப்பில் அப்படிச் சொன்னாரா? அல்லது சிங்கள ஆட்சியாளர்கள் எதைச் சொன்னாலும் வாயைப் பொத்திக்கொண்டு தமிழர்கள் அதைக் கேட்டுத்தான் ஆகவேண்டும் என்ற இனவாதத் திமிரில் சொன்னாலும் அதை வேதவாக்காக நம்பும் தமிழர்கள் இன்னும் உள்ளனர் என்ற நம்பிக்கையில் சொன்னாரா? இலங்கை ஒலிபரப்புக் கூட்டுஸ்தாபன தமிழ் சேவையில் நேற்றைய மாலைச் செய்தியில் சந்திரிகா அம்மையார் விடுத்த யாழ்ப்பாணப் போரின் வெற்றிப் பிரகடனம் வாசிக்கப்பட்டது. இது 'தமிழர்களுக்கு எதிரான போர் அல்ல' என்ற அவரது பொன்மொழியை மொழிபெயர்ப்பாளர்கள் உதிர்த்தபோது அதை செவிமடுத்த நடு வயதைத் தாண்டிய ஒரு தாய், 'குறுக்கால போவார் செய்யுறதையும் செய்து போட்டு நாடகமா ஆடுகிறாள்' என்று சினம் கொந்தளிக்க கூறினார். இத்தகைய கோப உணர்வை சுமந்தபடிதான் தமிழ் மக்கள் வாழ்கின்றனர்.

உச்சியில் இருந்து உள்ளங்கால் வரை ஆயுதங்களை அணிந்த படி நிற்கும் கொலைவெறி கொண்ட சிங்களப் படைகள் எமது முற்றத்தில் போரை நடத்துகின்றன. எமது வீடுகளை சொத்துக்களை அழிக்கின்றன. எமது மக்களின் உயிர்களை விழுங்குகின்றன. எமது குழந்தைகளை அனாதைகள் ஆக்குகின்றன. இவ்வளவையும் நடாத்தியபடி சிங்கள இராணுவம் எமது ஊர்களை, வீடுகளை ஆக்கிரமித்து துவசம் செய்கின்றது. இந்த ஆக்கிரமிப்பு வெற்றியைக் கண்டு உவகை கொள்ளும் சந்திரிகா அம்மையார், 'இராணுவத்தின் வெற்றி எனக்கு மகிழ்ச்சியை தருகின்றது' என்று பகிரங்கமாக அறிவித்து இந்த வெற்றி நீடிக்கவேண்டுமென்பதே எனது அவா என்று இனவெறியுடன் கூறிவிட்டு, போர் தமிழர்களுக்கு எதிரானது அல்ல என்று வெட்கமில்லாமல் பிரகடனப்படுத்தியுள்ளார். இந்த இராணுவ வெற்றியால் குடாநாட்டில் 5 லட்சம் தமிழர்கள் அகதிகளாக்கப்பட்டுள்ளனர். இவர்களுக்குப் போதிய உணவு இல்லை; மருத்துவம் இல்லை; தங்கும் இடம் இல்லை. இவ்வளவு துன்பங்களையும் அனுபவித்தபடி வாழும் தமிழ் மக்கள் மீதுதான் குண்டுத் தாக்குதல்களையும் நடாத்தி தமிழர்களைக் கொன்று தள்ளுகின்றனர். இந்த அவலத்தில் இருந்து பாதுகாப்புத்தேடியே வன்னிக்கு மக்கள் ஓடுகின்றனர். ஆனால் குடாநாட்டிற்குள் அல்லல் உறும் அகதி மக்களுக்கு உதவி செய்ய முன்வந்த வெளிநாட்டு உதவி வழங்கும் நிறுவனங்களை சந்திரிகா அரசு தடுத்து விட்டது.

அதே நேரம் உயிர்தப்பி பிழைப்பதற்கான வன்னிப் பயணத்தையும் அரசு தடை செய்து விட்டது.

இவ்வளவையும் செய்துவிட்டு, இது தமிழ் மக்களுக்கு எதிரான போர் அல்ல, பயங்கரவாதிகளுக்கு எதிரான போரே என்கிறது. யாழ்நகரை இராணுவம் கைப்பற்றி விட்டது என்ற மகிழ்ச்சியான செய்தியைக் கொண்டாட மக்களுக்கு உரிமை உண்டு என்று சந்திரிகா பெருந்தன்மையுடன் கூறி உள்ளார். தமிழர்களை அழித்து கொன்று விரட்டிவிட்டு யாழ்நகரை கைப்பற்றுவது எந்த மக்களுக்கு மகிழ்ச்சியைக் கொடுக்கும்; தமிழ் மக்களுக்கு அது மகிழ்ச்சியான செய்தியா? அப்படியானால் மக்கள் என்று சந்திரிகா யாரைக் குறிப்பிடுகின்றார்? சிங்கள மக்களையா? யாழ் நகரை இராணுவம் கைப்பற்றி விட்டது என்பது சிங்கள மக்களுக்கு மகிழ்ச்சியான செய்தியாகத் தோன்றும். சந்திரிகா அம்மையார் மனம் திறந்து உண்மையைத்தான் சொல்லுகிறார். தமிழர்களாகிய நாங்கள் தான் குழம்புகின்றோம். மக்கள் இராணுவத்தின் வெற்றியைக் கொண்டாடுகின்றார்கள். போர் பயங்கரவாதிகளுக்கு எதிராக நடக்கின்றது. வெளிநாட்டு உதவி வழங்கல் நிறுவனங்கள் பயங்கரவாதிகளுக்கு உதவி வழங்குவதை அரசு தடுத்துள்ளது. பயங்கரவாதிகள் குடாநாட்டில் இருந்து வன்னிக்கு செல்ல மக்களின் மீது அரசு தடை விதித்துள்ளது. குடாநாட்டிலும், வன்னியிலும் வாழும் பயங்கரவாதிகள் மீது மக்களின் அரசு குண்டுத்தாக்குதல் நடாத்துகின்றது. தமிழர்களை பேய்க்காட்டும் நோக்குடனான சிங்கள ஆட்சியாளர்களின் அரசியல் நாடகங்களை தமிழர் மனங்கள் மீது மேடையேற்ற முடியாது. ★

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

(42-ம் பக்கத் தொடர்ச்சி)

எம்மவர் மேற்கொண்ட வலிந்து தாக்கும் சம்பவங்களிலும் நீ உனது 50 கலிபருடன் களத்தில் நின்றாய்.

அந்த வேளையில் 27-0-93 அன்று, அந்த எதிர்பாராத சம்பவம் நிகழ்ந்தது. மாதகல் நோக்கி இராணுவம் நகருவதாகக் கிடைத்த தகவலைத் தொடர்ந்து, உனது அணியுடன் களத்துக்கு விரைந்தாய். சுழிபுரம் சந்தியைத் தாண்டி நெல்லியான் றோட்டில் உங்களது வாகனம் விரைந்து கொண்டிருக்கிறது. திடீரென ஒரு குண்டு வீச்சு விமானம் எதிர்ப்புறமிருந்து உங்களை நோக்கி வர, தொடர்ந்தும் சென்றால் வெட்டையான பகுதிக்குள் மாட்டுப்பட வேண்டி வரும் என்பதால், அருகிலிருந்த ஒழுங்கைக்குள் வாகனம் திருப்பப்படுகிறது. இருபுறமும் பனை மரங்கள் நிறைந்து நின்றதால் விமானத்தின் மீது தாக்குதல் நடத்தமுடியாத நிலை. அதே நேரம் உங்களைக் கண்டு விட்ட விமானம் குத்திப் பதிந்து, உங்களை நோக்கி வரத் தொடங்கியது. அந்த இட்டுமுட்டான நிலையிலும் அல்பேட் 50 கலிபரை உயர்த்திச் சுடத் தொடங்க, விமானம் ஏவிய ரொக்கட்டுக்கள் வாகனத்துக்கு அருகில் விழுந்து வெடித்தன: தொடர்ந்து விமானம் குண்டு வீச்சுத் தாக்குதலையும் நடத்தியது. அதில் அல்பேட்டும், பொழிலனும், உத்தமனும் வீரமரணமடைய, வேறு சில போராளிகளுடன் நீயும் காயமடைகின்றாய்.

சிறிது காலம் மருத்துவமனையில் இருந்த நீ, காயம் மாறியதும் மீண்டும் உனது அணியைப் பொறுப்பெடுத்தாய். "எந்த வேலையையும் சரியாச் செய்யவேணும். அடி வேண்டலாம், ஆனால் ஆரும் பேசினால் என்னால தாங்கேலாது" என்று அடிக்கடி சொல்வாய். ஒரு முறை 'சலூட்' அடிக்கும் முறை பற்றிச் சிறப்புத் தளபதி விளங்கப்படுத்தி விட்டு உன்னை "சலூட்" அடிக்குமாறு கூற, நீ சற்று வளைந்து நின்றபடி அடித்துக் காட்டினாய். "நிமிர்ந்து நின்று ஒழுங்கா அடியடா வேணு" என்று அவர் சொன்னதும், உனக்கு முகம் ஒரு மாதிரிப் போய் விட்டது. "அவரிட்டை ஒரு நாளும் பேச்சு வாங்கேல்லை. இதுக்குப்போய் பேச்சு வாங்கிப் போட்டேன்" என்று சொல்லிக் கவலைப்பட்டாய். பின்னர் தனிய நின்று சரியான முறையில் அடித்துப் பழகினாய்.

www.tamilarangam.net

உன்னை யாராவது மட்டம் தட்ட முயன்றால், பதிலுக்கு நகைச் சுவையாகப் பேசி ஒருவாறு சமாளித்து விடுவாய். ஒரு முறை விளான் நோக்கி இராணுவம் முன்னேறிய போது இரண்டு குண்டு வீச்சு விமானங்கள் தாக்குதல் நடத்தின. அப்போது ஒரு குண்டு வீச்சு விமானம் குத்திப்பதிந்து வர, அதற்கு நேர் மேலாக மற்ற விமானம் போய்க்கொண்டிருந்தது. அப்போது குத்தி வந்த விமானத்தை நோக்கி நீ சுட்ட ஒரு ரேசர் ரவை, அதற்குப் பக்கத்தால் சென்று மேலே பறந்து கொண்டிருந்த மற்ற விமானத்துக்கு அருகில் சென்றது. தொடர்ந்து இரு விமானங்களும் அவ்விடத்தை விட்டு அகன்று விட்டன. சண்டை முடிந்து முகாமுக்கு திரும்பி வந்ததும் அங்கு வைத்துச் சக தோழர்கள் "என்ன வேணு அண்ணை விமான எதிர்ப்பில் புதுமுறை கண்டு பிடிச்சிருக்கிறியளோ?" என்று கேட்க "ஓம் மச்சான். இது குத்துறவரையும் வெருட்டிக் குத்த ரெடி பண்ணுறவரையும் வெருட்டிக் கலைக்கிற விளையாட்டு" என்று சிரித்துக்கொண்டு கூறினாய்.

"ஏதாவது ஒன்றை நீ செய்து கொண்டிருக்கும் போது "உது சரி வராது" என்று யாராவது கூறினால் போதும், எப்படியாவது அதைச் செய்து முடித்து, முடியாதெனச் சொன்னவனுக்குக் காட்டிவிட்டுத் தான் மற்ற வேலை பார்ப்பாய். கடைசியாக அச்சுவேலியில் நின்ற பொழுது நீ முன்னுக்குப் போய் அடிப்பக்கம் வெடித்துக் கிடந்த ஒரு மீன் தொட்டியைத் தூக்கிக்கொண்டு வந்தாய். "இதைச் சரிப்படுத்திப் போட்டு மீன் வளர்க்கப் போகிறேன்." என்று நீ சொல்ல, "உது சரிவராது" என்று திரும்பி நான் சொல்ல, 'சரி நான் இதைச் செய்து காட்டுகிறேன்' என்றாய். இரண்டு நாள் எங்கையோ அலைஞ்சு திரிந்து கொஞ்சச் சீமெந்து எடுத்து வந்து அடிப்பாகத்துக்குப் பூசினாய்; 'பற்றி'யை உடைத்து அதுக்குள் இருக்கும் 'தாரை' எடுத்துக் கண்ணாடி வெடிப்புக்களுக்குப் பூசினாய். தண்ணீர் விட்டு அதற்குள் மீனை விட்டுவிட்டு, என்னைக் கூட்டிக் கொண்டு வந்து, "வடிவாப் பார், இது தான் மீன் தொட்டி இதுக்குள் ஒடித் திரியிறதுதான் மீன்" என்று சொன்னாய்.

இப்படித்தான் ஒரு நாள் கதைக்கும் போது "சரா அண்ணையோட நிண்ட ஆக்களில் அவர், தவம், றொசான், மாமா, ஈசன் மாஸ்ரர், அல்பேட், உத்தமன் எல்லோரும் வீரமரணம். ஒரு கொஞ்சப் பேர் தான் மிஞ்சி நிக்கிறம். உனக்கு முதல் நான் செத்தால் கட்டாயம் என்னைப் பற்றி எழுது' என்று சொல்ல "இப்ப யுத்தநிறுத்தம் தானே? ஒருத்தரும் சாகமாட்டம். அதைப்பற்றிப் பிறகு யோசிப்பம்" என்று சொன்னேன். ஆனால், அதையெல்லாம் பொய்யாக்கி விட்டு நீ போய் விட்டாய்.

கைதடியில், நீராவியிடியில், வஞ்சியின்குளத்தில், நீர்வேலியில் இப்படி ஒவ்வொரு வெடிவிபத்திலும் நடந்தது போலவே இம்முறையும் என்ன நடந்தது என்று சொல்வதற்குக் கூட எவருமில்லை. குமரன் ஆயுதத்தைச் சரிபார்த்துக் கொண்டிருக்க நீ சென்றிக்கு வெளிக்கிட்டாயாம்: அறைக்குள் இருவரும் மட்டும் தான் இருந்தீர்கள். குண்டின் ஆரம்ப வெடிப்பி வெடித்ததும் "என்ன என்ன? என்று குமரனைக் கேட்டாயாம்; அடுத்து குண்டு வெடித்த சத்தம் தான் கேட்டது. பதில் சொல்லக் குமரன் உயிருடன் இல்லை; மருத்துவமனைக்குப் போகும் வழியில் நீயும் போய் விட்டாய்.

அந்தச் சம்பவம் நடப்பதற்குக் கொஞ்ச நாளைக்கு முன்பு தான், "முன்னுக்குப் போவம் வா" என்று என்னைக் கூட்டிக் கொண்டு போய், இடைக்காட்டுப் பள்ளிக் கூடத்தில் ஏறி நின்று காட்டினாய். "அந்தா தெரியுது அந்தத் தென்னந் தோட்டம்... அதுக்கு மேற்குப் பக்கம் இருக்கிற கடற்கரை தான் 'பாம்பீச்' முதல் பலாலியில் இருக்கேக்கை ஒவ்வொரு ஞாயிறும் அங்கை போய் குளிக்கிறனான். அந்தக் கரை றோட்டால் கொஞ்சத்தூரம் போனா ஒரு பள்ளிக்கூடம் வரும்; அதில தான் நான் படிச்சனான். இப்ப அந்த இடமெல்லாம் ஆமி, புங்குடுதீவிலையும் ஆமி தான். இப்ப இல்லாவிட்டாலும் எண்டைக்காவது ஒரு நாள் நாங்க அங்க போவம் தானே? ஆனால் அப்ப நான் இருக்கிறேனோ தெரியாது."

இன்று நீ இல்லைத்தான். ஆனால், என்றாவது ஒரு நாள், நீ போக விரும்பிய பலாலிக்கும் புங்குடுதீவுக்கும் உனது தோழர்கள் உனது இலட்சியத்தைச் சுமந்தபடி நிச்சயம் போவார்கள்; அந்த நம்பிக்கையுடன் நிம்மதியாகத் தூங்கு! ★

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# இனிப் போருக்கான சங்கு முழங்கட்டும்




கண்களைத் திறந்து பார். குண்டுவீச்சு விமானங்கள்.
காதில் விழுவதெல்லாம் கவசவாகன இரைச்சல்கள்.
பீரங்கிப் படகிலிருந்து பீறிட்டு வரும் எறிகணைகள்.
ஆம், யுத்தத்தின் சத்தங்கள் உங்கள் வாசல் வரை வந்து விட்டன.
நித்திரைக்காக எப்படி நீங்கள் நீட்டிப்படுக்கலாம்?
அறுபதினாயிரம் தங்களின் இளைஞர்களையே கொன்ற சிங்களப்படைகள்
தங்கள் கோரப் பற்களில் குருதி வழிய இங்கு வந்துள்ளனர்.
தென் தமிழீழத்தில் எங்கள் உடன் பிறப்புக்களைக் கொன்றொழித்த
சிங்களப்படையினர் இரத்தம் வடியும் குத்தீட்டிகளுடன்
உங்கள் வாசலுக்கு வரத்துடிக்கின்றனர்.
நீங்கள் எப்படித் தூங்கிக் கிடக்கலாம்?
இது விழிகள் சிவப்பேற விழித்துக்கொள்ளும் நேரம்.
குருதிக் கலன்கள் கொதிப்பேற வேண்டிய காலம்.

வீட்டுக்கொருவராயினும் நாட்டுக்காகப் போராட வரத் தவறின்
பாட்டும் கூத்துடனும் எதிரி வந்து உங்கள் படலையைத் தட்டுவான்.

கண்ணுக்கெதிரே உங்கள் தாயை, தங்கையை, தம்பியை,
தள்ளாடும் உங்கள் பேரனை ஒருவரையும் மிச்சமின்றி ஒத்தியெடுப்பான்.
இன்னும், இனியும் கண்களை மூடிவிட்டு விழிகளைத் திறந்து பார்த்தால்
உங்கள் கைகள் கட்டப்பட்டிருக்கும்.
உங்கள் தங்கை எல்லாம் இழந்து எதிரிலே... கிடப்பாள்.
நீங்கள் குந்தியிருந்த குடியிருப்புக்கள் சின்னாபின்னமாகிக் கிடக்கும்.
உள்ள தமிழரில் பாதிப்பேர் வீதியில் கிடப்பார்கள்.
மீதிப்பேர் மூச்சுவிடவும் எதிரியிடம் அனுமதி கேட்டு நிற்பார்கள்.
இந்தக் கொடுமை ஏன் வரவேண்டும்?
சிந்தித்துப்பாருங்கள்
மானமிழந்து, வீரமிழந்து, மண்ணையிழந்து வாழும் வாழ்வு மகிமை தராது
வந்த எதிரியை வாசலில் வரவிட்டுக் குந்தியிருப்பது பெருமை தராது
தமிழனின் வேர்கள் வீரம் உறிஞ்சி விளைந்ததே தவிர,
மானமிழந்து மரத்துப் போனவை அல்ல
யானையைக் கூட அடக்கினாள் "அரியாத்தை" என்ற தமிழிச்சி
யாரிவள்? உன்பேத்தி
பூனைக்கண்ணோடு புகுந்த அந்நியனை ஓட விரட்டினான் பண்டாரவன்னியன்
யாரிவன்? உன் பூட்டன்
இந்த வீரத்தின் பாலருந்திய நீ மட்டும் எப்படி விழுந்து கிடக்கலாம்?
முந்தியெங்கள் பரம்பரையென்றால் இந்நேரம்
வேலெங்கே? வாளெங்கே? வெற்றிக்கொடியெங்கே? தேரெங்கே? என்று தேடியிருப்பார்கள்.
தாயும், மனைவியும் கொற்றவைக்கு முன்னால் கூத்தாடிவிட்டு
நெற்றியிலே திலகமிட்டு வழியனுப்பியிருப்பார்கள்.
வெற்றி அல்லது வீரச்சாவு என்று
தமிழன் களம் நோக்கிப் புறப்பட்டிருப்பான்.
இந்த வரலாறு அன்றுடன் முடிந்து விடவில்லை
எதிரிக்கு நாங்கள் இதைச் சொல்லி வைப்போம்.
தமிழனின் நாடி நரம்புகளில் ஓடுவதெல்லாம் வீரத்தின் குருதி
தமிழனின் நெஞ்சில் எரிவதெல்லாம் மானத்தின் நெருப்பு.
இந்தத் தடவை எதிரிக்கு நல்ல பாடம் புகட்டுவோம்
பிரபாகரன் காலம் பொற்காலம் என்று சரித்திரம் குறித்து வைக்கட்டும்.
தமிழன் வெற்றி பெற்ற வரலாறு விளங்கட்டும்.
இனிப் போருக்கான சங்கு முழங்கட்டும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

Printed by Vasan Litho Printer (London) - 0181-6404366